
தமிழரசு
ஏப்ரல் 2003




மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
பங்குனி – சித்திரை
ஏப்ரல் 2003
மலர் : 34 இதழ் : 19 & 20
விலை ரூ.10

இந்த இதழில்...

- நிதிநிலை அறிக்கை 2003–2004 ...... 2
- தொழில் முதலீட்டைக் கவரும் நகரமாக சென்னையை மாற்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு திட்டம் ...... 37
- தமிழகத்தில் ஒரு சிலிகான் பள்ளத்தாக்கு ...... 43
- விளையாட்டு மூலம் இளைஞர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும் ...... 45
- மக்கள் வாழ்வில் வளர்ச்சியை உருவாக்கவே உங்கள் அரசு பாடுபட்டு வருகிறது ...... 49
- பள்ளி வாசல்கள் மற்றும் தர்காகளில் அன்னதானத் திட்டம் ...... 56
- பெண்களை வலிமையானவர்களாக ஆக்கவேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை ...... 57
- சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க ஆண்டுக்கு ரூ.1000 வீதம் பணஉதவி ...... 65
- உலக ஒற்றுமை – பாரதிதாசன் கவிதை ...... 68
- பெண்மையைப் போற்றுவோம்! பெண் சிசுவதையைத் தடுப்போம்! ...... 69
- புதுயுகம் நோக்கித் தமிழகம் – குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க புரட்சிகர நடவடிக்கை ...... 72
- ஃபுளோரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பும், நலவாழ்வும் ...... 75

**முதல் பக்க அட்டையில்...**

2003–2004ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சருடன் வரும் மாண்புமிகு நிதியமைச்சர்.

**கடைசிப்பக்க அட்டையில்...**

பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளில் அன்னதானத் திட்டம்.

# நிதிநிலை அறிக்கை

# 2003-2004

தமிழக அரசின் நிதியமைச்சர்
திரு. **சி.பொன்னையன்** அவர்கள்,
2002–2003 ஆம் ஆண்டிற்கான
திருத்த மதிப்பீடுகளையும்,
2003–2004 ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்டத்தையும்,
2003ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
21 ஆம் நாளன்று
சட்டமன்றப் பேரவை முன்வைத்து
ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் 2002–2003 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டச் செயற்குறிப்பு–களையும் இந்த மாமன்றத்தின் முன் வைக்க நான் விழைகிறேன். தமிழ்நாட்டு மக்கள், நம்முடைய தொலைநோக்குப் பார்வை கொண்ட, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின்பால் கொண்டுள்ள தங்களின் அளவிலா நம்பிக்கையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டையும் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளனர். சிக்கலானதாகவும், வெல்லற்கரியதாகவும் தோன்றும் இடர்ப்பாடுகளைச் சமாளித்து சரிசெய்யவும், நாட்டிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதற்கான புதியதோர் வளர்ச்சிப் பாதையை வகுக்கவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொள்ளும் துணிவான முயற்சிகளுக்கு ஒன்றுதிரண்டு உறுதுணையாக நம்முடைய மக்கள்



நிற்கிறார்கள் என்பதை அண்மையில் நடைபெற்ற சாத்தான்குளம் இடைத்தேர்தலில் பெற்றுள்ள மகத்தான வெற்றி, மிகத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.




2. இந்த அரசு, 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து, எதிர்கொள்ள வேண்டியிருந்த பல்வேறு சிக்கலான பிரச்சினைகள் குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். எளிதில் தீர்வுகாண முடியாத, மிகக் கடுமையான, நிதிநெருக்கடி நிலையைச் சமாளிக்க வேண்டியநிலை, பருவமழை தொடர்ச்சியாகப் பொய்த்ததால் ஏற்பட்ட பரவலான வறட்சிநிலை மற்றும் காவிரி ஆற்றில், கர்நாடக அரசு நீரைத் திறந்துவிடாததால், காவிரி டெல்டா பகுதியில் பயிர்கள் கருகிவிட்டமை ஆகியவற்றை நாம் எதிர்கொள்ள நேர்ந்தது. இத்தகைய மோசமான நிலைமைகள், ஏனைய எந்த ஓர் அரசின் உறுதிப்பாட்டையும் தகர்த்து, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின், எஃகினையொத்த உறுதியினாலும், எதற்கும் தளராத அவருடைய உறுதிப்பாட்டினாலும் தான், இம்மாநிலம், கடும் இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், வளர்ச்சிக்கான புதியதொரு செயல்திட்டத்தினை வகுத்துக்கொண்டு, வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கான உறுதிகொண்ட நடவடிக்கைகளை எடுக்க முடிந்துள்ளது.

## வறட்சி நிவாரணப் பணிகள்

3. தமிழ்நாடு, அதன் வரலாற்றிலேயே, இதற்கு முன் காணாத மிகவும் கடுமையானதொரு வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. தென்மேற்குப் பருவமழைக் காலத்தில், நமது மாநிலத்தில் (–)45.8 சதவீதம் குறைவாக மழை பெய்தது. வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்யத் தொடங்கிய போதிலும், 2002 டிசம்பர் வாக்கில் இந்த பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட மழைக் குறைவின் அளவு (–)14.7 சதவீதமாகும். 2002 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த மழைக் குறைவின் அளவு (–)25.4 சதவீதம். தொடர்ச்சியாகப் பருவமழை பொய்த்துப்போனதால், பாசனத்திற்கும் குடிநீருக்கும் கடுமையான நீர்ப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய நீரின் பங்கைக் கருநாடக அரசு, காவிரியிலிருந்து மேட்டூர் அணைக்குத் திறந்துவிடாதது, பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. குறுவை பயிரிடப்படாத நிலையில், விவசாயிகள், தற்போது, சம்பா மற்றும் தாளடிப் பயிர்களையும் இழந்துள்ளார்கள்.

4. உருவாகிவரும் வறட்சி நிலையைக் கருதி மாநில அரசு சென்னை மாவட்டத்தைத் தவிர 28 மாவட்டங்களை, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை அடுத்து, நிலைத்திருக்கக் கூடிய சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதன் மூலம் பயனுள்ள வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்; கூடுதலாகச் சத்துணவு வழங்குதல், குடிநீர் வசதி செய்துகொடுத்தல், விவசாயிகளுக்கு ஏனையவகையில் நிவாரணம் அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிக்க இந்த அரசு எடுத்துள்ள குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் குறித்து எடுத்துக்கூற விழைகின்றேன்:–

- ❖ வறட்சியின் கடுமையையும் குறுவைப் பயிருக்குக் காவிரி நீர் திறந்துவிடப்படாததையும் டெல்டா மாவட்டங்களில் உணரத் தொடங்கிய உடனேயே, தஞ்சாவூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 2002ல் ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி மூன்று டெல்டா மாவட்டங்களுக்கும் ரூ.164.18 கோடி மதிப்பிலான சிறப்புத் துயர் துடைப்புத் திட்டங்களை அறிவித்தார்கள். இத்திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன.

- ❖ அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொருட்டு, ரூ.149.48 கோடிக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்தொகை, ஆழ்துளைக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், சிறிய அளவிலான விசைப் பம்புகளை நிறுவுவதற்கும், கிணறுகளைத் தூர்வாரி ஆழப்படுத்துவதற்கும், குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்புகளை நீட்டிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நகராட்சி களில், லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ❖ தமிழ்நாட்டில், தென்னை பயிரிடும் விவசாயிகள் பருவ மழை தொடர்ந்து

பொய்த்ததன் விளைவாக, தென்னை மரங்கள் காய்ந்து போய்விட்டதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை மீண்டும் நடுவதற்கு நிதியுதவி வழங்க அரசு ரூ.30.50 கோடிக்கு ஏற்பளித்துள்ளது.

❖ 2002 ஆம் ஆண்டு தீபாவளியையொட்டி, காவிரி டெல்டா மாவட்டங்களில், 10 இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு, ரூ.210 மதிப்புள்ள பரிசுப் பொருள்களைக் கொண்ட பைகளை வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டம், நல்ல வரவேற்பைப் பெற்றது. இத்திட்டம், ரூ.21 கோடி மொத்தச் செலவில் செயல்படுத்தப்பட்டது.

❖ மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தை உறுதி செய்ய, டெல்டா மாவட்டங்களில், நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்காக, சிறப்பு மதிய உணவுத் திட்டத்தையும் தொடங்கிவைத்தார்கள். சமைக்கப்பட்ட உணவிற்குப் பதிலாக, அரிசி வழங்குவது உகந்ததாக இருக்குமென கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையில், இலவச உணவிற்காக ஏற்கெனவே பதிவு செய்துகொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1.2.2003 ஆம் நாள் முதல், மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலைக்கு உணவுத் திட்டம் முழுமையாகச் செயலாக்கத்திற்கு வரும்வரை இது தொடரப்படும்.




❖ சம்பாப் பயிர் பொய்த்ததையொட்டி ரூ.217.09 கோடி செலவில், காவிரி டெல்டா பகுதியின் 9 மாவட்டங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கு வதற்கான சிறப்பு நிவாரணத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களிலும், ரூ.341.92 கோடி செலவில் வேலைவாய்ப்பு உருவாக்கும் பெருந்திட்டம் ஒன்றை அரசு செயற்படுத்தும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். வேலைக்கு உணவு வழங்கும் இந்தச் சிறப்புத் திட்டத்தில், ரொக்கத் தொகையும் அரிசியும் சேர்த்து ஊதியமாக வழங்கப்படும். ரொக்கத் தொகை வழங்குவதற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 85.48 கோடிகள் ஆகும். மேலும் ரூ.256.44 கோடி மதிப்புள்ள அரிசியும் பயனாளிகளுக்கு வழங்கப்படும். பயிர்ச்சேதம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள்பற்றிய மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. மைய அரசினால் அறிவிக்கப்படும் நிவாரண உதவி வகைப்பாடு மற்றும் தொகையின் அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான நிவாரணத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

5. 2002 - ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனது, அதனால் ஏற்பட்ட பாதிப்பு, அதற்கான நிவாரண உதவி ஆகியவை பற்றிய விரிவான அறிக்கை ஒன்றினை மைய அரசிடம் தமிழ்நாடு அரசு சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், ரூ.1434 கோடிக்கான ரொக்க உதவி, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஊதியமாக வழங்க 5.5 இலட்சம் டன் அரிசி ஆகியவற்றை வழங்குமாறு மைய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருந்தது. 2002–2003 - ஆம் ஆண்டு தொடக்கத்தில் இடர் நிவாரண நிதியில் எஞ்சியிருந்த தொகையை உள்ளடக்கிய ரூ.228.30 கோடிக்கு மைய அரசு ஏற்பளித்தது. நிகரமாக மைய அரசு வழங்கியது ரூ.133.06 கோடி ரொக்கத் தொகையும் 50,000 டன் அரிசியும் மட்டுமே.

6. வடகிழக்குப் பருவமழை பொய்த்துப்போன உடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிலையின் கடுமையினை மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். அவரது கோரிக்கையை ஏற்று, வறட்சியின் கடுமை மற்றும் பாதிப்பு அளவு குறித்து மதிப்பீடு செய்வதற்காக, நான்கு உறுப்பினர் கொண்ட மற்றொரு மத்தியக் குழுவை, 2003, பிப்ரவரியில் மத்திய அரசு அனுப்பியது. இவ்வரசு அளித்த வறட்சி குறித்த விரிவான அறிக்கையில், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்கான ரூ.54.69 கோடியுடன் சேர்த்து, தமிழ்நாட்டிற்கு ரூ.2093.92 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென மைய அரசை நாம் கேட்டுள்ளோம். வறட்சியின் தாக்கத்தைத் தணிப்பதற்காக, கூடுதலாக 9 இலட்சம் டன் அரிசி வழங்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். இதில் 75,000 டன் அரிசியை இதுவரை மைய அரசிடமிருந்து பெற்றுள்ளோம். ஆக நாம்

இதுவரை பெற்றுள்ள அரிசியின் மொத்த அளவு 1.25 இலட்சம் டன் ஆகும். மற்ற அனுமதிகளை எதிர்நோக்கியுள்ளோம். இவ்வாறு, இரண்டு அறிக்கைகளில் மொத்தம் ரூ.3527.92 கோடி ரொக்க உதவியையும் 14.5 இலட்சம் டன் அரிசியையும் மைய அரசிடம் நமது அரசு கேட்டுள்ளது. மாநில அரசு பல்வேறு நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலும் வகையில், 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.276 கோடி நிதியொதுக்கியுள்ளோம்.

**நிதி நிலைமை**

7. இந்த அரசு எதிர்நோக்கிய சிக்கலான நிதிப் பிரச்சினைகள் குறித்தும், நாம் செயல்படுத்திய நிதிச் சீர்திருத்தம் குறித்த துணிவான திட்டங்கள் பற்றியும், இனி மேற்கொள்ள வேண்டிய முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் இந்த உரையுடன் கூடிய இணைப்பில் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட மிகத் துணிவான மற்றும் தொலைநோக்குடைய இந்தச் சீர்திருத்தங்கள் மட்டும் இல்லாதிருந்தால், தமிழ்நாடு, மீள முடியாத நிதிச் சீரழிவுப் பாதாளத்தில் தள்ளப்பட்டு, வளர்ச்சிப் பணிகளைக் கைவிட நேர்ந்திருக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

8. தமிழ்நாட்டில் முன்னெப்போதும் இருந்திராததும், பெருமளவிலுமான, இன்று நாம் காண்கிற இந்தப் பொது நிதிநிலைச் சீரழிவுக்கு, முந்தைய அரசு பிரச்சினையின் கடுமையை உணராததும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காததுமே காரணங்கள் ஆகும். எனவே இப்பிரச்சனைகளுக்கு எளிதான உடனடித் தீர்வுகள் எவையுமில்லை. மாநிலத்தின் சீர்திருத்தத்தின் முன்னுரிமைகளையும் வளர்ச்சிப் பணிகளின் இன்றியமையாமையையும் ஒருங்கிணைக்கும் பெரும் பொறுப்பு இவ்வரசுக்கு உள்ளது. ஏழை மற்றும் வறியோரின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வழிசெய்யும் வகையில் முதலீடுகளையும், சமன்பாட்டுடன் கூடிய வளர்ச்சியையும் ஊக்குவிக்க வேண்டியுள்ளது. மாநில அரசின், பொதுக் கடன் பற்றிய முறையான நிருவாகம், கடன்திருப்புகை மற்றும் வட்டிச் செலவுகளையும், ஓய்வூதியப் பொறுப்புகளையும் கட்டுப்படுத்துதல் தொடர்பான முக்கியமான பிரச்சினைகளும் நம்மை எதிர்நோக்கி உள்ளன. முந்தைய அரசு முடக்கி வைத்துள்ள அரசுப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குவது குறித்த பிரச்சினை, நிதிநிலை சீரமைப்பு பற்றிய நடவடிக்கைகள் மற்றும் செயலாக்கத்தின் வேகத்திற்கு ஒரு பெரும் சவாலாக இருக்கிறது. இதனால், நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை ஒரு நடுத்தரக் காலத் திட்டமாகச் செயல்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளது.

9. வளர்ச்சிப் பணிகளை அரசு செயல்படுத்த, நிலையான நிதி நிலைமை அத்தியாவசியத் தேவை என்பதனால் நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமை (Fiscal Responsibility) பற்றிய சட்ட முன்வடிவு ஒன்றை நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டுவர நாங்கள் முடிவு செய்துள்ளோம். இது, மாநில அளவிலான நிதி நிர்வாகம் குறித்த முக்கியமான கொள்கைகளையும், இனி வரும் காலங்களில் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டிய கட்டுப்பாடுகளையும் கொண்டதாக இருக்கும். நாங்கள் எதிர்கொண்டது போன்ற மிகமோசமான நிதிப் பிரச்சினைகளை, எதிர்கொள்வதிலிருந்து வருங்கால அரசுகளை இது காப்பாற்றும்.

10. நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான தக்க உறுதிப்பாடு முந்தைய அரசிடம் இல்லாமலிருந்ததால், உலக வங்கி போன்ற வெளிநாட்டு நிதியுதவி முகவரமைப்புகள் தமிழகத்தை ஒதுக்கத் தொடங்கின என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். அண்டை மாநிலங்கள் இத்தகைய அமைப்புகளிடம் இருந்து நிதியுதவி பெற்று பெரிய அளவிலான திட்டங்களை மேற்கொள்ளும் அதே வேளையில் தமிழ்நாடு பின்தள்ளப்பட்டது. தமிழ்நாட்டின் நிதிவளத்தை மீளப் பெறுவதற்கும் மாநிலத்தை உயர் வளர்ச்சிக்கேற்ற பாதையில் இட்டுச் செல்லவும் ஏற்ற தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான உறுதிப்பாட்டினை இவ்வரசு காட்டியுள்ளது. நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு நல்க உலகவங்கி இப்போது ஆர்வம் தெரிவித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதார மறுசீரமைப்பு உதவிக்கான, உலக வங்கியிடம் வைத்துள்ள நம்முடைய கோரிக்கைக்கு மத்திய அரசு அதன் ஆதரவைத் தெரிவித்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த உதவிக்கான முதல் கட்டமாக, ரூ.1000 கோடி நிதி விடுவிக்கப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நீண்ட காலமாக ஏற்பளிக்கப்படாமல் நிலுவையிலுள்ள பல்வேறு துறைகளிலான வளர்ச்சித் திட்டங்களை பரிசீலிக்கவும் உலக வங்கி இப்போது முன்வந்துள்ளது. தமிழ்நாடு சாலைத் துறை திட்டம் (ரூ.2118 கோடி), நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம் II (ரூ.2900 கோடி), வறுமை ஒழிப்புத் திட்டம் (ரூ.1156 கோடி), மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ரூ.650 கோடி), தமிழ்நாடு ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல்–துப்புரவுத் திட்டம் (ரூ.2300 கோடி) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்–III (ரூ.750 கோடி) ஆகியவை இதில் அடங்கும். சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்டம், தமிழ்நாடு முதன்மைத் துறை (Primary Sector) மேம்பாட்டுத் திட்டம் போன்ற பிற புதிய திட்டங்களும் உலகவங்கியின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படும். ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) மற்றும் பன்னாட்டு கூட்டுறவுக்கான ஜப்பான் நாட்டு வங்கி (Japan Bank for International

Cooperation) போன்ற ஏனைய வெளிநாட்டு முகவரமைப்புகளின் பரிசீலனைக்கு எடுத்துச்செல்லக் கூடிய ஏனைய திட்டங்களையும் நாங்கள் வடிவமைத்து வருகிறோம். தமிழ்நாடு மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுவரப்பட்டதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதியான நடவடிக்கையும் தெளிவான தொலைநோக்குமே காரணமாகும் என்பதை எதிர் காலம் நினைவு கூறும்.

## பன்னிரண்டாவது நிதி ஆணையம்

11. பன்னிரண்டாவது நிதி ஆணையம் ஏற்படுத்தப் பட்டுள்ளதை இவ்வரசு வரவேற்கிறது. பதினோராவது நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்மானத் தீர்வுகளின் குறைபாடுகளினால்தான் பெரும்பாலான மாநிலங்கள் கடுமையான நிதிநிலைமையை எதிர்கொண்டுள்ளன. அனைத்து மாநிலங்களின் குறைகளைப் பன்னிரண்டாவது நிதி ஆணையம் தீர்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

12. பெருவாரியான மாநிலங்கள் தற்போது சந்தித்துவரும் தொடர்ச்சியான நிதி இடர்ப்பாடுகள் தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டும். பன்னிரண்டாவது நிதி ஆணையம், மத்திய வரி வருவாயில் பகிர்ந்தளிக்கப்படக்கூடிய தொகுப்பில் மாநிலங்களின் தற்போதைய அளவான 29.5 சதவீதத்தைக் கணிசமாக உயர்த்த வேண்டும். வளர்ச்சித் திட்டங்களை பெருமளவில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை மாநிலங்களுக்கு ஒப்படைக்கப் பட்ட இத்தருணத்தில், இதைக் கண்டிப்பாக நிறைவேற்றி ஆகவேண்டும். மாநிலங்களுக்கிடையே உள்ள பகிர்வு குறித்து வழங்கப்படும் பரிந்துரைகளில், பன்னிரண்டாவது நிதி ஆணையம் புதிய முன்னேற்றமான கோட்பாடு ஒன்றை வகுக்க வேண்டும். கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட பல நிதி ஆணையங்கள், நன்கு செயல்படும் மாநிலங்களின் பங்கை எடுத்து, பின்தங்கிய மாநிலங்களுக்கு அப்பங்கை அளிக்க வகைசெய்தன. இந்தச் செயல்முறை நிறுத்தப்பட வேண்டும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2002-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தேசிய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் ஆற்றிய தமது உரையில், இப்பொருள் தொடர்பான சிந்தனையில் முழுமையானதொரு மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுத்திறன் மற்றும் திறமையான நிதி நிருவாகம் ஆகியவற்றுக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். பொருத்தமான நிதி மேலாண்மையைக் கையாண்டு வரும் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பொருந்திய கடன் நிவாரணத் திட்டம் ஒன்றினை பன்னிரண்டாவது நிதி ஆணையம் வெளியிட வேண்டும். விரிவாக முன்மதிப்பீடு செய்து, பன்னிரண்டாவது நிதி ஆணையத்திடம், குறிப்பிட்ட காலத்தில், நாங்கள் மாநிலத்தின் அறிக்கையை அளிக்கவுள்ளோம்.

## பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

13. 2002–2007-ஆம் ஆண்டு இடையிலான பத்தாவது ஐந்தாண்டு திட்டகாலத்திற்கு, தமிழ்நாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் ரூ.40,000 கோடி ஒதுக்கீடு பெற்று வந்துள்ளார்கள் என்பதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். 2002 ஜூன் திங்களில், மத்திய திட்டக்குழு துணைத் தலைவருடன் நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பலனாகத்தான் இது கிட்டியுள்ளது. புதுடில்லியில், 2002, டிசம்பர் திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி குழுக் கூட்டத்தில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ஏற்கெனவே குறைந்து மேலும் தடுமாறும் நிலையிலிருக்கும்போது, வறுமை ஒழிப்பு, முதன்மைத் துறையில் விரைந்த வளர்ச்சி, உற்பத்தித் துறையில் வளர்ச்சியின் வேகத்தை மீண்டும் கொண்டுவருதல், பணிகள் துறையில் ஒரு புதிய எழுச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதால் தமிழ்நாடு ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வதை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உறுதி செய்துள்ளார்கள். சென்ற வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் நான் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம் முழுமையாக மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பத்தாவது திட்டம் 8 சதவிகித ஒட்டுமொத்த வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்கை எய்துவதற்கு நிதிநிலை வலுப்படுத்தலும் தீவிர வளர்ச்சி வேகமும் இன்றியமையாதனவாகும்.


## ஆண்டுத் திட்டம் - 2003-2004

14. 2001–2002-ஆம் ஆண்டில், ரூ.6040 கோடி என்று ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை முழுமையாக எய்த முடியாமல், அதனை ரூ.5200 கோடி என்று குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசு உள்ளாக்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்தகைய நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், 2002–2003-ஆம் ஆண்டில், நிதிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால்தான், நடப்பாண்டிற்கான ரூ.5750 கோடி அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டு அளவை, முழுமையாக எய்த முடியும் என்று, இப்போது உறுதிபட அறிவிக்க நம்மால் முடிந்துள்ளது. இந்தப் புதிய நம்பிக்கையுடன்தான் 2003–2004-ஆம் ஆண்டிற்குப் பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை நிறைவேற்றக் கருதியுள்ளோம். 2003–2004 ஆம் ஆண்டிற்கு, ரூ.7000 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டை எய்த நாம் இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்பதை அறிந்து, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் விவாதித்த பிறகு இது உறுதி செய்யப்படும்.

**காவல், சிறைச்சாலைகள் மற்றும் தீயணைப்புப் பணிகள்**

**15.** சட்டம் ஒழுங்கை உரியவாறு பராமரிப்பது, விரைவான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். மாநிலக் காவல் துறைக்குப் புதிய தொரு தொலைநோக்குப் பார்வை, இலக்கு மற்றும் செயல் நோக்கத்தை அளிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன் எப்போதும் இராத முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

**16.** காவல் படையை நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ், ஆயுதங்கள் மற்றும் படைக்கலன்கள், சாதனங்கள், வண்டிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகவும், காவலர் குடியிருப்புகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் 2001–2003 என்ற இரண்டாண்டு




கால அளவிற்கு ரூ.271.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்க நாம் பொறுப்பேற்றுக் கொண்டதையொட்டி, 148 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன.

**17.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நல நடவடிக்கைகள் காரணமாக, மாநிலக் காவல் படையின் கட்டுக்கோப்பு குறிப்பிடத் தகுந்த அளவுக்கு மேம்பட்டுள்ளது. முன் எப்போதும் இல்லாத வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஐந்து முழு நாட்கள், மாநில காவல் துறையின் அதிகாரிகள் மற்றும் ஆண், பெண் காவலர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களின் குறிப்பிட்ட குறைகளைத் தீர்த்துவைத்தார்கள். குறைதீர்க்கும் அமைப்பு முழுமையாகச் சீரமைக்கப்பட்டு, காவலர்களின் கட்டுக்கோப்பை மேம்படுத்துவதில் அக்கறை உள்ள அமைப்பாக ஆக்கப்பட்டது. தனி நேர்வுகளில் நிதி நிவாரணம் வழங்குவது மட்டுமின்றி, காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகள் உயர் கல்வியைத் தொடர இயலும் வகையில், நடப்பாண்டில், தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து ரூ.1.38 கோடி மானியம் வழங்கப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டில், காவல் துறையினர் களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்களுக்கும், சிறந்த மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக, தமிழ்நாடு காவலர் சுகாதாரத் திட்டத்தின் கீழ் ரூ.1.75 கோடி செலவிடப்பட்டது. மகளிர் காவல் பணியாளர்களின் குழந்தைகள் முறையாகப் பேணி வளர்க்கப்படுவதை உறுதிசெய்ய, அவர்களின் பயனுக்காக, ஆறு காவல் துறை ஆணையாளர் அலுவலகங்களில் மழலையர் காப்பகங்களை அரசு தொடங்கியுள்ளது. காவலர் வீட்டு வசதித் திட்டம், நாட்டிலேயே மிகச் சிறந்த திட்டமாகத் திகழ்கிறது. இதன் பயனாகத் தமிழ்நாட்டில், காவலர்களுக்கிடையே, வீட்டு வசதி குறித்த மன நிறைவு வீதம், நாட்டிலேயே மிகச் சிறப்பான அளவில் தேசிய வீதத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.

**18.** மாநில காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு, நடப்பாண்டில், திருத்த மதிப்பீடான ரூ.1291.49 கோடியிலிருந்து, 2003–2004 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1391.14 கோடியாக உயர்ந்துள்ளது. காவல் படையை நவீன மயமாக்குவதற்கு நாங்கள் உயர் முன்னுரிமை அளித்துள்ளோம். அடுத்த நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ், ரூ.130.98 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**19.** சிறைவாசிகள் விரைவில் திருந்தி மறுவாழ்வுபெற்று மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் கலந்து வாழ்வதற்கு சிறைகளில் உகந்த வாழ்க்கை வசதிகள் இருக்க வேண்டியது மிகவும்




அவசியமானதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ள பெரியதொரு திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள மத்தியச் சிறை, மிக நவீன வசதிகளுடன் அதிக பரப்பளவில், புழலில் அமைந்துள்ள வளாகத்திற்கு மாற்றப்படும். 2003–2004 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், விரிவான சிறைத்துறை சீர்திருத்தங்களுக்கான ஒரு தொலை நோக்குத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசின் இசைவை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

20. தீயணைப்பு–மீட்புப் பணித் துறையிடம் உள்ள வசதிகளைப் பெருக்க அரசு கருதியுள்ளது. தீயணைப்பு–மீட்புப் பணித் துறை நல்கிவரும் பணிகளை மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்க சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆணையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.4.20 கோடி செலவில், ஏனையவற்றுடன் தீயணைப்பு வண்டிகள் (fire tenders) வாங்குதல்போன்ற புதிய கொள்முதல் திட்டத்தை அடுத்த நிதியாண்டிலிருந்து செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான இன்றியமையாத வளர்ச்சித் தேவைகள்

21. மனத்திண்மையுடனும், துணிவுமிக்க வகையிலும் இந்த அரசால் வகுக்கப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பொருள்நிரல், 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மையக் கருத்தாக அமையும். இவற்றின் முக்கிய கூறுகள் பின்வருமாறு அமையும்.

- ❖ வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலரியல் போன்ற துணை வேளாண்மைப் பணிகள், கால்நடை வளர்ப்பு, மீனளம், பாசனம், ஊரக வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைத் துறைக்குப் புத்துணர்வு அளித்தல்,



- ❖ இரண்டாம் நிலை சீர்திருத்தங்களை தீவிரமாகச் செயற்படுத்துவதன் மூலம் உற்பத்தித் துறைக்குச் சிறப்பான உந்துதல் அளித்தல்.
- ❖ சென்னைப் பெருநகர் பகுதிக்குச் சிறப்புக் கவனத்துடன் கூடிய விரைவான, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மாநிலத்தில் உருவாக்குதல்.
- ❖ வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக, தகவல் தொழில்நுட்பவியல், சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் துறைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துதல்.
- ❖ மனித வள மேம்பாட்டிற்குப் புதிய முக்கியத்துவம் அளித்தல்.
- ❖ ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புறுதியும் சமூக உத்திரவாத ஏற்பாடும் அமைத்தல்.

இந்த அடிப்படைக் கொள்கைகள் 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளன. இந்த விரிவான பின்னணியில் இவ்வரசின் குறிப்பான திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து எடுத்துரைக்க நான் விழைகிறேன்.

## முதன்மைத் துறை

22. 1960-ஆம் ஆண்டுகளில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில், முதன்மைத் துறையின் பங்கு, 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்த நிலையிலிருந்து. 2000–2001 ஆம் ஆண்டில் 17 சதவீதமாகக் குறைந்துவிட்டது. ஆனால் முதன்மைத் துறையைச் சார்ந்திருக்கும் மக்கள் தொகை சதவீதமோ, 62 சதவீதம் என்ற உயர் அளவில் இருந்துவருகிறது. ஒன்பதாவது திட்டக்கால அளவில் (1996–2001) வேளாண்மைத் துறையில் தேக்கநிலை ஏற்பட்டதாலும் அதனைத் தொடர்ந்து பருவமழை பொய்த்துப் போனதாலும் புதிய வளர்ச்சி அணுகுமுறை ஒன்றை வகுக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. தரிசு நில மேம்பாட்டில் தனிக் கவனம், நீர்வள ஆதாரங்களைச் சரியான முறைகளில் பயன்படுத்துதலுடன் இணைந்த நீர்வள ஆதாரமேம்பாடு, நீரை ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்துதல், விளைச்சலைப் பெருக்குவதற்கும் நோய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், தோட்டக்கலை, மலரியல் போன்றவற்றை மேம்படுத்தி, மதிப்புக்கூட்டிய பயிர்வகைகளைச் சாகுபடி செய்யுமாறு பயிரிடு முறைகளை மாற்றி அமைத்தல் ஆகியவை இதனுள் அடங்கும்.

23. இத்துறையில் புதிய வளர்ச்சி வேகம் உருவாகும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்


ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டமொன்றை அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, அனைத்து கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்களை, வேளாண்–ஆய்வு அடிப்படையிலான (Agri-clinical) அணுகுமுறைமூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கைகளின் கீழ் கொண்டு வரவேண்டும். இத்திட்டம், 2003–2004-ஆம் ஆண்டில் தீவிரமாக்கப்படும். கூட்டு நிறுவனங்களையும், சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளையும், தரிசுநில மேம்பாட்டுப் பணிகளிலும், அவற்றோடு இணைந்த ஊரகத் தொழில்களிலும் ஈடுபடச் செய்வது இதன் இரண்டாவது அம்சமாகும். இம்மாநிலத்தைச் சேர்ந்த 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், குறைந்தது ரூபாய் ஒரு கோடி மொத்த முதலீட்டுடன், வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு, தனிக் கவனம் செலுத்துவது, மூன்றாவது அம்சத்தின் நோக்கம் ஆகும். வரும் ஆண்டில், இம் மூன்று அம்சங்கள் தொடர்பான பணிகளிலும் தீவிரமான கவனம் செலுத்தி முன்னேற்றம் காண நாங்கள் திட்டமிட்டுள்ளோம். வேளாண்மை–ஆய்வு அணுகுமுறை மற்றும் பங்கேற்பு அடிப்படையில் அமைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 25 கோடி வழங்க, இந்த வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் புதிய தொழில் பிரிவுகளுக்கு, மூலதன உதவித் தொகையாக, ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும், இந்த வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ், இது வரையில், ரூ.267 கோடி திட்டச் செலவில், 220 வளர்ச்சி வட்டாரங்களை உள்ளடக்கிய 320 செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.23.14 கோடி அளவிலான 33 தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

24. புதிய தொழில்நுட்பத்தை ஈர்த்துத் தக்கவைத்துக் கொள்வது, வேளாண்மை வளர்ச்சியில்




ஒரு முக்கிய அம்சமாக உருவாகி வருகிறது. நுட்பமான சாகுபடி முறைகளைக் (Precision farming) கையாளுவது தற்போதைய முக்கிய குறிக்கோளாக அமையவேண்டும். இலாபகரமான நீர் பயன்பாட்டு உத்திகளைக் கையாண்டு, வெற்றி கண்டுள்ள இஸ்ரேல் நாட்டு அனுபவத்தின் அடிப்படையில், திட்டம் ஒன்றை வரும் ஆண்டில், தருமபுரி மாவட்டத்தில், ரூபாய் 2 கோடி செலவில் செயல்படுத்தக் கருதியுள்ளோம். இதில் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், பிற மாவட்டங்களுக்கும், தக்க திட்டங்களைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் உருவாக்கும்.

25. தோட்டக்கலை மேம்பாடு, முதன்மைத் துறைக்கு வளர்ச்சி இயந்திரமாக அமையும். தோட்டக்கலை வளர்ச்சி இயக்ககத்தின் தொடர் நடவடிக்கையாக, மா, வாழை, முந்திரி, வீரிய ஒட்டுவகை காய்கறிகள், மூலிகை மற்றும் வாசனைச் செடிகள், மலர்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும், உற்பத்தித்திறனையும் பெருக்கும் வகையில் தனித்




தனியான பயிர்வளர்ச்சி இயக்ககங்களை நிறுவ இவ்வரசு முடிவெடுத்துள்ளது. ஜட்ரோபா (Jat-ropha) பாரடைஸ் (Paradise) மரம் போன்ற உயிரி எரிபொருள் தாவர வகைகளுக்கான சிறப்பு இயக்கத்தையும் தொடங்குவோம். ஒசூர், நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களில், மூன்று வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைக்கிறோம் என்பதை, மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில், ரூ.15.89 கோடி செலவிலும், தேனி மாவட்டத்தில் ரூ.24.60 கோடி செலவிலும் மேற்கொள்ளப்படும்.

26. நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்கள் அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பாசன நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேலும் விரிவாக்குவதற்கு புதிய உத்திகளை வகுக்க வேண்டியுள்ளது. தற்போது உறுதி செய்யப்பட்டுள்ள, பாசன வசதிகளின் அளவைக் கூட தொடர்வது பெரும் பிரச்சினையாகி வருகிறது. ரூ.2900

கோடி செலவிலான நதிநீர்ப் பிடிப்புப் பகுதியை ஆதாரமாகக் கொண்ட நீர்த்தேக்கங்கள், நதிகள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளை மேம்படுத்தும் நீர் ஆதார தொகுப்புத் திட்டம் II–க்கு நிதியுதவி அளிக்குமாறு உலக வங்கியை இவ்வரசு அணுகியுள்ளது. உலக வங்கியின் ஏற்பினைப் பெறுவதற்கு மேலும் சில காலம் ஆகுமென எதிர்பார்ப்பதால், ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் நடைமுறையிலுள்ள நீர் ஆதார தொகுப்புத் திட்டம் I க்கு ஓராண்டுக்கு நீட்டிப்பு நல்குமாறு உலக வங்கியை நாங்கள் கேட்டுள்ளோம். இந்த நீட்டிப்பிற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்குமென நாங்கள் நம்புகிறோம்.


27. மாநிலத்தில் பாசன வளத்தை அதிகரிப்பதற்கு 2003–2004–ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் உயர் முக்கியத்துவத்தை அளிக்கிறது. சொட்டுநீர் பாசனத் திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.11.79 கோடி அளவிலுள்ள ஒதுக்கீடு 2003–2004–ஆம் ஆண்டில் ரூ. 30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பண்ணை பம்புசெட்டுகளின் எரிசக்தி–சிக்கன–செயல்திறனைப் பெருக்கிக் கொள்வதற்கும், பாசன நிலப்பரப்பை




அதிகரித்து நல்ல மகசூலைப் பெறும்வகையில் தக்க தொழில்நுட்ப உதவிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதியதொரு திட்டம் வருமாண்டில் செயல்படுத்தப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளபடி, தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின்கட்டணத்தைச் செலுத்த உதவி செய்யும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளதையொட்டி, 2003–2004-ஆம் ஆண்டில் அவர்களுக்கு நேரடியாக பண உதவி அளிக்கும் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். வருமாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இந்நோக்கத்திற்காக ரூ.100 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் எப்போதும் பாதுகாக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.

28. வறட்சி நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வேலைக்கு உணவு அளிக்கும் சிறப்புத் திட்டம், அரசால் தொடங்கப்பட்டுள்ளது. 2003–2004–ஆம் ஆண்டில், பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் அவ்வாறு உட்படாத நீர்நிலைகளைத் தூர்வாரி புதுப்பிப்பதற்கு, ரூ.100 கோடி மொத்த ஒதுக்கீட்டுடன் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் ரொக்க உதவி அளிப்பதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, ஊதியத்தின் மறுபகுதியாக ரூ.75 கோடி அளவில் அரிசி வழங்கும் திட்டத்துடன் இணைந்திருக்கும். கிராம ஊராட்சிகளில் சிறு குளங்கள் மற்றும் 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டினைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகள் ஆகியவற்றை தூர்வாரி மேம்படுத்த, வருமாண்டில் ரூ.50 கோடி செலவிலான திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டம் ரூ.37.50 கோடி மதிப்பிற்கு ஒரு பகுதியாக அரிசியை ஊதியமாக வழங்கும் வகையில் அமையும். மறு பகுதியாக ரொக்கத் தொகை வழங்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.12.50 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டில், ரூ.24.36 கோடி திட்டச் செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏரிகளிலும், ஏனைய நீர் நிலைகளிலும், தூர்வாருவதற்கான திட்டம் வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

29. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் மழை நீர் சேகரிப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். மாபெரும் தண்ணீர் தட்டுப்பாட்டை மாநிலம் எதிர்நோக்கியுள்ள சூழலில் மழை நீரை நாம் முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்யவேண்டும். பாசனத்திற்காக மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது. மொத்தம் உள்ள 1.59 இலட்சம் பயன்படுத்தப்படாத கிணறுகளை நாம் மழை நீர்




சேகரிப்பிற்காகப் பயன்படுத்த முடியும். வரும் ஆண்டில் அதற்கான திட்டத்தை நாம் செயல்படுத்துவோம். வேளாண் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் விவசாயிகளின் கூட்டு முயற்சியோடு இது நிறைவேறும். இதுபோலவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் கடந்த குறுவைச் சாகுபடியின் போது தொடங்கிய பண்ணைக் குட்டைகள் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**30.** காவிரி டெல்டா பகுதிகளில் குறிப்பாகக் கடைக்கோடிப் பகுதிகளில் பண்ணைப் பாசனத்தைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தும் வகையில் பாசனக் கட்டுப்பாடு அமைப்புகளின் மறுபயன் திட்டத்தை நாம் தொடங்க உள்ளோம். டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கிடைக்கும் தண்ணீரை, சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டு சிறந்த விளைச்சலைப் பெற தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ள எளிய முறைகள் பிரபலப்படுத்தப்படும். கடைக்கோடிப் பகுதிகளில் ஆழ்குழாய் மூலம்நீர் இறைக்கும் திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

**31.** பாசனம் குறித்த ஒதுக்கீடு, நடப்பாண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.**668.94** கோடியாக இருக்க, **2003–2004** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.748 கோடியாக இருக்கும்.

**32.** கால்நடை வளர்ப்பு, ஊரக மக்களின் வாழ்க்கையில் ஓர் இன்றியமையாத அங்கமாகத் திகழ்கிறது. ஊரகப் பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. கால்நடை வளர்ப்பை, வேளாண்மையுடன் ஒருங்கிணைத்து, பண்ணை வீட்டுப்பயிர் வளர்ப்பு முறையை வரும் ஆண்டில் புதிய வேகத்துடன் செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வேளாண்மையை, கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைத்து ஊக்குவிப்பதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி தொடக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பண்ணைவீட்டு பயிர் வளர்ப்பு முறையுடன் ஆடு வளர்க்கும் திட்டத்தையும் இணைத்து முன்னோடித் திட்டமொன்று வருமாண்டில் துவக்கப்படும்.

**33.** இம்மாநிலத்தில் வறட்சியினால் கால்நடைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டதன் கடுமையைத் தணிப்பதற்காக, அரசு, நடப்பாண்டில் ரூ.20 கோடி அனுமதித்துள்ளது என்பதை அறிந்து மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். நீர் வழங்குதல், தடுப்பூசி மற்றும் மருந்துகள் வாங்குதல், கால்நடை சுகாதார நிலையங்களில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளின் நிலை உயர்த்துதல், கால்நடைத் தீவனம் கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்காக இத்தொகை பயன்படுத்தப்பட்டு வருகிறது. நடைமுறையில் உள்ள கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், **2002–2003**-ஆம் ஆண்டில் **4494** கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டம், 2003–2004-ஆம் ஆண்டிலும் தொடர, ரூ.2.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**34.** 'டேனிடா' நிதியுதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் **45** ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கால்நடை பாதுகாப்பிற்காகவும், அனைத்து விவசாயிகளுக்கும் அதிக அளவில் வருவாய் கிடைக்கும் வகையிலும், கால்நடை வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு பற்றிய பல்வேறு செயல்முறைகளை கையாளுவதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுடன் அவர்களோடு இணைந்து செயல்படும் தொழிலாளர் தம்பதியினருக்கும் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் மேலும் 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மாநிலத்தில் கால்நடை நலம் காக்கும் பணிகளை விரிவுபடுத்த, ஒரு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

**35.** நமது மாநிலத்தில் ரூ.20 கோடி மொத்தச் செலவில் கால்நடை மற்றும் எருமை இனப் பெருக்கத்திற்கான தேசியத் திட்டத்தைச் செயல்படுத்த, மத்திய அரசு அனுமதியளித்துள்ளது பற்றி இந்த அவையில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துவதும், உள்நாட்டு கால்நடை இனங்களைப் பாதுகாப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை முன்னின்று நடத்துவதற்காக, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகவரமைப்பை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

**36.** கடல்சார் மற்றும் உள்நாட்டு மீன்வளப் பெருக்கத்தை அதிகப்படுத்துவதற்கும், அவற்றின் உயிர் மரபு விரிவாக்கத்தைப் பாதுகாப்பதற்கும், அறுவடைக்குப் பின்னர் தக்க முறையில் சேமித்து சந்தையில் விற்பதற்கும்

தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மீனள மேம்பாட்டு இயக்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 18.7.2002 ஆம் நாளன்று துவக்கிவைக்கப்பட்டதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். இந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் வரும் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

37. மீன் பிடிக்க இயலாத பருவ காலத்தில் கடல்சார் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க, 2003-2004-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.25.13 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் அடுத்த நிதியாண்டில் பெருமளவில் முடுக்கிவிடப்படும். இதற்காக, ரூ.10.21 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். ரூ.48.84 கோடி செலவில் இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும், ரூ.10.60 கோடி செலவில் பழையார் நிலை-II ல் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும் அமைக்கும் திட்டச் செயற்குறிப்புகள் நிதியுதவி கோரி மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மொத்தம் ரூ.13.23 கோடி செலவில் 10 இடங்களில் மீன் இறங்குதளங்கள் ஏற்படுத்த ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆறு இடங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்த ஊரக வளர்ச்சி

38. இவ்வரசு, முதன்மைத் துறையில் விரைந்த வளர்ச்சி காண்பதன் மூலம் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு, ஒட்டுமொத்த ஊரக வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மட்டுமின்றி, அவர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பினையும் அளிக்கும் வகையில், இன்றியமையாத ஊரகக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் உரிய கவனம் செலுத்துவோம்.

39. ஊரகக் கட்டமைப்பு வசதிகளின் பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதற்காக, 2003-2004-ஆம் ஆண்டில், "நபார்டு" (NABARD) வங்கியிடமிருந்து ரூ.400 கோடி அளவிற்கு கடன் நிதியுதவி பெறுவோம். ஊரகச் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், ஊரகப் பள்ளிகளில் வசதிகள் செய்து கொடுத்தல், ஊரக சுகாதார வசதி கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பாசனத்திட்டங்கள், மழைநீர் சேகரிப்புப் பணிகள், ஊரக மின்வசதி மற்றும் ஏனைய திட்டங்கள் இதில் அடங்கும். இந்தப் பெருந்திட்டம், ஊரக வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும் போதிய அளவிற்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் பேருதவியாக இருக்கும்.

40. 2003-2004-ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளுக்கு மின்வசதி அளிக்கப்படுவதற்கு புதிய முக்கியத்துவம் அளிக்கப்படும். ஊரகப் பகுதிகளில் மொத்தம் ரூ.232.30 கோடி திட்ட மதிப்பீட்டில் மின் பகிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளில் 35 புதிய துணை மின்நிலையங்களை அமைத்தல், 39 துணை மின்நிலையங்களிலுள்ள மின்னழுத்த மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல், 2313 புதிய மின் விநியோக மின்னழுத்த மாற்றிகளை நிறுவுதல் ஆகியவற்றுக்காக இந்த முதலீடு பயன்படுத்தப்படும். 149 தொலைதூர மற்றும் சிறிய குடியிருப்புகளுக்கு, சூரிய ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட, மின் இணைப்புகளை வழங்குவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று, 2003-2004-ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக செயல்படுத்தப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். பெருமளவிலான இந்த முதலீடுகள், ஊரகப் பகுதிகளில் தரமான மற்றும் நம்பகமான மின் வழங்கலை மேம்படுத்த மிகப் பெரிய அளவில் உதவும். தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கட்டணங்களைச் செலுத்துவதற்காக, குடிசைவாழ் மக்களுக்கு ரூ.14 கோடி வழங்க வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது.

41. மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், ஊரகப் பணிகளின் முக்கியமானதொரு திட்டமாகும். 2002-03-ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 79,111 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2003-2004-ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் 1,00,000 பணிகளை மேற்கொள்வதென்று நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின்படி, வழங்கவேண்டிய ஊதியத்தின் ஒரு பகுதி, ரொக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்பட வேண்டியதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.55.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஊதியத்தில் மறுபகுதி அரிசியாக வழங்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

42. கிராம தன்னிறைவுத் திட்டத்தை, கிராம மக்கள் பங்கேற்புடன் அவர்களின் தேவைக்கேற்ப வகுக்கப்பட்ட புதுமையானதொரு திட்டமாக இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ.20 கோடி நிதியொதுக்கீடு, வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

43. ஊரகச் சாலைகளை நிலையுயர்த்துவதற்கும், பராமரிப்பதற்கும், 2003-2004-ஆம் ஆண்டில் தனிக்கவனம் செலுத்தப்படும். ரூ.367.22 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளிலுள்ள 2937 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் நிலையை உயர்த்துவதற்கு, பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டத்தின் (PMGSY) கீழ் கிடைக்கப்பெறும் நிதிகள் பயன்படுத்தப்படும். 500 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கொண்டுள்ள அனைத்து குடியிருப்புப் பகுதிகளையும் இணைக்கும் வகையில், ஊரகச் சாலைகளை அமைப்பதற்காகப் பெருந்திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. தற்போதைய நிலவரப்படி, இன்னும் 2102 குடியிருப்புப் பகுதிகளுக்கு இந்த வசதி செய்துகொடுக்கப்பட வேண்டியுள்ளது. பத்தாவது திட்ட

கால அளவிற்குள், அனைத்துப் பருவ நிலைக்கும் ஏற்ற சாலைகளின் மூலம் இக்கிராமங்கள் இணைக்கப் படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

**44.** நெடுஞ்சாலைத் துறையினாலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களினாலோ பராமரிக்கப்படாத ஏறத்தாழ 12,000 கி.மீ. சாலைகள் எந்தப் பிரிவிலும் வகைப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. இந்தச் சாலைகள் அனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. 2003–2004-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்காக மாநில அரசின் நிதிப் பகிர்மானத்திலிருந்து ரூ.50 கோடி, இவ்வகைச் சாலைகளைப் பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.

**45.** சுகாதாரம், தூய்மை, துப்புரவு ஆகியவற்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் சீரிய முக்கியத்துவத்தை அளித்து வருகிறார்கள். ஊரகப் பகுதிகளில் மகளிருக்கும், சிறார்களுக்கும் பயன்படும் வகையில் 12,618 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டும் பெருந்திட்டம் ஒன்றை அரசு துவக்கியுள்ளது. 6309 வளாகங்களைக் கட்டும் முதல் கட்டப்பணி முடிவுற்றுள்ளது. மேலும் 6309 துப்புரவு வளாகங்களைக் கட்டும் இரண்டாம் கட்டப்பணி, ரூ.104.42 கோடி மதிப்பீட்டுச் செலவில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். 16 மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் உள்ள முழுமையான துப்புரவுத் திட்டத்தை எஞ்சியுள்ள 12 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த தக்க நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். "துப்புரவு கிராம முகாம்" தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கிராம அளவில் திடக் கழிவை அகற்றும் பணியில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். துப்புரவு கிராம முகாமின் கீழ் சிறந்த கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்க, ரூ.75 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**46.** வரும் நிதியாண்டில், ஊரக வீட்டுவசதித் திட்டத்திற்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும். 2003–2004-ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 31,453 வீடுகள் கட்டப்படும். இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.28.37 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது. 2003–2004-ஆம் ஆண்டில், 16,164 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படும். இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.4.11 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது.

**47.** 1.4.2002 நிலவரப்படி, மாநிலத்தில் ஊரக குடிநீர் வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வு, மொத்தமுள்ள 80,421 குடியிருப்புப் பகுதிகளில், 28,623 குடியிருப்புப் பகுதிகளுக்கு உறுதியாக குடிநீர் வழங்கப்படுகிறது எனவும், 51,294 குடியிருப்புப் பகுதிகளுக்கு ஓரளவு மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது எனவும் 504 குடியிருப்புப் பகுதிகள் குடிநீர் வழங்கலுக்கான நம்பத்தகுந்த ஆதாரம் எவற்றையும் இதுவரையில் பெறவில்லை எனவும் காட்டுகிறது. நடப்பாண்டில் இந்த 504 குடியிருப்புப் பகுதிகளில், 465 குடியிருப்புப் பகுதிகளுக்கு உறுதியாக குடிநீர் வழங்கப்பட்டுள்ளது என்று இந்த அவையில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எஞ்சியுள்ள 39 குடியிருப்புப் பகுதிகளுக்கு 2003–2004- ஆம் ஆண்டில் குடிநீர் முழுமையாக வழங்கப்படும். முன்னர் ஓரளவே குடிநீர் வழங்கப்பட்டு தற்போது உறுதியாகக் குடிநீர் வழங்கப்பட்டுவரும் குடியிருப்புப் பகுதிகளின் எண்ணிக்கையில் வியக்கத்தக்க முன்னேற்றம் உள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், ஊரகக் குடிநீர் வழங்கலுக்காக, குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டத்தின் கீழ் (Minimum Needs Programme) ரூ.411 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**48.** மத்திய அரசால் 2002-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் துவக்கப்பட்ட புதிய ஸ்வஜல்தாரா (Swajaldhara) திட்டம் வரும் நிதியாண்டில் மிகவும் முனைப்பாக நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும். மேலும் வரும் நிதியாண்டில் உலக வங்கியின் உதவி பெறும் ரூ.2300 கோடி செலவிலான தமிழ்நாடு ஊரகப் பகுதி குடிநீர் மற்றும் துப்புரவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக அவ்வங்கியின் ஒப்புதலைப் பெறவுள்ளோம் என்பதை அறிவதில் மாண்புமிகு அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

**49.** சட்டமன்றப் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ரூ.82 இலட்சம் என்ற அளவில் சட்டமன்றப் பேரவை தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். 2001–2002-ஆம் ஆண்டில், கடுமையான நிதி இடர்ப்பாடு காரணமாக, இத்தொகையில் 50 சதவீதத்தை வழங்க இயலவில்லை. நடப்பு ஆண்டில், ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.82 இலட்சம் வழங்கப்படுவதை நாங்கள் உறுதி செய்துள்ளோம். இந்த நிலுவைத் தொகையான ரூ.96.35 கோடியில் நடப்பு நிதி ஆண்டில் 50 சதவீதத்தை வழங்குவதற்கும், எஞ்சியிருக்கும் 50 சதவீதத் தொகையை 2003–2004ஆம் ஆண்டில் வழக்கமான ஒதுக்கீட்டோடு வழங்குவதற்கும் நாங்கள் முயற்சி மேற்கொள்வோம். இதன் அடிப்படையில், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.240.88 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் நிலைத் துறை

**50.** இரண்டாம் நிலைத் துறையில், உற்பத்தி, மின்சாரம், கட்டுமானத் தொழில் ஆகியவை முக்கியமானவை. தமிழ்நாட்டில், உற்பத்தித்துறையில் சாதனை 1996–2001 ஆம் கால அளவில் போதிய அளவில் இல்லை.. 1999–2000 -ஆம் ஆண்டு நீங்கலாக, மற்ற ஆண்டுகளில் வளர்ச்சி வீதம் பின்னடைவுடனோ அல்லது

மிகக் குறைவான முன்னேற்றத்துடனோ இருந்துள்ளது. இரண்டாம் நிலை சீர்திருத்தங்கள் மூலம், இத்துறையில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் அமைப்பு ரீதியான கட்டுப்பாடுகளை நீக்க இவ்வரசு கருதியுள்ளது. அந்தச் சீர்திருத்தங்களில் பின்வருபவை அடங்கும்:–

- ❖ துறைமுகங்கள் மற்றும் சுங்கத் துறைகளில் தொழில்முறை கால விரயத்தையும் செலவுகளையும் குறைத்தல்.
- ❖ வட்டி வீதத்தைத் திருத்தியமைத்தல்.
- ❖ உலகளாவிய ஒருங்கிணைப்பு
- ❖ தொழிலாளர் நலச் சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்.
- ❖ நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.
- ❖ தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- ❖ தரமான எரிசக்தி வழங்குதல்.
- ❖ தொழில்நுட்பத்தை நவீனப்படுத்துதல் மற்றும் நிலை உயர்த்துதல்.
- ❖ மாநில வரிவிதிப்பு முறைகளில் சீர் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.

51. முதல் நான்கு சீர்திருத்தங்கள் குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. உற்பத்தித் துறையில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்ற அனைத்துத் தடைகளையும் நீக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம். மாநில அரசின் வரம்பிற்குள் வருகின்ற ஏனைய சீர்திருத்தங்கள் குறித்து பரிசீலிக்க அரசு கருதியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) மாநாட்டில் ஆற்றிய உரையில், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய இரண்டாம் நிலை சீர்திருத்தங்களுக்கான வரைவுத் திட்டம் ஒன்றை விளக்கியுள்ளார்கள். அவை குறித்து சுருக்கமாகக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

52. நிருவாக நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் ஒரு பகுதியாக, மாசுக் கட்டுப்பாடு குறித்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறுவது நீங்கலாக, முன் திட்ட அனுமதி மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதி பெறுதல் ஆகியவை தொடர்பாகத் தேவைப்படும் தகவல்களைப் பெறுவதற்குத் தேவையான பொதுவான விண்ணப்பப் படிவம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. தேவையற்ற பதிவுகளைத் தவிர்க்கவும், மேலாண்மைக்கான கால விரயத்தைக் குறைக்கவும், 51 வெவ்வேறு படிவங்களை ஒருங்கிணைத்து பொதுவானதொரு விவரப் படிவத்தை வகுப்பதற்கான தக்க முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியளிக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும்.

53. பெருகி வரும் மின் தேவையை நிறைவு செய்ய, மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்குத் தக்க உதவிகளை இந்த அரசு, அளிக்கும். மின்சக்தி கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும். மின்வழங்கல் தரத்தை மேம்படுத்த உரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 01.01.2003-லிருந்து மின்சக்தி வழங்கல் முறையில் கொண்டு வரப்பட்ட மாற்றத்தின் அடிப்படையில், மின் பகிர்மான அமைப்பில் செயல்முறை இயக்க அலைவரிசை, 49.5 ஹெர்ட்ஸ் (hertz) மற்றும் 50.5 ஹெர்ட்ஸ்க்கு (hertz) இடையில் அமையுமாறு கவனித்துக் கொள்ளப்படுகிறது. இது, மிகப் பெரிய முன்னேற்றமாகும். மின்வழங்கலின் தரத்தை மேலும் மேம்படுத்த, மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் ஆகியவற்றில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம்.

54. தொழில்நுட்ப உத்திகளை ஈர்த்துத் தக்கவைத்துக் கொள்ளுதல், நவீன மயமாக்கல் மற்றும் தரம் உயர்த்துதல் ஆகியவை ஊக்குவிக்கப்படும். நிலை உயர்த்தத் திட்டமிட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்ய புதிய கொள்கை ஒன்றை நாங்கள் உருவாக்குவோம். பன்னாட்டு அங்காடிகளில் அவைகளின் போட்டித் திறனை அதிகரிக்கச் செய்வதை வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும்.

55. டாக்டர் இராஜா J. செல்லையா அவர்களின் தலைமையிலான வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம், மாநில அளவிலான வரிவிதிப்புச் சீர்திருத்தங்கள் பற்றிப் பரிசீலித்து வருகிறது. மாநில மதிப்புக் கூட்டப்பட்ட வரி முறைக்குத் தற்போதைய முறையிலிருந்து மாறலாம் என அது பரிந்துரை அளித்துள்ளது. தேசிய அளவிலான ஒருமித்த கருத்தின் அடிப்படையில் நாங்கள் இதனைச் செயல்படுத்துவோம். இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட நேரிடும். இருப்பினும், உற்பத்தித் துறைகளைப் பொறுத்தவரை இடு பொருட்களுக்கான செலுத்தப்பட்ட வரிக்கு தக்கவகையில் சரிக்கட்டல் கிடைக்குமென்பதாலும், பலநிலை வரிவிதிப்பினால் ஏற்படும் பாதிப்புகள் அறவே நீக்கப்படுமென்பதாலும், இந்த வரிவிதிப்புமுறை ஒரு வரப்பிரசாதமாக அமையும். ஆணையம் தெரிவித்துள்ள ஏனைய பரிந்துரைகளையும் நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அவை பற்றிய விவரங்கள், இந்த வரவு–செலவுத் திட்டத்தின் ஏனைய பிரிவுகளில் இடம் பெற்றுள்ளன.


56. தரமான கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்குத் தக்க முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியுள்ளது. தரமான கட்டமைப்பு வசதியைச் செய்துகொடுக்க நாம் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதால் இது பற்றி நான் தனியாகத் தெரிவிக்கவிருக்கிறேன். ஏற்றுமதியை நோக்கமாக கொண்ட தொழிற் பிரிவுகள் அமைந்துள்ள இடங்களில் கட்டமைப்பு வசதியை, பன்னாட்டுத் தரங்களுக்கு இணையாக நிலை உயர்த்த இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும். அதே சமயத்தில், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மின்சக்தி, நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதி ஆகியவைகளை உள்ளடக்கிய பொது கட்டமைப்பு வசதிகள் மீது தனிக் கவனம் செலுத்தப்படும். மேலும், சென்னைப் பெரு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

57. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற் பிரிவுகள் அமைந்துள்ள இடங்களில் கட்டமைப்பு வசதியை மேம்படுத்த மத்திய அரசின் அஸைடு(ASIDE) திட்டம் பயன்படுத்தப்படும். மத்திய அரசின் தொழில் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தினை பயன்படுத்தி, உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில், தோல், துணி, பம்புகள் மற்றும் மோட்டார்கள், வாகனங்களின் பாகங்கள், இயந்திரக் கருவிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் போன்ற பிரிவுகளில் உருவாகியுள்ள தொழிற்பிரிவுக் குழுமங்களை (Clusters) மேம்படுத்துவோம்.

58. தமிழ்நாடு, ஒரு கடலோர மாநிலமாக இருப்பதால், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சி உத்தியை நாம் பின்பற்ற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குறித்த மாநில அரசின் கொள்கைக்கு அண்மையில் ஒப்புதலளித்துள்ளார்கள். தூத்துக்குடி, எண்ணூர், சென்னை ஆகிய இடங்களில் தற்போதுள்ள துறைமுகங்களுக்கு அருகில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்க இக்கொள்கை உதவும்.

59. தோல், துணிகள், வாகனங்கள் மற்றும் அவைகளின் துணை பாகங்கள், ரப்பர், வேளாண் பதனிடுதல் போன்றவை, விரைவான வளர்ச்சிக்குத் தேவையான, முக்கிய தொழிற்பிரிவுகள் என்று அரசு கண்டறிந்துள்ளது. இந்தத் தொழிற்பிரிவுகளை அதிவிரைவில் மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 'தனித் தனி இயக்கங்களை' ஏற்படுத்த நாங்கள் கருதியுள்ளோம். தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளுடன் சேர்ந்து இப்பணி மேற்கொள்ளப்படும்.

60. கார்னெல் (Cornell) பல்கலைக் கழகத்துடன் இணைந்து உயிரி-தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான பணிகள் வரும் ஆண்டில் தொடங்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில், சுற்றுப்புற சூழல் வளம் சார்ந்த உற்பத்திக்கான தொழிற்பூங்கா (Eco-enterprises Park) நிறுவப்படும்.




61. சிறிய, நடுத்தர தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க வேண்டும். வலுமிக்க பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கும், வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், துடிப்புடைய சிறிய, நடுத்தர தொழில்முனைவோர்துறை இன்றியமையாத துறை ஆகும் என்பது நாம் சீன நாட்டிலிருந்து அறியும் பாடமாகும். தொழில்நுட்பங்களை நிலையுயர்த்தும் திட்டத்திற்கும், நவீனமயமாக்கல் திட்டத்திற்கும் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறுதொழில் பிரிவுகள் தங்களுடைய தொழில் பிரிவுகளை நிலை உயர்த்தி, சந்தையில் போட்டியிடுவதற்கு ஏற்றதாக இருக்கும் வகையில், இவற்றிற்கு அரசு வட்டி உதவித்தொகை வழங்கப்படும். இது போலவே, தேசிய சம பங்கு நிதியத்தின் (National Equity Fund Scheme) கீழ் தொடங்கப்பட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு, வட்டி உதவித்தொகை வழங்கும் திட்டம் நீட்டிக்கப்படும். இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

62. மிகச்சிறிய தொழில் பிரிவுகளுக்கும் (Tiny Sector), துறைகளுக்கும், இதுபோன்ற திட்டம் தொடங்கப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறுதொழில் பிரிவுகள், ஐ.எஸ்.ஓ.(ISO) சான்றிதழ் பெறுவதற்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதற்கும், வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் மிகச் சிறு தொழில்களுக்குத் தக்க ஊக்கம் அளிப்பதில், இந் நடவடிக்கைகள் பெரிதும் உதவும்.

63. கிண்டி, அம்பத்தூர் போன்ற தொழிற் பேட்டைகளை முற்றிலுமாக நிலையுயர்த்துவது அவசியமாகும். விரிவான ஆய்விற்குப் பின்னர், இத்தொழிற்பேட்டை ஒவ்வொன்றிலும் ரூ.6 கோடி அளவில் முதலீடு செய்யும் திட்டத்தை வகுத்துள்ளோம்.

இதனால், இத்தொழிற்பேட்டைகளில், சாலைகள், விளக்குகள், கழிவுநீர் அகற்றும் வசதி, வடிகால் போன்ற நிலையான கட்டமைப்பு வசதிகளுக்கு வகைசெய்ய இயலும். இத்தொழிற்பேட்டைகள் வரும் ஆண்டில், மீண்டும் முதன்மை நிலைக்கு திரும்பும் வகையில் அவை சீரமைக்கப்படும். இத்தொழிற்பேட்டைகளில் புதிய தொழில் பிரிவுகள் நிறுவுவதை நாங்கள் ஊக்குவிப்போம். பொதுத்துறை மற்றும் தனியார் துறை பங்கேற்கும் வகையில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த, தொழிற்பேட்டையின் கூட்டமைப்பு மற்றும் சிட்கோ ஆகியவற்றிற்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும், இடையே "வருவாய் பகிர்வு ஏற்பாட்டு முறை" வகுக்கப்படும்.

**64.** துணித் தொழில் குறித்து இப்போது நான் எடுத்துரைக்க விழைகிறேன். துணித் தொழிலுக்காக தனியான இயக்கம் ஒன்றை நாங்கள் பின்பற்றுவோம். தமிழ்நாடு, நெய்தல் மற்றும் பின்னலாடை ஆகிய இரு பிரிவுகளைக் கொண்ட இத் தொழில் பாரம்பரிய வல்லமையை பெற்றதாக இருந்துவருகிறது. இந்தத் தொழில், மிக இடர்பாடான கால கட்டத்தை எதிர்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் கிடைக்கும் வாய்ப்புகளைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள முற்போக்கு சிந்தனையுடன் நம்மை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். புதியதாக துவக்கப்பட்ட துணித் தொழில் இயக்கம் இந்த தொழிலில் உள்ள அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்து, இந்த தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கத் தேவையான திட்டங்களை மேற்கொள்ளும். குறிப்பாக, பின்வரும் புதிய முயற்சிகளை கருத்தில் கொண்டுள்ளோம்.




- ❖ தரமான பருத்தி உற்பத்தியைப் பெருக்கு வதற்கும், துணித் தொழிலை அதன் இடுபொருள்களுக்கான தொழிற் பிரிவு களுடன் ஒருங்கிணைப்பதற்கும் தனிக் கவனம் செலுத்துதல்.

- ❖ பயிற்சித் திட்டங்கள் குறித்தும், நவீன, நிலை உயர்த்தப்பட்ட உற்பத்தி ஏற்பாட்டு முறைக்கான உத்திகள் குறித்தும் கவனம் செலுத்துவதற்காக, தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் (SIMA) ஒத்துழைப்புடன் துணித் தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துதல். தொழிலாளர்களுக்கு மறு பயிற்சி அளித்து மீண்டும் இந்த தொழிலில் அவர்களை ஈர்த்துக்கொள்ள இயலும் வகையில் இந்தவசதி பயன்படுத்திக் கொள்ளப்படும்.

- ❖ நவீனமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு, பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைக்கும் வகையில் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனங்களுடன், தொழிலாளர் மறுபயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்த தக்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுதல்.

- ❖ புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த நெசவு முறையை மேற்கொள்ளுமாறு தொழில் முனைவர்களை ஊக்குவித்தல்.

- ❖ தற்போதுள்ள நூற்புத் திறனை நவீன மயமாக்குதல்;

- ❖ நெசவுத்தறிநாடா இல்லாத விசைத்தறி வளாகங்களை ஊக்குவித்தல்.

- ❖ சென்னை மற்றும் திருப்பூர் அருகே ஆடைப் பூங்காக்கள் அமைத்தல்.

**65. 2005**-ஆம் ஆண்டில் உலக வர்த்தக அமைப்புக் கோட்பாடுகள் செயல்முறைக்கு வருவதற்கேற்ப தம்மை தயார்செய்துகொள்ள உதவும் வகையில், துணித் தொழிலுக்கு ஏற்ற முக்கியத்துவம் அளிக்கும் வண்ணம் இத்தொழில் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகளுக்கு வருமாண்டில் மனநிறைவளிக்கும் வகையில் தீர்வுகாண இயலும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

**66.** தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களின் நிலைமையைச் சீர்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சிகளை இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். குறைந்த விலை சேலைகள் மற்றும் வேட்டிகள் விற்பனைக்கான புதிய சந்தை அடிப்படையிலான முயற்சியினால் தேங்கிக்கிடந்த துணிகளின் இருப்பு அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. **2003–2004** ஆம் ஆண்டில் நெசவாளர்கள் தங்களது உற்பத்தி முறைகளை நவீனப்படுத்திக் கொள்வதற்கும் மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற பெரியதொரு திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். **2003–2004**-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சந்தை ஊக்கத்

தொகை மற்றும் கைத்தறித் தள்ளுபடி ஆகியவற்றிற்கு ரூ.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


67. பொருளாதார வளர்ச்சியில் கட்டுமானத் தொழில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். கட்டுமானப் பொருட்கள் எளிதாகக் கிடைப்பது இத்தொழில் பெரிதும் வளர்ச்சி அடைவதற்கு வகை செய்யும். கட்டுமானப் பொருட்கள் கிடைப்பதை அதிகரிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளார்கள். இதனால் அவற்றின்விலை கட்டுப்படுத்தப்பட்டு இப்பொருட்களுக் கான தேவை அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும். மணல் மற்றும் ஏனைய பொருட்கள் கிடைக்கப் பெறுவதில் இன்னும் சில இடர்ப்பாடுகள் உள்ளன. கட்டுமானப் பொருட்களை வழங்குதல், கட்டுமானத் தொழிலை உரியவாறு முறைப்படுத்துதல் ஆகியவை தொடர்பான அனைத்து அம்சங்களையும் பரிசீலிப்பதற்காக தலைமைச் செயலாளரின் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்றை நாங்கள் அமைப்போம். 3 மாத கால அளவில் அறிக்கையை அளிக்கும்படி இக்குழு கேட்டுக் கொள்ளப்படும். அதன் பின்னர், நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

68. தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. தொழிலாளர்களது உற்பத்தித் திறன் மேம்பாடு மற்றும் உயர் வருவாய் மூலமாக இது எய்தப்பட வேண்டும். 2002–2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் 4889 பயனாளிகளுக்கு ரூ.2.56 கோடி உதவித் தொகை வழங்கியது. தொழில்துறையுடன் இணைந்து நவீன உற்பத்தி முறைகளுக்கேற்ற வகையில் தொழிலாளர் களுக்கு மறுபயிற்சி அளிப்பதற்கான பயிற்சித் திட்டங்களை வகுக்க முனைந்துள்ளோம். வரும் நிதியாண்டில் பீடித் தொழிலாளர்களுக்காக, 2000 புதிய வீடுகள் கட்டத் திட்டமிட்டுள்ளோம் என்பதை அறிவதில் மாண்புமிகு அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். தமிழ்நாடு தொழில் அமைதியின் பெட்டகமாகத் திகழ்ந்து வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் தொழில்துறையில் இணக்கமான சூழல் அமையப் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம். துணித்துறை தொழிலாளர்களது ஊதியப் பிரச்சினைகளைத் தீர்க்க சிறப்புத் தொழில் தீர்ப்பாயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம்.

## கட்டமைப்பு வசதி மேம்பாடு

69. 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், முக்கியத்துவம் அளிக்கப்பட்ட அம்சங்களில், தரமான கட்டமைப்பு வசதிகளை மிக விரைவில் மேம்படுத்துவதும் ஒன்றாகும். தரமான கட்டமைப்பு வசதிகள் முழுமையான பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பது தற்போது வெகுவாக ஏற்கப்பட்டுள்ள கருத்தாகும். தரத்தில் எந்த அளவிலும் குறைவின்றி கட்டமைப்பு வசதிகள் ஏற்கத்தக்க செலவில் கிடைக்கச் செய்வதை நாம் உறுதி செய்யவேண்டும். கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அதற்கான நிதி ஆதாரங்கள் பற்றிய முழுமையான ஓர் அறிவார்ந்த நுண்நோக்கம் இதற்குத் தேவைப்படுகிறது. எனது முந்தைய நிதிநிலை அறிக்கையில் வணிக வரியின் மீதான மேல்வரி கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஒன்றை உருவாக்கப் பயன்படுத்தப்படும் என்று கூறியிருந்தேன். மாநில மதிப்புக்கூட்டு வரி (State VAT System) முறையில் இத்தகைய மேல்வரி விதிக்க இயலாது. ஆகையால் வரவு–செலவுத் திட்டத்திலிருந்து ஒரு தனி ஒதுக்கீடு மூலமாக இந்தக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். இதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

70. தரமான கட்டமைப்பு வசதிகளை விரைவாக வழங்குவதற்கு, அதிக அளவில் மூலதனம் தேவைப்படுகிறது. இந்த பிரம்மாண்டமான பணியை அரசு மட்டுமே தானாக மேற்கொள்வது சாத்தியமில்லை. நிதி ஆதாயம் மிகக் குறைவாக இருந்ததால், கட்டமைப்பு வசதிப் பணிகளுக்கு, தனியார் மூலதனம் முன்னர் கிடைக்கப் பெறாமல் இருந்தது. சலுகை ஒப்பந்தங்கள், பயனாளிகளின் பங்கேற்பு, ஏற்கத்தக்க அளவிலான பயன்பாட்டு கட்டணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில்




பொதுத் துறையும் தனியார் துறையும் பங்கேற்கும் கொள்கை வடிவில் இந்தப் பிரச்சினைக்கு உலகம் முழுவதிலும் தீர்வு காணப்பட்டு வருகிறது. மைய அரசின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், கட்டமைப்பு வசதிகளில் உயரிய அளவிற்கு மூலதனம் கிடைக்கச் செய்ய ஆதாய இழப்பை ஈடுசெய்யும் வகையில் நிதி உதவி செய்யும் கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையையும், தற்போதுள்ள பிற ஏற்பாடுகளையும் ஆராய்ந்து தமிழ்நாட்டில் கட்டமைப்பு வசதித் திட்டங்களில் பொதுத் துறை, தனியார் துறை பங்கேற்பிற்கு வகை செய்யும் தக்கதொரு சட்டமுன் வடிவை சட்டப் பேரவையின்

நடப்புக் கூட்டத் தொடரில் நிறைவேற்றக் கருதியுள்ளோம். சலுகை ஒப்பந்தங்கள், எதிர்பாராது எழும் பொறுப்புகளை பகிர்ந்துகொள்ளுதல், திட்ட வடிவாக்கம் மற்றும் செயலாக்கம் போன்றவை இந்தச் சட்டத்தில் இடம்பெறும்.

71. எரிசக்தித் துறை மேம்பாட்டிற்கு நாங்கள் தனிக் கவனம் செலுத்தி வருவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநிலத்தில், புதிதாக மின் உற்பத்தித் திறனைப் பெருக்க சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். 1000 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான கூட்டு முயற்சியாக, தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், தேசிய அனல் மின் நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று 2002-ஆம் ஆண்டு ஜூலையில் கையெழுத்தானது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.4000 கோடியாகும். இத்திட்டம் வட சென்னைப் பகுதியில் அமையும். இத்திட்டம் குறித்த விரிவான அறிக்கை, தயாரிக்கப்பட்டு வருகிறது. நிறைவேற்றப்பட்டபின் இது, மாநிலத்தில் மின் உற்பத்தித் திறனை மிகப் பெரிய அளவில் அதிகரிக்கச் செய்யும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தமிழ்நாடு மின் வாரியம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக, ரூ.4000 கோடி செலவில், தூத்துக்குடியில், 1000 மெகாவாட் மின்திறன் கொண்ட கடற்கரையோர மின் உற்பத்தி நிலையம் ஒன்று புதிதாக அமைக்கப்படும் என்று நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கூடங்குளத்தில், 2000 மெகாவாட் திறன்கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை விரைவில் ஏற்படுத்துவதற்கு, நாங்கள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு, ரூ.13000 கோடியாகும். இந்த இடத்தில், மேலும் கூடுதலாக 2000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை சேர்ப்பதற்கு, மைய அரசினை கேட்டுக் கொள்வோம். காற்று எரிசக்தி, சூரிய வெப்ப எரிசக்தி, உயிரினக் கழிவு எரிசக்தி போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துவதற்கும் நாங்கள் போதிய முக்கியத்துவம் அளிப்போம். மைய மின் கூட்டமைப்பிலிருந்தும் தனியார் மின்சக்தி நிலையங்கள் (IPPs) ஆகியவற்றிலிருந்தும் கிடைக்கும் மின்சக்தியையும் கணக்கில் கொண்டால் வருங்காலத்திலும், மின் சக்தியில் தன்னிறைவு பெற்றதாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கும்.

72. இரண்டு பருவமழைகள் பொய்த்து அதன் விளைவாக புனல் மின்சக்தி உற்பத்தியில் தொய்வு ஏற்பட்டாலும், தமிழ்நாட்டில் மின்வெட்டு இல்லாதிருப்பது பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். தற்போது வழங்கப்படும் எரிசக்தியின் தரம் குறித்து அதிக கவனம் செலுத்துகிறோம். வழங்கப்படும் எரிசக்தியின் மின் அலை அளவு அதிகரிக்கப்பட்டு அதன் மூலம் எரிசக்தியின் தரமும் கணிசமான அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. மின் வழங்கலில் நல்ல தரத்தை உறுதிசெய்ய மின் ஏற்பாட்டு முறை மற்றும் மின்கட்டமைப்பு மேம்பாட்டில் கணிசமான அளவிற்கு நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம். 2003–2004–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியத்தின் திட்ட முதலீடு ரூ.1287 கோடி ஆகும்.

73. 2007-ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமங்களுக்கும் 100 சதவீதம் மின்வசதி செய்து கொடுப்பது என்பது மத்திய அரசின் இலக்காக இருக்க, இந்த இலக்கினை 1992-ஆம் ஆண்டிலேயே, தமிழ்நாடு எய்திவிட்டது. எங்களது அரசு ஆட்சியில் இருந்தபோது தான் இந்தச் சாதனை நிகழ்ந்தது. 2007–ஆம் ஆண்டுக்குள் நிலையான மற்றும் தரமான மின்சக்தி வழங்கப்படும் என்ற உறுதிப்பாட்டுடன், வீடுகள் அனைத்திற்கும் 100 சதவீதம் மின்வசதியளிப்பதை தற்போது நாம் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம். இந்த இலக்கை அடைவதில் தமிழ்நாடு தான் முதன் மாநிலமாக இருக்கும்.

74. இந்த அரசு, 1995-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தயாரிக்கப்பட்டு, நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த தமிழ்நாடு சாலைத்துறைத் திட்டம், தற்போது ரூ.2118 கோடி செலவில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பிற மாநிலங்கள், சாலைத் துறை மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளடக்கிய வெளிநாட்டு உதவிபெறும் பல திட்டங்களைப் பெற்றபோது, முந்தைய அரசு இவ்வாறான திட்டங்களை இழந்தது உண்மையிலேயே




துரதிர்ஷ்டம்தான். இத்திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவருவதில் நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், உறுதியான மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்துள்ளார்கள். உலக வங்கியுடன் இத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தை முடிவடையும் நிலையில் உள்ளது. 2003-ஜூன் திங்களில் இது தொடர்பான ஒப்பந்தம் முடிவுறும் என்று நாங்கள் நம்புகிறோம். 732 கி.மீ. நீளச் சாலைகள் இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்படும். இதன் முக்கியப் பகுதிகள், நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான கிழக்கு

கடற்கரையோர நெடுஞ்சாலை, ஆற்காடு முதல் திருவாரூர் வரையிலான மாநில நெடுஞ்சாலை மற்றும் 14 முக்கிய புறவழிச் சாலைகள் ஆகியனவாகும்.

75. சாலை மேம்பாட்டில் பொதுத் துறையும் தனியார் துறையும் பங்கு பெறுவதை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பது குறித்து நாம் விரிவாகப் பரிசீலித்துள்ளோம். மத்திய நிதியமைச்சர், 2003–2004-ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையில், நாடு முழுவதிலும் தேசிய நெடுஞ்சாலைகளின் விரைந்த மேம்பாட்டிற்காக தனியார்துறை முன்வந்தால், ஆதாயத்தில் இழப்பு ஏற்படுகையில் அதனை ஈடுசெய்யும் (Viability Gap Funding) நிதியுதவித் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார். ஏற்புடைய பயனாளிக் கட்டணத்திற்குப் பிறகும் பற்றாக்குறை நீடித்தால், ஈடுசெய்து கொள்வதற்காக அரசு அளிக்கும் நிதி ஆதரவுடன், சாலை மேம்பாட்டில் தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தும் அடிப்படையில் இது அமைந்ததாகும். மாநில நெடுஞ்சாலைகள் பலவற்றையும், முக்கியமான மாவட்டச் சாலைகளையும் மேம்படுத்தும் பணியை, இந்த அடிப்படையில் நிறைவேற்ற நாம் மேற் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

76. மாண்புமிகு முதலமைச்சரின் நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 1800 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலைகளும் முக்கியமான மாவட்டச் சாலைகளும் விரைந்த மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 3 ஆண்டு கால அளவில் முடிக்கப்படும். இந்தச் சாலைகளில் தனிப்பட்ட பிரிவுகளை இனங்கண்டறிந்து, விபத்து மற்றும் உடனடி சிகிச்சைக்கான சிறப்பு வசதி, நெடுஞ்சாலை காவல் பணி மற்றும் நடைபாதை வசதிகள் ஆகியவற்றுடன் இருவழிப் பாதைகளாக இந்தச் சாலைகளை நிலை உயர்த்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு, ரூ.1500 கோடி ஆகும். தேவையான அளவுக்கு அரசு நிதியுதவி அளிக்கும். எஞ்சிய தொகை, தனியார் பங்கேற்பின் மூலம் பெறப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள இழப்பு ஏற்படுகையில் அதனை ஈடுசெய்துகொள்ளும் ஏற்பாட்டு முறையாக அரசின் நிதியுதவி அளிக்கப்படும். தமிழ்நாட்டில் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளுக்குப் புதிய மெருகேற்றி உலகளவில் ஒப்புநோக்கும் தரத்துடன் அவைகள் மேம்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.

77. 2003–2004-ஆம் ஆண்டில் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைப் பராமரிப்புப் பணிகள் சிறப்புக் கவனம் பெறும். 2003–2004-ஆம் ஆண்டில் 5000 கி.மீ. நீளச் சாலைகளை புதுப்பிக்க வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.180 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில், ஒதுக்கீட்டு அளவு மேலும் அதிகரிக்கப்படும். மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கியமான மாவட்டச் சாலைகளை உள்ளடக்கிய சாலைக் கட்டமைப்பைப் பராமரிப்பதை உறுதி செய்யும் வகையில், அரசுப் பொது கணக்குப் பிரிவில் ரூ.120 கோடி ஒதுக்கீட்டுடன் சாலைப் பராமரிப்பு நிதி ஒன்றை ஏற்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த நிதி, மாநிலத்திலுள்ள முக்கியமான சாலைக் கட்டமைப்பைப் பராமரிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

78. தமிழ்நாடு கடல்சார் வாரியம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் சிறு துறைமுகங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்துள்ளது. சென்னை பெட்ரோலிய நிறுவனம், ரூ.100 கோடி திட்டச் செலவில், நாகப்பட்டினம் துறைமுகத்தை அண்மையில் விரிவுபடுத்தியுள்ளது. இது, 0.5 மில்லியன் டன் கச்சா எண்ணெய் வந்து சேர்வதற்கு உதவியாக இருக்கும். பொதுத் துறை – தனியார் துறை பங்கேற்புடன், ரூ.250 கோடி செலவில் கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சேது சமுத்திரம் திட்டத்திற்கான பணி இனியும் தாமதமின்றி உரிய நேரத்தில் தொடங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம்.

79. சென்னை துறைமுகத்திற்கான மேம்பாடு மற்றும் சென்னையில் இரண்டாவது விமான நிலையம் அமைப்பது ஆகியவை மத்திய அரசின் 2003–2004-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இடம்பெறாததைக் கண்டு நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம். நம்முடைய ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சி இலக்கினை எய்திட சென்னை துறைமுகத்தின் செயல்பாடு முழுமையாக நவீனப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. சென்னைத் துறைமுகத்தை நவீனப்படுத்தும் பணியை விரைந்து நிறைவேற்றுமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும். சென்னையில் இரண்டாவது விமான நிலையம் கட்டுவது குறித்து மத்திய அரசு விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

### நகர்ப்பகுதி மேம்பாடு

80. நகர்ப்பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளின் தரம் மக்கள் நல்வாழ்விற்கு இன்றியமையாத தோடல்லாமல், ஒரு மாநிலத்தின் வளர்ச்சி நிலையினை எடுத்துக்காட்டும் முக்கிய அளவுகோலாகவும் திகழ்கிறது. இத்துறைக்கு முன்னுரிமை அளிப்பதென்று நாங்கள் தீர்மானித்துள்ளோம். மாநகராட்சிப் பகுதிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தக்க முதலீடு செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.

81. நமது அரசு முன்னர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்நாடு நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதி மற்றும் நிதிப் பணிகள் நிறுவனத்தை அமைக்க (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited - TNUIFSL) நடவடிக்கைகள் மேற்கொண்டது. இந்த நிறுவனம் பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கழிவு நீரகற்றும் திட்டங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், பேருந்து நிலையங்கள் அமைத்தல் முதலியன போன்ற நகர்ப்பகுதித் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும்

பணியை இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், இந்த நிறுவனம் ரூ. 200 கோடி அளவிற்கு நகர்ப்பகுதி கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கும். நகர்ப்பகுதி குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் திட்டங்களுக்கு தனி நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், ரூ.200 கோடி அளவுக்கு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகம் (Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited - TUFIDCO) முடுக்கிவிடப்படும்

**82.** நடப்பாண்டில் கடும் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், மாநில வரி வருவாயிலிருந்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய பங்குகள், மாதந்தோறும் வழங்கப்பட்டு வருவதை அறிந்து அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள், தங்களுடைய சொந்த நிதியாதாரங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். நகர்ப்பகுதி வசதிகளைச் செய்து கொடுக்க, பொதுத் துறையுடன் தனியார் துறையின் பங்கேற்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் தங்களது வளர்ச்சித் திட்டங்களுக்குத் தக்க நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொழில் வரி வீதங்கள் 1.10.2003 அன்று முதல் மாற்றியமைக்கப்பட இருக்கின்றன. சட்டப்படி உள்ளாட்சி அமைப்புகளே இந்த மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

**83.** திருப்பூர் நகராட்சி மற்றும் வழியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் ரூ.1026 கோடி செலவிலான குடிநீர் வழங்கல் பெருந் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். பொதுத் துறையுடன் தனியார் துறை பங்கேற்பிற்கு இது தன்னிகரற்ற முன் மாதிரியாகும். இத்திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்ட நிலையில், 2003 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் நிதி நிறுவனங்கள் தேவையான கடன் தொகைகளை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.40.17 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த அரசின் மிகப் பெரிய சாதனையோடல்லாமல், இந்தியாவிலேயே தனித் தன்மைப் பெற்ற திட்டமாகவும் அமையும்.

**84.** நகர்ப்பகுதிகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டில் தரமான எரிசக்தி முக்கியப் பங்குபெறுகிறது. 11 புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல், 8 துணை மின்நிலையங்களின் எரிசக்தி மாற்றிகளின் திறனை அதிகரித்தல் மற்றும் மாநிலத்தில் நகர்ப் பகுதிகளில் 696 புதிய மின் பகிர்வு மாற்றிகளை நிறுவுதல் ஆகிய பணிகளுக்கு, ரூ.155.50 கோடி முதலீடுசெய்ய இவ்வரசு முடிவு செய்துள்ளது.

**85.** நகர்ப் பகுதிகள் அனைத்திலும் அறிவியல் அடிப்படையிலான திடக்கழிவு மேலாண்மை மற்றும் திடக்கழிவு அகற்றுதல் ஆகியவற்றுக்கான அத்தியாவசியத் தேவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனி முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். ஆரம்ப நிலையிலேயே பிளாஸ்டிக் கழிவுகளைப் பிரித்து அகற்றுவதற்கு முக்கியத்துவம் அளித்து, குப்பையை அகற்றுவதற்கு தனி நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. திடக்கழிவைக் கொட்டி நிரப்பும் வகையில் தகுந்த இடங்களைத் தேர்வு செய்து இதற்குத் தீர்வுகாணும் வகையில் நகராட்சி மன்றங்கள் ஊக்குவிக்கப்படும்.

**86.** வேலைவாய்ப்பிற்கு ஆதாரமாக இருந்துவருகிற வீட்டுவசதித் துறைக்கு அரசு சிறப்பான முறையில் ஊக்கம் அளிக்கும். பொதுத்துறையுடன் தனியார் துறை பங்கேற்பின் அடிப்படையில் வீட்டுவசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏற்ப, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சீரமைக்கப்படும். சென்னை பெருநகர் பகுதியிலும் ஏனைய நகர்ப்பகுதிகளிலும், முறையான உறைவிடப் பகுதிகளை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும். தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம், தனியார் துறை முதலீட்டாளர்களின் உதவியுடன், புதிய உறைவிடப் பகுதிகளை, விரைவில் மேம்படுத்த இயலும் வகையில், இந்தப் பகுதிகளில் தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்படும். வீட்டுவசதித் துறையின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படுவதற்காக, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளை நாங்கள் ஆய்வு செய்யவிருக்கிறோம்.

**87.** பதினோராம் நிதிக்குழு ஒதுக்கீடு செய்த தனிப் பிரச்சினை குறித்த மானிய உதவியுடன் (Special Problem Grants), ரூ.20 கோடி செலவில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 2116 குடியிருப்புப் பகுதிகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளும். மத்திய அரசின் நிதியுதவியுடன், வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், நகர்ப்பகுதிகளிலுள்ள குடிசைப் பகுதிகளில், மொத்தம் ரூ.20 கோடி செலவில் 5000 தனி வீடுகள் கட்டப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், சென்னை மாநகரில் ஆற்றுக்கரைகளில் அமைந்துள்ள 3000 குடிசை வீடுகளை வேறு இடங்களுக்கு மாற்றும் முழுமையான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 2003–2004 ஆம் ஆண்டில் முடிவடையும். ஆற்றின் கரைகளில் வசிக்கின்ற எஞ்சியுள்ள குடும்பங்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதற்காக, மேலும் 8164 குடியிருப்புகள் கட்டப்படும்.

**88.** சென்னை பெருநகரப் பகுதியில், பல்லாண்டு காலமாகத் தக்க முதலீடுகள் இல்லாமல் போனதால் இப்பகுதி மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. தென் இந்தியாவின் முதன்மை மாநகர் என்ற பழம்பெருமையை மீண்டும் நிலைநாட்ட

வேண்டுமென்றால், இம்மாநகரில் உள்ள கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதற்குத்தக்க முதலீட்டுத் திட்டம் ஒன்றை நாம் தயாரிக்க வேண்டியுள்ளது. பெருமழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு, சாலைப் பராமரிப்பு மற்றும் நிலையுயர்த்துதல் போதிய அளவில் இல்லாமை, குடிநீர் பற்றாக்குறை, திடக் கழிவுகளை அகற்றும் பிரச்சினைகள் போன்றவை சென்னைப் பெருநகரப் பகுதி எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளில் அடங்கும். அடிப்படைப் பணிகளில் தரமான மேம்பாடுகளை, சென்னைப் பெருநகர்ப் பகுதி குடிமக்கள் கோரி வருகின்றனர். சென்னைப் பெருநகர்ப் பகுதி, நிறுவனங்கள் தங்களது தொழில்முறைத் தேவைகளை, வெளிக்கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகளுக்கும் (Business Process Outsourcing) மற்றும் பல உற்பத்தித்துறை நடவடிக்கைகளுக்கும் உலகளவில் முக்கியமான மையப்பகுதியாக உருவாகி வருகிறது.

**89.** கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளுக்குப் பின்னர், இப்பகுதியில் கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான ஒட்டுமொத்தத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அலுவல் முறையிலான பணிக்குழு ஒன்று தற்போது, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான, கட்டமைப்பு வசதி முதலீட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்காக, பத்தாண்டு காலத்தில் ரூ.18,000 கோடி முதலீடு தேவைப்படுமென கணக்கிடப்பட்டுள்ளது. நடுத்தர கால அளவில், அதாவது வரும் 5 ஆண்டுகளில், திட்ட முதலீடு ரூ.10,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகையில் கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டும் திட்டமொன்றை வடிவமைக்க தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட கட்டமைப்பு மேம்பாடு நிதியுதவிக் கழகத்துடன் (Infrastructure Development Finance Corporation) புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இந்த முதலீட்டுத் திட்டத்தை, ஆண்டுச் செயல் திட்டமாக (Annual Action Plan) மாற்றுவதில், அவர்களுடைய ஒத்துழைப்பை நாடுவோம்.

**90.** இத் திட்டத்திற்காக 2003–2004 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட நிதிநிலைக் குறிப்பில் ரூ.1780.75 கோடி செலவு மதிப்பீட்டிலான செயல் திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இந்த முதலீடு, அரசு, இப்பகுதியில் உள்ளடங்கிய உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் இப்பகுதியில் இயங்கும் மின்வாரியம் போன்ற பொது சேவை நிறுவனங்களால் மட்டுமின்றி பொதுத்துறை – தனியார்துறை பங்கேற்பின் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்செயல் திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சென்னைப் பெருநகர் கட்டமைப்பு மேம்பாட்டுக்குழு எனும் உயர்நிலை அமைப்பு ஒன்றினை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதி தென்னிந்தியாவிலேயே சிறந்த நகரம் எனும் தனக்கே உரித்தான பழம் பெருமையை மீளப் பெறுவதை இது உறுதி செய்யும்.

**பணிகள் துறை**

**91.** மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்திக் குறியீட்டில் (GSDP) பணிகள் துறையின் பங்கு, ஏறத்தாழ 50 சதவீதமாக அமைந்துள்ளது. இத்துறை, ஒட்டுமொத்த வளர்ச்சி இலக்கை எய்துவதற்கும் வேலைவாய்ப்பு வசதிகளை அளிப்பதற்கும் இன்றியமையாததாகும். இத்துறையில் பெரும் வளர்ச்சியைப் பெறுவதற்கேற்றவாறு தகுந்த கொள்கைகளை உருவாக்கவேண்டும்.

**92.** தகவல் தொழில்நுட்பவியல், நமது அன்றாட வாழ்க்கை முறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.9.2002-ஆம் நாளன்று மாநிலத்தின் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவித்தார்கள் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இந்த விரிவான கொள்கையில், தகவல் தொழில்நுட்பத் தொழிலில் வளர்ச்சியை எய்துவதற்கு எடுக்கப்பட்டுவருகிற அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கின்றன. சென்னை பெருநகரப் பகுதி, தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES) துறைக்கான முக்கியமான விருப்பத் தேர்வு இடமாக மேம்படுத்தப்படும். இதில், நிறுவனங்கள், தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக்கொள்முதல் வாயிலாகப் பெறும் (BPO) பணிகளும் அடங்கும். தகவல் தொழில்நுட்பவியலை கையாளும் நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் தங்களது தொழில்முறை தேவைகளை கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகளுக்கான உலகளாவிய மையமாகச் சென்னை உருவாகியுள்ளது. உலக வங்கி (World Bank), "ஏபிஎன் ஆம்ரோ (ABN Amro) வங்கி, ஸ்டேண்டர்டு சார்ட்டர்டு (Standard Chartered) வங்கி போன்ற முன்னணி வங்கிகளும், கவனமான தேர்வின் அடிப்படையில் சென்னையில், தங்களுடைய தொழில் முறை தேவைகளை கொள்முதல் செய்யும் மையங்களை (Business Process Centres) அமைத்துள்ளன. இந்த வலுவான கொள்கைத் திறன்களின் அடிப்படையில் நாம் மேலும் செயல்படுவோம். சென்னை பெருநகரப் பகுதியைத் தகவல் தொழில் நுட்பத்துறை சார்ந்த பேரிடரிலிருந்து மீட்கும் வசதிகளுடன் கூடிய முதல் அடுக்கு மையமாகவும், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகரங்களை இதற்குத் தக்க பக்கபலமாக இரண்டாம் அடுக்கு நிலை மையங்களாகவும் நாங்கள் உருவாக்குவோம்.

**93.** சென்னைக்கு அருகில் உள்ள சிறுசேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது என்பதை அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். சர்தார் பட்டேல் சாலையில் (காந்தி மண்டபம்) மத்திய கைலாசத்திற்கும், கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் உள்ள நெடுஞ்சாலையை ஒரு விரைவுப் பாதையாக மாற்ற வேண்டும் என்பது, தகவல்

தொழில்நுட்பத் தொழிலின் ஒரு நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்துள்ளது. ரூ.70 கோடி செலவில், உலகத்தரம் வாய்ந்த 6 வழி விரைவுப் பாதைத் திட்டத்தைச் செயற்படுத்த, தகவல்தொழில்நுட்ப எக்ஸ்பிரஸ் (ITEL) பாதை நிறுவனம் என்ற பெயரில் சிறப்பு நோக்க அமைப்பு ஒன்றை (Special Purpose Vehicle) ஏற்படுத்துவோம். இத்திட்டம், வருமாண்டில், பொதுத்துறை–தனியார் துறை பங்கேற்கும் வகையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் (TNRDC) நிறைவேற்றப்படும். இந்தப் பெரு முயற்சி, தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பின்(IT Corrider) விரைந்த வளர்ச்சியை உறுதி செய்யும்.

94. இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பின் ஓர் அங்கமாக, அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) ஒன்றை உருவாக்க இந்தியத் தொழில் குழுமத்துடன்(CII) இணைந்து செயல்பட்டு வருகிறோம். இந்த கருத்துருவின் மீதான முதல்நிலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக, இந்திய தொழில் குழுமம், உலகத் தரம்வாய்ந்த கலந்தாலோசனை நிறுவனம் ஒன்றை நியமித்துள்ளது. இந்தத் திட்டம் முழுவடிவம் பெற்றபின்னர் வருமாண்டில் இதற்கான பணிகளை மேற்கொள்வோம்.

95. தற்போதுள்ள டைடல் பூங்காவிற்கு அருகில் இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர்கள் ஆஸ்சென்டாஸ் (M/s. Ascendas) நிறுவனத்துடன் விரைவில் சேர்ந்து செயல்படவுள்ளது. இத்திட்டம், 15 ஏக்கர் பரப்பில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும். மூன்று கட்டங்களில் மொத்தம் 1.5 மில்லியன் சதுர அடி கட்டமைப்பு இடவசதி ஏற்படுத்தப்படும். சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் ஒருங்கிணைந்த மேம்பாடு குறித்தும் நாங்கள் கவனம் செலுத்துவோம். இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு ஒரு துணைத் திட்டமாக, இப்பகுதியில் தேவைக்கேற்ற உயர் தரமுள்ள வீட்டுவசதிகளை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இந்த இடத்தில் சிப்காட் நிறுவனம் சிங்கப்பூரிலுள்ள ஒரு கூட்டமைப்பின் துணையுடன் ஒருங்கிணைந்த வணிக மற்றும் வீட்டுவசதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதனால், இவ்விடத்தில் நிறுவனங்கள் தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக்கொள்முதல் செய்யும் மையங்களை (BPO) நிறுவுவதற்கும், தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்த பணி நிறுவனங்களை (ITES) துவக்குவதற்கும் வழி வகுக்கும்.

96. பணிகள் துறையில் சுற்றுலா முக்கியப் பங்கினை வகிக்கிறது. தமிழ்நாட்டை பெரியதொரு சுற்றுலா மையமாக தக்கமுறையில் விளம்பரப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டை இத்தகைய சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு, புகழ்பெற்ற விளம்பர நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறோம். பல்வேறு சுற்றுலா மையங்கள் மற்றும் தலங்களில் தக்க பொது கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்க வேண்டும். வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலாத் துறைக்கென, ரூ.26.79 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவை அடிப்படையில் இது மேலும் உயர்த்தப்படும்.

97. மத்திய அரசின் நிதியுதவியுடன், மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.19 கோடி செலவிலான ஒரு பெரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். எங்கள் திட்டத்தில், மாமல்லபுரம், கன்னியாகுமரி, ஊட்டி, ஏற்காடு, கொடைக்கானல் போன்ற முக்கியமான சுற்றுலா இடங்களைக் கண்டறிந்து, அவைகளை விரிவான முறையில் மேம்படுத்தும் பணிகளும் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட சுற்றுலாத் தடங்களின் (Tourist Circuit) மீது ஒருமித்த கவனம் செலுத்தப்படும். ஏனைய சுற்றுலா தலங்களில் அனைத்து வசதிகளையும் மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும்.

98. சுற்றுலா மேம்பாட்டிற்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுக்கும் முக்கிய அமைப்பாக அரசு செயலாற்ற வேண்டும். 31.12.2002 முதல் விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் செலுத்த வேண்டிய ஆடம்பர வரியை அதிகபட்சமாக 12.5 சதவீதம் அளவிற்குக் குறைத்துள்ளோம். 31.12.2002 முதல் கேளிக்கைப் பூங்காவிற்கான நுழைவுக் கட்டணம் மீது விதிக்கப்படும் ஆடம்பர வரியை, 10 சதவீதமாகக் குறைத்துள்ளோம். தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறையைப் பெருமளவில் ஊக்குவிப்பதே இவற்றின் நோக்கமாகும்.

99. இந்தியாவிலேயே முதல்முறையாக, சுற்றுலா குறித்த பன்னாட்டு (SKAL) எஸ்கேஏஎல் மாநாடு, 2003 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெறும். சென்னைப் பெருநகர்ப் பகுதி உலகளவில் தொழில் முறை தேவைகளை வெளிக் கொள்முதல் மூலம் பெறும் மையமாக (Outsourcing Hub) உருவாகி வரும் அதே நேரத்தில், சுற்றுலாத் துறையும் பெருமளவு முன்னேற்றத்தை எய்தும் என்று நாங்கள் உறுதியுடன் நம்புகிறோம்.

மனிதவள மேம்பாடு

100. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மனிதவள மேம்பாட்டிற்குச் செய்யப்படும் முதலீடு, பொருளாதார மாற்றங்களுக்கும், அனைத்து குடிமக்களுக்கும் உற்பத்தித் திறனுடன் கூடிய வாழ்க்கையை உறுதி செய்வதற்கும், இன்றியமையாதது ' என்பதை உணர்ந்துள்ளார்கள். கல்வி, நுட்பத்திறன் பெறுதல், தகவல்களை அறிதல் ஆகியவை, அறிவுத்திறனுள்ள சமுதாயத்தை உருவாக்க அடிப்படையாக அமைகின்றன. முறையாகத் திட்டமிட்ட முதலீடுகள் மற்றும், கல்வி, சுகாதாரம், குடும்பநலன், சமூக மேம்பாடு குறித்த பல்வேறு திட்டங்களை ஒருமுகப்படுத்தி செயற்படுத்துதல்


ஆகியவை, விரைவான, தரமான மனிதவள மேம்பாட்டை உறுதி செய்ய முக்கிய பங்காற்றுகின்றன.

**101.** அனைவருக்கும் கல்வி என்ற வகையில் 2001–2003 க்கான கால அளவில், 756 தொடக்கப்பள்ளிகளையும் 676 நடுநிலைப்பள்ளிகளையும் தொடங்கியுள்ளோம். 15க்கும் குறைவாக பள்ளி செல்லும் சிறார்கள் உள்ள சிறு குடியிருப்புப் பகுதிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில், 356 கல்வி உத்தரவாதத் திட்ட மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. முறையாகப் பள்ளிக்குச் சென்று பயிலும் வசதியற்ற சிறார்களையும் இத்திட்டத்தின் மூலம் முழுமையாக பயன்பெறச் செய்ய முடியும். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் பள்ளிக்கூடம் ஒன்று அமையப் பெறவேண்டும் என்ற இலக்கு 2003–2004-ஆம் ஆண்டில், எய்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**102.** இடைநிலைக் கல்வி, இப்போது உயர் முன்னுரிமையை பெற்றுள்ளது. இந்த அரசு, 2001–2003 கால அளவில், 220 உயர் நிலைப் பள்ளிகளையும், 260 மேனிலைப் பள்ளிகளையும் ஏற்கெனவே தொடங்கியுள்ளது. 30 புதிய உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 30 மேனிலைப் பள்ளிகள் 2003–2004-ஆம் ஆண்டில் தொடங்கப்படும். உயர்நிலை மற்றும் மேனிலை பள்ளிகளின் வசதிகளை நிலை உயர்த்துவதற்கான திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, வரும் ஆண்டில், ரூ.80.64 கோடி திட்டச் செலவில், 19 மாவட்டங்களில் 250 பள்ளிகள் எடுத்துக்கொள்ளப்படும். உயர்நிலைப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளின் தரமேம்பாடு, கல்வி நிறுவனங்களில் அதிக அளவில் மாணவர்களைத் தக்கவைக்க வழிவகுக்கும்.

**103.** தமிழ்நாட்டை, அறிவுத் திறன்பெற்ற, கணினி அறிவு மிக்க சமுதாயமாக மாற்ற வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டுள்ளார்கள். பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கணினி கல்வி அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. 2003–2004-ஆம் ஆண்டில், கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ், 200 மேனிலைப் பள்ளிகளைக் கொண்டு வரவேண்டுமென இந்த அரசு கருதுகிறது. வரும் ஆண்டில் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 75 மேனிலைப் பள்ளிகளுக்கும், அறிவியல் சாதனங்கள் வழங்கப்படும். புதிதாக உதயமாகும் துறைகளில் (Sunrise Sectors) தக்க வேலைவாய்ப்புகளைப் பெற ஆங்கிலம் மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதால், ஆங்கில மொழி கற்பிப்பதில் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். வரும் ஆண்டில் ரூ.1.69 கோடி செலவில், 300 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேனிலைப் பள்ளிகளில், ஆங்கில மொழி கற்பிப்பு ஆய்வகங்கள் தொடங்கப்படும்.

**104.** அரசு உறுதி அளித்தவாறு, வேலூரில், திருவள்ளுவர் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.




நடப்பு ஆண்டில், தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக் கழகம் பணிகளைத் தொடங்கியுள்ளது. மாநிலத்திலுள்ள அரசுக் கல்லூரிகள் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றப்பட்டதையடுத்து, அந்தக் கல்லூரிகளுக்கென, விரிவான வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரிகளில், வேலை நோக்குடைய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் இதில் அடங்கும். இந்தக் கல்வி நிறுவனங்களை நிலை உயர்த்த தேவையான நிதியுதவிக்காக, பல்கலைக்கழக மானியக் குழுவை அணுகியுள்ளோம்.

**105.** சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில், இது குறித்து உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில், இந்த அரசு ஒரு தெளிவான கொள்கையை வகுத்துள்ளது. நம்முடைய மாநிலம் நாட்டிலேயே அதிக அளவில் பொறியியல் கல்லூரிகளையும் அதிக அளவில் மாணவர் சேர்க்கையையும் கொண்டுள்ளது. நம்முடைய அறிவியல் மனித ஆற்றல், உலக அளவில் பெருமளவில் விரும்பிக் கேட்கப்படும் வகையில், தொழில்நுட்பக் கல்லூரிகள் தங்களது கட்டமைப்பு வசதிகளையும், பயிற்சித் தரத்தையும் மேம்படுத்திக் கொள்ளச் செய்வதே நம்முடைய முக்கியமான முயற்சி ஆகும். தமிழ்நாட்டிலுள்ள 240 பொறியியல் கல்லூரிகளை ஒரே இணையமைப்பின் கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.


**மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலன்**

**106.** தொடக்க நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் சிறந்த சுகாதாரக் கவனிப்பு வசதிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்த இவ்வரசு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. 2003–2004-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலனுக்காக ரூ.1380.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



107. தொடக்க நிலையில், கிராமங்களில் 8682 சுகாதார துணை நிலையங்கள் உள்ளன. இவற்றில், 6052 சுகாதார துணை நிலையங்களுக்குக் கட்டிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 385 புதிய சுகாதாரத் துணை நிலையங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில், மேலும் 300 நிலையங்களுக்குக் கட்டட வசதி செய்து தரப்படும். தொடக்கச் சுகாதார மையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறித்து இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதுவரையிலும், 58 தொடக்கச் சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 2003–2004–ஆம் ஆண்டில், மேலும் 35 தொடக்கச் சுகாதார நிலையங்களை நிலை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இவ்வகையில் இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 100 ஆகும். வட்ட மருத்துவமனைகள், அவ்வாறு அல்லாத ஏனைய மருத்துவமனைகள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட 100 தொடக்கச் சுகாதார மையங்கள் ஆகியவற்றின் பணி வசதிகளைக் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் சிறந்த மருத்துவக் கவனிப்பு வசதிகள் எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்வதே எங்களுடைய நோக்கம் ஆகும்.

108. தொடக்கச் சுகாதார கவனிப்பு குறித்து, தொடர்ந்து எங்களுடைய தனிக் கவனம் செலுத்தப்படுகின்ற அதே நேரத்தில், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் உள்ள மருத்துவ வசதிகளை வலுப்படுத்தவும் நாங்கள் செயல்படுவோம். ரூ.2.62 கோடி செலவில், தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவ மனைகளில், கூடுதல் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வரவு–செலவுத் திட்டம் வகை செய்கிறது. அடுத்த நிதியாண்டில் ரூ.6.20 கோடி செலவில் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் நவீன நோயறி வசதிகளை ஏற்படுத்தத் தனிக் கவனம் செலுத்தப்படும். இதில் சென்னையில் உள்ள மகளிர் நோயியல் மற்றும் மகப்பேறு மையம், மேலும் மகளிர் – குழந்தைகளுக்கான அரசினர் மருத்துவமனையில் ரூ. 2 கோடி செலவில் பிரசவப் பிரிவிற்கு இடவசதி அளிப்பதற்காகப் புதிய கட்டடங்கள் கட்டுவதும் அடங்கும். சென்னை அரசினர் மருத்துவமனையில் உள்ள பெர்னாட்டு கதிர்வீச்சியல் மையம், ரூ. 50 இலட்சம் செலவில் முழுமையாக நிலை உயர்த்தப்படும். கரூர் அரசினர் தலைமையிட மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக் கூடத்துடன் கூடிய 24 படுக்கை வசதிகள் கொண்ட பிரசவப் பிரிவிற்குக் கட்டடம் கட்டுவதற்கும் வரவு–செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையில் உள்ள அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 48 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவச் சிகிச்சைப் பரிவு ஒன்று கட்டப்படும்.




109. ஏற்கத்தக்க பயனீட்டாளர் கட்டணங்களின் மூலம் தரமான மருத்துவக் கவனிப்பும், பணி வசதியும் கிடைக்குமாறு செய்யும் கொள்கை மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. சந்தை நிலவர கட்டணத்துக்கும் குறைவாக, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் வழங்கும் சி.டி. ஸ்கேன் (CT Scan) மற்றும் எம்ஆர்ஐ (MRI) மருத்துவ வசதிகளுக்கான கேட்பு மற்றும் அவை பெற்றுள்ள பிரபலத்தன்மை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மாவட்ட மருத்துவமனைகளில் படிப்படியாக கட்டணம் வழங்கி சிகிச்சை பெறும் பிரிவுகளைக் கொண்டுவருவதன் மூலம் இந்த அணுகுமுறையை நாங்கள் மேலும் விரிவுபடுத்துவோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அனைவருக்கும் முற்றிலும் இலவசமாக, மருத்துவ வசதிகள் அளிப்பதே எங்களுடைய கொள்கை ஆகும். ஏற்கத்தக்க செலவில் தரமான மருத்துவச் சிகிச்சை பெற விரும்புகின்ற, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் தொகுதியினருக்கு சந்தை நிலவர கட்டண வீதங்களுக்கும் குறைவாக மருத்துவப் பணிகளை நாங்கள் அளிப்போம். தமிழ்நாடு, அதிலும் குறிப்பாக சென்னை மாநகரம், மருத்துவப் பணி வசதிகளுக்கு பெரும் பெயர் பெற்றுள்ளது. சென்னை மாநகரம்

இந்தியாவின் மருத்துவ வசதித் தலைநகரம் என சரியாகவே அழைக்கப்படுகிறது. உலகெங்கிலும் மருத்துவப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதில் இங்குள்ள நிறுவனங்களை ஈடுபடுத்துவதற்கான திட்டமொன்றைத் தீட்ட உள்ளோம்.

**110.** தமிழ்நாட்டில் தோராய குழந்தை பிறப்பு வீதம் (Crude Birth Rate) **1996** -ஆம் ஆண்டில் **1000** மக்கள் தொகைக்கு **19.5** என்ற அளவில் இருந்தது. இது, **2000** ஆம் ஆண்டில் **1000** மக்கள் தொகைக்கு **19.2** என்ற அளவில் முடங்கியுள்ளது. எனவே, குடும்ப நலத் திட்டங்களை நாம் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. வரும் நிதியாண்டில் இதற்குத் தனிக் கவனம் செலுத்தப்படும். குழந்தை இறப்பு வீதம், வளரிளம் பெண்களில் இரத்த சோகை, எடைக் குறைவான குழந்தைகள் பிறப்பது ஆகியவை போன்ற முக்கியமான உயிர் ஆதாரமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது. குழந்தை இறப்பு வீதம், **1996** -ஆம் ஆண்டில் **53** ஆக இருந்தது. அது, **2000**-ஆம் ஆண்டில் **51** ஆக மட்டுமே குறைந்துள்ளது. நமது அடிப்படை சுகாதாரக் குறியீடுகளில், விரைந்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கு, சிறப்புத் திட்டங்களை நாம் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது தெளிவுபடுத்துகிறது. மொத்தம் ரூ. **650** கோடி செலவில், உலக வங்கி நிதியுதவியுடன் மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (Health Systems Development Project) **2003–2004**-ஆம் ஆண்டில் செயல்படுத்த ஒப்புதல் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

## ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

**111.** மனிதவள மேம்பாட்டில், தனிப்பட்ட சமூகத் தொகுதியினரைச் சேர்ந்தவர்களின் நலத் தேவைகளுக்குத் தனிக்கவனம் செலுத்துவதும் அடங்கும். இத் தொகுதியினர், வளர்ச்சிப் பணியின் முக்கிய நீரோட்டத்தில் கலந்து பயன்பெறும் வகையில், அவர்களுடைய நலனுக்கான திட்டங்களைச் செயற்படுத்துவது எங்களுடைய முயற்சியாக இருக்கும்.

**112. 2003–2004** -ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான ஒதுக்கீடு ரூ.**439.05** கோடி ஆகும். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர உதவும் வகையில், முந்தைய கடன் படிப்புதவித் தொகை திட்டத்திற்குப் பதிலாக, சிறப்புப் படிப்புதவி மானியத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை அறிந்து இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். வரவு–செலவுத் திட்டத்தில், சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ், பள்ளிக் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் ரூ.**18.28** கோடியும் அடங்கும். வரவு – செலவுத் திட்டத்தில், **2003–2004**-ஆம் ஆண்டில் ரூ..**47.25** கோடி செலவில், **150** புதிய மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுவதற்கும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட, மேனிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் உன்னதமான திட்டம், பெரிதும் வரவேற்கப் பெற்றுள்ளது. நடப்பாண்டில், **47,980** மிதிவண்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மேனிலைப் பள்ளிகளில் XI ஆம் வகுப்பில் புதிதாகச் சேரும் மாணவியர்களுக்குப் பயனளிக்கும் வகையில், இத்திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.**7.49** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவியர்களிடையே எழுத்தறிவை மேம்படுத்துவதற்கான சிறப்பு ஊக்கத் திட்டங்களுக்காக ரூ.**6** கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**113.** வருமாண்டில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) வறுமை ஒழிப்புச் செயல்திட்டத்தின்கீழ் **1.59** இலட்சம் பயனாளிகள் பயன்பெறுவர். இத்திட்டம், ஆதிதிராவிடர் / பழங்குடியினரிடையே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்க உதவும். இத்திட்டத்தின் செயல்பாடு முழுவதும் பரவலாக்கப்பட்டு தற்போது மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பில் உள்ளனர். வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில் உள்ள தடைகளை நீக்கி, கடன்கள்பெறுவது எளிதாக்கப்பட்டுள்ளது. இதில், வருமாண்டில் நல்ல முன்னேற்றம் காணப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.




**114.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், சீர்மரபினர் ஆகியோருக்கான பல சிறப்புத் திட்டங்களும்

இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ரூ.31.50 கோடி செலவில் 100 மாணவர் இல்லக் கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்படும். வருமாண்டில் 48 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**115.** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிப்பதற்கான பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பல நபர்கள் சுய வேலைவாய்ப்புப் பெற உதவி அளிப்போம். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நபர்களுக்கும் நடப்பாண்டில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 2003–2004 ஆம் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும்.

### சமூகப் பாதுகாப்புறுதித் திட்டம்

**116.** இந்த வரவு – செலவுத் திட்டத்தில் மேம்பாட்டிற்கான ஆறு விரிவான கொள்கைகளை நான் குறிப்பிட்டுள்ளேன். இவைகளுள் சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்திற்கு வகை செய்வது ஒரு முக்கியமான கொள்கையாகும். இந்தியப் பொருளாதார தாராளமாயமாக்கல் நடவடிக்கைகள், 1991 ஆம் ஆண்டில் தொடங்கின. அதிலிருந்து, தேசிய பொருளாதாரத்தில், பல அமைப்பு ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார சீரமைப்பு நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க, போதிய அளவிற்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஏழை மற்றும் வசதிவாய்ப்பற்ற மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய தொலைநோக்கு சிந்தனையுடன்தான், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், அமைப்பு ரீதியான சரிக்கட்டல் சீர்திருத்த நடவடிக்கைகளின்போது, ஏழைகள் மற்றும் வறியோர்களைப் பாதுகாக்க, தம்முடைய முந்தைய ஆட்சியின்போது, சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தைத் தொடங்கினார்கள். தமிழ்நாட்டில், சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தை மேலும் வலுப்படுத்த, இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். நிதிநிலைக் குறிப்பில், ஒரு தனி இணைப்பு சமூகப் பாதுகாப்புறுதி திட்டத்திற்கான ஒதுக்கீட்டு அளவுகளை எடுத்துக் காட்டும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. சமூகப்பாதுகாப்புத் திட்டத்திற்கு, 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4232.29 கோடி ஆகும். இதில், பொருளாதார சீர்திருத்த மாற்ற காலத்தில், ஏழைகள் மற்றும் வறியோர்களைப் பாதுகாப்பதற்கான செலவினங்களும் அடங்கும். இந்தச் சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தை காத்து அதை மேலும் விரிவுபடுத்துவதில், எங்களது நிலைமாறாத முயற்சிகளை இது எடுத்துக் காட்டுகிறது.

### மகளிர், சிறார், முதியோர் மற்றும் ஏலாமையுற்றோர் நலன்


**117.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்தில் மகளிருக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் சிறார் நிலை உயர்வு பெறுதல் ஆகியவற்றிற்கான அரசின் கொள்கை நோக்கங்களை கொண்ட 18 அம்ச திட்டத்தை வகுத்துள்ளார்கள். திட்டச் செயல்பாட்டில், பெண்சிசுக் கொலை ஒழிப்பு, பேறுகாலத்தின்போது தாய், சேய் இறப்பு வீதத்தைக் குறைத்தல், பச்சிளம் குழந்தைக்காப்பு மற்றும் மேம்பாடு, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல், கட்டாயப் பள்ளிப்படிப்பு, நுட்பத் திறன் பெறுதல் மற்றும் சுய உதவிக்குழு அமைத்தல்மூலம், பொருளாதாரத் தன்னிறைவுக்கான சிறப்பு உதவி அளித்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாகும். 18 அம்சங்கள் அடங்கிய இத்திட்டத்தின் அனைத்து இனங்களிலும் நாங்கள் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம்.



**118.** தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பதை ஊக்குவிப்பதில், வியக்கத்தக்க அளவில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது 20.84 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 1.22 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களின் தற்போதைய சேமிப்பு ரூ.277.54 கோடி ஆகும். வரும் ஆண்டில் 5 இலட்சம் கூடுதலான மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட புதிய 25,000 சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துவது நம்முடைய நோக்கமாகும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.22.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் 1 இலட்சம் மகளிர் பயனடையும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அடுத்த ஆண்டில் சுமார்

50,000 மகளிருக்குத் தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

119. தமிழ்நாட்டிலும், வெளிமாநிலங்களிலும் பெரும் பாராட்டைப் பெற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் தொட்டில் குழந்தைத் திட்டம், 2003–2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். புதுமையாகவும் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வகையிலும் திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தைப் பாதுகாப்பிற்கான புதிய திட்டம் ரூ.14 கோடி ஒதுக்கீட்டில் 2003–2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். பழைய திட்டத்தின் கீழ், நிலுவையாகவுள்ள விண்ணப்பங்களுக்கு, ஏற்பளிப்பதற்கு ரூ.6.17 கோடி ஒதுக்கீடும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் செய்யப்படுகிறது.




120. சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கும், சத்துணவு திட்டச் செயல்பாடுகளில், தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டை பசிப் பிணியற்ற, சத்துணவுக் குறைவற்ற மக்களைக் கொண்ட மாநிலமாக ஆக்குவதற்கு, இந்த அரசு மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளுக்கும் பொருந்திய அணுகு முறையைப் (Life Cycle Approach) பின்பற்றி வந்துள்ளது. இத்திட்டத்தில், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளங்குழந்தைகள், பள்ளி செல்லும் சிறார்கள், வளர் இளம் பெண்கள், வயது முதிர்ந்த பயனாளிகள் ஆகியோர் அடங்குவர். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தேசிய சத்துணவு இயக்கம், அன்னபூர்ணா மற்றும் அந்த்யோதயா(Anna Poorna and Antyodaya Schemes) திட்டங்கள் மற்றும் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும் உன்னதமான அன்னதானத் திட்டம் போன்ற பல திட்டங்கள் இவற்றை மெய்ப்பித்துக் காட்டுகின்றன. கடுமையான நிதி நெருக்கடியிலும் வழங்கப்படும் சத்துணவின் தரத்தில் தக்க மேம்பாடு இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தை ஒன்றுக்கு, காய்கறி மற்றும் சுவையூட்டும் பொருளுக்கான, ஒதுக்கீட்டு அளவு 23 பைசாவிலிருந்து 35 பைசாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் கூடுதலாக ரூ.20.98 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு எவர்சில்வர் டம்ப்ளர்கள் மற்றும் தட்டுகளை வழங்குவதற்காக ரூ.1 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாலர் பள்ளி மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான மதிய உணவு மையங்களின் செயல்பாட்டில் கிராம சமுதாயத்தினரையும் நாம் ஈடுபடுத்த வேண்டும். இதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும்.

121. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காட்டுகிறது. மூத்த குடிமக்கள் கண்ணியமாக வாழ வகைசெய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். பல்வேறு முதியோர் உதவித் தொகைத் திட்டங்களுடன், முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு இலவசச் சேலை, வேட்டிகள் வழங்குவதற்காக, 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.16.80 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலுள்ள முதியோரை, தற்போதுள்ள சத்துணவு மற்றும் சிறார் பாதுகாப்பு மையங்களில் பயனுள்ள வகையில் ஈடுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி பரிசீலிக்க அரசு கருதியுள்ளது. ஏற்கத்தக்க கட்டண அடிப்படையில் முதியோர் இல்லங்களை அமைக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நாங்கள் தொடர்ந்து ஊக்குவிப்போம்.

122. ஏலாமையுற்றோரின் நலனுக்கு அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளிக்கும். நமது மாநிலத்திலுள்ள ஏலாமையுற்றோரின் எண்ணிக்கை குறித்த விரிவான ஆய்வு, தற்போது நடத்தப்பட்டு வருகிறது. மாநில வாய்ப்புவள மையம் (State Resource Centre) ஒன்று விரைவில் அமைக்கப்படும். ஏலாமையுற்றோரின் தனித் தேவைகளை நிறைவு செய்வதற்காக மறுவாழ்வுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம். தேவைக்கேற்ப உடலூனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான தற்போதுள்ள பல்வேறு திட்டங்கள் சீரமைக்கப்படும். கடுமையாக ஏலாமையுற்றோரின் பராமரிப்பிற்காக, 2003–2004 வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1.38 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏலாமையுற்றோரின் மறுவாழ்விற்கான தேசியத் திட்டத்தின் கீழ் ரூ. 2 கோடி நிதியொதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

### சமூகப் பாதுகாப்பு

123. அமைப்புச்சாரா தொழிலாளர்கள் உள்ளடங்கிய பல்வேறு தொகுதியினருக்கு ஆதரவு அளிப்பது சமூகப்

பாதுகாப்புத் திட்டங்களில் அடங்கும். ஏனையோருடன், மீனவர்கள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோரும் இதில் அடங்குவர். இந்தத் தொகுதியினர் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு அளிப்பது குறித்து விரிவாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. குறைந்தபட்ச ஒய்வூதியம் பெறுதல் மற்றும் போதிய மருத்துவ வசதிகளைப் பெறுதல் ஆகியவைகளும் இவற்றுள் அடங்கும்.

124. இலவச மருத்துவ வசதி பெற விரும்புகிற அனைவருக்கும், குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு, அரசின் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ வசதி ஏற்பாடுகள் வகை செய்கின்றன. இவைதவிர வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களுக்கான புதிய மருத்துவக் காப்புறுதித் திட்டம் ஒன்றையும் மத்திய அரசு அறிவித்துள்ளது. அரசு, இத்திட்டம் குறித்த விவரங்களைப் பரிசீலித்து, பாதிப்புக்குள்ளாகும் அனைத்துத் தொகுதியினரும் விரைவில் பயன் பெறும் வகையில் இதை விரிவு படுத்தும். இந்திய ஆயுள் காப்புறுதி நிறுவனம் தொடங்கவுள்ள புதிய ஒய்வூதியத் திட்டம் ஒன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாதாந்திர ஒய்வூதியம், குறைந்தபட்சத் தொகையாக ரூ.250 ஆகவும் அதிகபட்சத் தொகையாக ரூ.2000 ஆகவும் இருக்கும். வேண்டியவர்க்கு சமூகப்பாதுகாப்புத் திட்டப் பயன் சென்றடையும் வகையிலும், அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவரையும் இத்திட்டத்தில் சேர்க்கும் வண்ணமும், தக்க நடவடிக்கைகளைப் பரிசீலிக்க பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

125. பாதிப்புக்குள்ளாகும் பல்வேறு தொகுதி யினருக்கு தமிழ்நாடு அரசு நேரடியாக வரவு–செலவுத் திட்டத்திலிருந்து உதவித் தொகை வழங்கிவருகிறது. இத்திட்டங்களின் கீழ் 12.92 இலட்சம் பயனாளிகள் பயன் பெறுகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.325.61 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி

126. தமிழ்நாட்டின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்க, இவ்வரசு, பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. தமிழை மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குமாறு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். நம்முடைய வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்க நாம் தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறோம். வரும் நிதியாண்டில் இதற்கென வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.3.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசுப் பணியாளர் நலன்

127. அரசின் வளர்ச்சி மற்றும் நலப் பணிகளில் அரசுப் பணியாளர்கள் முக்கியமான பங்காற்றுகிறார்கள் என்பதை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தீவிரமான நிதி நெருக்கடி நிலவும் நேரத்தில் அரசுப் பணியாளர்கள் தாங்களும் அந்த நிலையை சமாளிப்பதில் பங்கேற்க முன்வரவேண்டும். தனது பணியாளர்களின் நலனை உறுதிசெய்வதே இவ்வரசின் கொள்கையாகும். தீவிரமான நிதி நெருக்கடி நிலையில் சம்பளம் மற்றும் படிகளில் உயர்வு வேண்டும் என்ற அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகளை ஏற்பது மிகக் கடினம் எனினும், 1.4.2003 முதல் கூடுதல் அகவிலைப்படித் தவணை ஒன்றை அரசுப் பணியாளர்களுக்கு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். 3 சதவீத அகவிலைப்படி உயர்வினைக் கொண்ட இந்த கூடுதல் தவணையை வழங்குவதற்கு, ஒராண்டுக்கு ரூ.200.91 கோடி செலவாகும். 1.10.2002 முதல் 4 சதவீத அகவிலைப்படி உயர்வு கொண்ட தவணையில், 3 சதவீதம் ரொக்கமாகவும் 1 சதவீதம் பொது வருங்கால வைப்பில் வைக்கப்பட்ட கூடுதல் அகவிலைப்படித் தவணையை 1.4.2003 முதல் முழுவதும் ரொக்கமாக வழங்கப்படும் எனவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. மிகமோசமான நிதி நிலைமையிலும் இவ்வரசு கூடுதல் அகவிலைப்படித் தவணையை வழங்க முடிவு செய்துள்ள இந்த அறிவிப்பை அரசுப் பணியாளர்கள் வரவேற்பார்கள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

128. பெருத்த வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அதனை நிறைவேற்றாமல் கைவிடுவது மிக எளிது. ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்திய பின்னர் நிலுவைத் தொகைகள் வழங்கப்படும், என்று பகட்டாக அறிவித்துவிட்டு பின்னர், அதில் 60 சதவீதத்தை எதிர்காலத்தில் பொறுப்பேற்கும் ஓர் அரசு கொடுக்கும் என்று முந்தைய அரசு முடக்கிவைத்ததை நான் இங்கு குறிப்பிடுகிறேன். நடப்புக்காலப் பொறுப்புகளை ஏற்பதற்கும், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட சலுகைகளை அளிப்பதற்கும் போதிய நிதி ஆதாரங்களற்ற நிலையில்தான் நாங்கள் பொறுப்பேற்றோம். அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும், சமூகப் பாதுகாப்புறுதித் திட்டத்தையும் முற்றிலுமாகக் கைவிட்டாலன்றி, ரூ.1800 கோடி அளவிற்கான இந்த நிலுவைத் தொகைகளை வழங்குவது இயலாது. நம்மால் இதனைச் செய்ய இயலாது. அதே நேரத்தில், அரசு இந்த நிலுவைத் தொகைகளை வழங்கும் நிலையில் இல்லை என்பதை அரசுப் பணியாளர்களும் அறிவர். நாங்கள் இதனை வெகு கவனமாகப் பரிசீலித்துள்ளோம். கீழ்க்காணும் முடிவுகளை நான் அறிவிக்கிறேன்.

- 1.1.1996 முதல் 31.3.1998 வரை ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஒய்வூதியங்களை ஒப்படை செய்து பணம் பெறும் திட்டத்தின் (Commutation) கீழான நிலுவைத் தொகைகள் 2003–2004 ஆம் நிதியாண்டில் தொடங்கி மூன்று ஆண்டுத் தவணைகளில் வட்டியுடன் வழங்கப்படும்.

- 1.1.1996 முதல் 31.3.1998 முடிய ஓய்வுபெற்ற பணியாளர்களைப் பொறுத்தமட்டில் பணிக் கொடை (Gratuity) நிலுவைத் தொகையும் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்தில் ஆண்டுத் தவணைகளில் சிறுசேமிப்புப் பத்திரங்கள் மூலம் வழங்கப்படும்.

- 1.1.1996 முதல் 31.3.2003 வரையிலான காலத்தில் ஓய்வுபெற்றோருக்கு சம்பளம் மற்றும் படிகள் ஆகியவற்றில் நிலுவைத் தொகையில் 60 சதவீதத் தொகை வட்டியுடன் 1.4.2003 முதல் வட்டி இல்லாத வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்தில் ஆண்டுத் தவணைகளில் சிறுசேமிப்புப் பத்திரங்கள் மூலம் வழங்கப்படும்.

- தற்போது பணியிலிருப்பவர்களுக்கு 60 சதவீத சம்பளம் மற்றும் படிகள் நிலுவைத் தொகை 1.4.2003 முதல் வட்டி இல்லாத வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்பொழுது சிறுசேமிப்புப் பத்திரங்களாக மூன்றாண்டு காலத்தில் ஆண்டுத் தவணைகளில் வழங்கப்படும். உதாரணமாக, 2003–2004 ஆம் ஆண்டில் ஓய்வுபெறுவோருக்கு, நிலுவைத் தொகை மற்றும் 31.3.2003 வரை அத்தொகை மீதான வட்டி ஆகியவற்றின் மொத்தத் தொகையில் முதல் தவணை 2003–2004 ஆம் ஆண்டில் வழங்கப்படும். இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்படும்.

129. வரவு–செலவுத் திட்டத்தைச் சமன் செய்வதில் உள்ள பெரும் இடர்ப்பாடுகளை கருதிப்பார்க்கும்போது சம்பள நிலுவைத் தொகைகளை ஒருக்காலும் வழங்க இயலாது என்பதை அரசுப் பணியாளர்கள் அறிவர். எனினும் நல்லெண்ண நோக்கில், நான் மேலே குறிப்பிட்ட வகையில் நிலுவைத் தொகையை வழங்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். முந்தைய அரசு அளித்த வெற்று வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், நிலுவைத் தொகைகளை வழங்குவதற்கு இவ்வரசு எடுத்த மிகத் துணிச்சலான இந்த முடிவை, அரசுப் பணியாளர்கள் பெரிதும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

130. செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதற்கு அரசுப் பணியாளர்கள் தங்களை தயார்செய்து கொள்ளவேண்டும். ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கு பணியாளர்கள் மாற்றப்படும் வகையில் நிருவாக சீரமைப்பை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. எனவே, ஒருதுறையில் பணியாளர்கள் தேவைப்பட்டால், வேறு ஒரு துறையில் உபரியாக உள்ள பணியாளர்களைத் தக்கவாறு மறுபயிற்சி அளிப்பதன் மூலம் பெறுவது சாத்தியமாக்கப்படும். 2003–2004-ஆம் ஆண்டில் இவ்வகையிலான பணியாளர் ஏற்பாடு செயல்படுத்தப்படும்.

### நல்லாட்சி முறை

131. ஒளிவு மறைவற்றதும், வெளிப்படையானதும், ஊழலற்றதும், பங்கேற்பு அடிப்படையில் அமைந்ததும் ஆகிய நிருவாக முறையே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் இவ்வரசின் வழிகாட்டுதல் நெறியாக அமைந்துள்ளது. பல்வேறு திட்டப்பணிகள், மக்களுக்குச் சென்றடைவதில் முன்னேற்றம் காணவும், மக்களது தேவைக்கேற்ப செயல்படும் திறன் பெறவும் நல்லாட்சி முறையே தக்கதொரு தீர்வாக அமையும். பொதுமக்கள் அரசுடனும், தொழில்கள் அரசுடனும் தொடர்பு கொள்ள, தற்போதுள்ள ஏற்பாடுகளை மேம்படுத்தத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இதுமேலும் வலுப்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்ப உத்திகளைக் கையாளுவதன் மூலமும், நடைமுறைகளை எளிதாக்குவதன் மூலமும், மக்கள் நேரடித் தொடர்பு கொள்ளும் நிர்வாக நிலைகளின் செயல்பாடுகளை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

132. மின் ஆட்சி முறை (e-Governance) பற்றி தற்போது எடுத்துக் கூற விழைகின்றேன். அரசுக்கும் மக்களுக்குமிடையே உள்ள தொடர்பு எளிதாகவும், சிக்கலற்றதாகவும், தடையற்றதாகவும் அமைய தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். அரசு அலுவலகங்களில் உள்ள பல்வேறு நடைமுறைகளைச் சரிவர புரிந்துகொள்ளுதல், அரசு பொதுமக்கள் தொடர்புகளை நன்கு அறிந்து கொள்ளுதல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்வாகத்தில் தக்க மேம்பாடுகளைச் செய்தல் ஆகியவை மின் ஆட்சி முறையின் அம்சங்களாகும். மாநிலத்தில் உள்ள 206 வட்டங்களிலும் முழுநேரத் தொடர்பு (online) வசதிகளை வரும் ஆண்டில் அளித்துவிடுவோம் என்பதை அறிவதில் அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர்.

133. மாநிலத்தில் 600 சார் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 50 மாவட்ட பதிவு அலுவலகங்கள் அனைத்தையும் கணினி மயமாக்குவதற்கு பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 350 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஏனைய அலுவலகங்களும் வரும் ஆண்டில் கணினிமயமாக்கப்படும். தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் அமைந்த "ஸ்டார்" (STAR) திட்டம் (எளிமையானதும் ஒளிவு மறைவற்றதுமான பதிவு நிர்வாகத் திட்டம்) துவங்கப்பட்டுள்ளது. முன்னதாக பல நாட்களும் வாரங்களும் எடுத்துத் தாமதமாக முடிக்கப் பெற்ற பதிவுப் பணிகளை, இதனால் ஒரே மணி நேரத்தில் முடிக்க ஏதுவாகும். உடனுக்குடன் வில்லங்க சான்றிதழ்,

சான்றளிக்கப்பட்ட படிகள் முதலியவற்றைத் தற்போது வழங்குவது சாத்தியமாக உள்ளது. சென்னை பெருநகர்ப் பகுதியிலும் ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் உள்ள பல்வேறு பதிவு அலுவலகங்களுக்கு இடையே தகவல் மற்றும் புள்ளி விவரங்கள் பரிமாற்றுதலுக்கு "ரெஜிநெட்" (REGiNET) என்ற இணைய ஏற்பாடு வழிவகை செய்துள்ளது. மாநிலத்தின் மற்ற பகுதிகளில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களிலும் வில்லங்க சான்றிதழ் அளிக்கும் வகையில் முழுநேரத் தொடர்பு (online) வசதிகளை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**134.** மின்வாரியம் போன்ற பொதுச் சேவை நிறுவனங்களுக்கு நுகர்வோர்கள் செலுத்தும் கட்டணங்களை, மின் அனுப்புகை வழியாக செலுத்துவது மற்றும் ஒரு முக்கியமான வசதியாகும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில் தனியார் துறை பங்கேற்புடன் இந்தச் சேவையை வரும் ஆண்டில் துவங்க இருக்கிறோம்.

**நிதி நிலைமை கணிப்புகள்**

**135.** 2002–2003ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் உங்கள் முன்னிருக்கின்றன. நிதிச்சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக 2002–2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டின்படி ரூ.6233.21 கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறையை திருத்திய மதிப்பீட்டில் ரூ..5917.31 கோடியாகக் குறைக்க நம்மால் முடிந்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான ரூ.1359.78 கோடி ஒட்டுமொத்த பற்றாக்குறையையும் 2002–2003ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ.254.59 கோடியாக குறைக்க நம்மால் முடிந்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20,628.32 கோடியாக இருந்த வருவாய் வரவுகள் 2002–2003ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ.20,686.86 கோடியாக உள்ளன. 2002–2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டதில் ரூ.26,861.53 கோடியாக இருந்த ஒட்டுமொத்த வருவாய்ச் செலவுகள் 2002–2003ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ.26,604.17 கோடியாக உள்ளன.

**136.** வருவாய் பற்றாக்குறையின் அளவை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்குள் நம்மால் கட்டுப்படுத்த முடிந்தபோதிலும் ஒட்டு மொத்த நிதி நிலைமை இன்னமும் சுமுகமாக இல்லை என்பதைக் காணலாம். 2001ஆம் ஆண்டில் நாங்கள் பதவியேற்றபோது எங்களுக்குக் கிடைக்கப்பெற்ற குழப்பமான நிலைமைகள் இன்று ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது என்ற நிலையை உருவாக்கியதற்கான நற்சான்று எங்களையே சாரும். தொகை விடுவிக்கப்படாமல் இருந்த பட்டியல்கள் குறித்த பெரும் பிரச்சினையை சமாளித்து, தக்கவகையில் அவைகளை குறைத்துவிட்டோம். இவையனைத்துக்கும் அசாதாரணமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு தமிழ்நாட்டில் நிதிநிலை சமன்பாட்டை மீளப்பெற சிறப்பான முயற்சி எடுத்துள்ளதை அவை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர்.

**137.** ரூ 3000 கோடி அளவு மானிய உதவிக்கான முழு அளவிலான ஒருகட்ட உதவித் திட்டமொன்றை வழங்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள் என்பதை அவை உறுப்பினர்கள் நினைவு கூறலாம். இதனைத் தொடர்ந்து நிதி சீரமைப்புகளை எடுத்துக்கொள்ள மாநில அரசிற்கு நிதி உதவி அளிக்குமாறு மைய நிதியமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். நடப்பாண்டில் ரூ.500 கோடி அளவிற்கு வெளிச்சந்தை கடனாகக் கூடுதல் உதவியை மைய அரசு அளித்துள்ளது. ஆனால், மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி மைய வரி வருவாயில் மாநிலத்தின் பங்கை சரிக்கட்டவே இத்தொகை பெருவாரியாகப் போய்விட்டது. 2002–2003ஆம் ஆண்டிற்கான இறுதி நிலவரப்படி மைய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.274.50 கோடி குறைந்துவிட்டது. பற்றாக்குறையை ஈடு செய்ய மிகச்சிறு தொகைதான் இதில் நிகரமாகக் கிடைக்கிறது. 2002–2003ஆம் ஆண்டில் மைய அரசின் வருவாய்ப் பங்கில் மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பைச் சரி செய்துகொள்ள கூடுதல் வெளிச்சந்தை கடன் திரட்ட அனுமதிக்குமாறு நாங்கள் மைய அரசை வலியுறுத்துகிறோம்.

**138.** 2003–2004ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அவைமுன் இருக்கிறது. 2003–2004ஆம் ஆண்டிற்கான வரவுகள் ரூ.22,665.90 கோடியாக இருக்க, மொத்த வருவாய்ச் செலவு ரூ.26,599.37 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.3933.47 கோடியாக இருக்கும். மொத்த வருவாய் வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறையின் பங்கு 17.4 சதவீதம் ஆகும். 2003–2004ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை ரூ.6944.46 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்தப்பற்றாக்குறை ரூ.1295.15 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**139.** ரூ. 7000 கோடி அளவிற்கு உத்தேச மதிப்பீட்டாலான ஆண்டுத்திட்டத்திற்கு இந்த வரவு செலவுத் திட்டம் வழிவகை செய்யும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மையத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் மேற்கொள்ளவிருக்கும் விவாதத்தில் ஆண்டுத் திட்டத்தின் அளவு உறுதி செய்யப்படும்.

**140.** 2003–2004ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் ஒட்டுமாத்தப் பற்றாக்குறை ஆகிய இரண்டுமே கவலை அளிப்பதாகவே உள்ளன. 2003–2004ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிலையை திருத்தி

அமைக்க ஏதுவாக 2003–2004-ஆம் ஆண்டில் வருவாயை மேலும் அதிகரிக்கவும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும் ஏற்றதொரு நிதிநிலை நிறுத்தக் கொள்கையை இவ்வரசு பின்பற்றும். இதைச் செயல்படுத்தமுடியும் என நாங்கள் நம்புகிறோம். இந்த நிதிநிலைநிறுத்த முயற்சிகளில் அவையின் ஒத்துழைப்பை நான் வேண்டுகிறேன். அரசின் வருவாயை அதிகரிப்பதற்கான சில நடவடிக்கைகளைப் பற்றி இப்போது கூற விழைகிறேன்.

**வணிகவரிகள்**

**141.** மதிப்புக் கூட்டு வரி அறிமுகம் செய்வது நீண்டகாலமாக தேசிய அளவில் கொள்கையாக இருந்து வருகிறது. பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும், விற்பனை வரி கட்டமைப்பினை எளிமைப்படுத்துவதன் அவசியத்திற்காகவும் மதிப்புக் கூட்டுவரிமுறை பரிந்துரைக்கப்படுகிறது. உள்நாட்டில் சீரான ஒரு பொது சந்தையினை உருவாக்குவதும், அதன் மூலம் இந்திய உற்பத்தியாளர்கள், அவர்களின் உற்பத்திச் செலவினைக் குறைத்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் போட்டியிடுவதற்கு வகை செய்வதும் இதன் முடிவான குறிக்கோளாகும். மதிப்புக்கூட்டு வரித் திட்டத்தில், தொழில்துறையின் போட்டியிடும் தன்மை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வணிகர்கள், அவர்களின் விற்பனையில் மதிப்புக்கூட்டப்பட்ட பகுதியின் மீது மட்டுமே வரி செலுத்துவதால், அது அவர்களுக்கு நன்மை பயக்கும். பொது மக்கள் மற்றும் நுகர்வோர் நிலையில் பார்க்கும்போது, மதிப்புக்கூட்டு வரி முறையை நாட்டின் வரிகட்டமைப்பினை மேலும் ஒளிவுமறைவு அற்றதாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**142.** தேசிய அளவில், நீண்ட விவாதங்களுக்குப் பின்னர், தற்போது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், மதிப்புக்கூட்டு வரியினை 2003–2004 –ல் இருந்து அறிமுகம் செய்யும் நிலையில் உள்ளன. தமிழ்நாட்டில் மதிப்புக்கூட்டு வரி சட்டமுன்வடிவு, தமிழ்நாடு அரசிதழில் 13.3.2003 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின், விதி 130–ன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. வரைவு சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்வதற்காக குடியரசுத் தலைவரின் முன் அனுமதி வேண்டி மத்திய அரசுக்கு இச்சட்ட முன்வடிவு அனுப்பப்பட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவின் அனைத்துப் பிரிவுகளும் வணிகவரித் துறையின் இணைய தளமான www.tnsalestax.com–ல் வெளியிடப்பட்டுள்ளன. வணிக மற்றும் தொழில் துறையினர் மதிப்புக்கூட்டு வரியினை பற்றி முன்கூட்டியே, தெரிந்து கொள்ளவும், அதற்காக தங்களை தயார் செய்வதை உறுதிப் படுத்துவதற்கும் இதனால் வகை செய்யப்பட்டுள்ளது. மதிப்புக்கூட்டு வரி விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை துறையின் இணையதளத்தில் விரைவில் வெளியிடப்படும். சட்டமுன்வடிவிற்கு இந்திய குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்ற பின்னர், அது சட்டமன்றப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவினை ஏற்ற பின்னர், இது சட்டமாக்கப்பட்டு புதிய சட்டம் நடைமுறைக்கு வரும். இதன் மூலம் தமிழ்நாடு 2003–2004ல் இருந்து மதிப்புக்கூட்டு வரியினை நடைமுறைப்படுத்தும் என்பது தெளிவாகும். எனவே, இந்த மாமன்றம் இதனை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். மதிப்புகூட்டு வரித் திட்டத்திற்கு எளிதாக மாறுவதற்கு வகை செய்வதற்காக, மார்ச், 2003–ல் புதுப்பிக்கப்பட்ட வணிகப் பதிவுகள் அல்லது 5 ஆண்டுகளுக்கு ஏற்கனவே புதுப்பிக்கப்பட்டப் பதிவுகள், மதிப்பு கூட்டு வரி திட்டத்தில் செல்லுபடியாகும்.

**143.** மதிப்புக்கூட்டு வரி திட்டத்திற்கு தயாராவதின் ஒரு பகுதியாக, வணிகவரித் துறையினை 100 விழுக்காடு கணினி மயமாக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இத்திட்டம், சோதனைச் சாவடிகளில் தொடங்கி வணிகவரி ஆணையர் அலுவலகம் வரை கணினி முறையின் மூலமாக இணைக்கப்பட்டு சேர்ந்து செயல்பட வகை செய்கிறது. தவிர, துறையின் அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலுள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளுக்கு பல பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள், தொழில் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள், துறையின் அலுவலர்களோடு மதிப்புக்கூட்டு வரி பற்றி, தேவையான விவரங்களை, கலந்துரையாடல் மூலம் பெற்றிட வகை செய்கிறது.

**144.** பொருட்களின் வகைப்பாடு மற்றும் மதிப்புக்கூட்டு வரியின் வரி விகிதங்கள், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் பொதுவானதாக இருக்கும். மதிப்புக்கூட்டு வரி சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அட்டவணைகளில் இடம்பெறக்கூடிய பொருட்கள் மற்றும் வரி விகிதங்கள், இச்சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது வைக்கப்படும். அகில இந்திய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி மதிப்புக்கூட்டு வரி சட்டத்தில், இரண்டு வித வரி விகிதப் பட்டியல்கள் பெரும்பாலும் இருக்கும். அதாவது, தொழிற்சாலைகளுக் குரிய இடுபொருட்கள் மற்றும் அன்றாட/பொது பயன்பாட்டிற்கான பொருட்களின் மீது 4 விழுக்காடு வரி; மேலும், ஏனைய பொருட்களுக்கு 12.5 விழுக்காடு வரி விகிதம். மேற்கூறப்பட்டவை தவிர, வரிவிலக்களிக்கப் பட்ட பட்டியல் ஒன்றும் இருக்கும். தங்கம் மற்றும் வெள்ளி கட்டிகள் மற்றும் ஆபரணங்களுக்கு 1 விழுக்காடு மற்றும் பெட்ரோல், டீசல், இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் போன்ற பொருட்களுக்கு 20 விழுக்காட்டிற்கு குறையாமல் சிறப்பு வரி விகிதம் இருக்கும். 1 விழுக்காடு மற்றும் சிறப்பு வரிவிகிதத்திற்கு உட்படும் பொருட்கள், மதிப்பு கூட்டு வரிக்குட்படாது.

ஒப்பந்தப் பணிகள் மீது வரி விதிப்பு, குத்தகை மீதான வரி விதிப்பு மற்றும் உணவகங்களில் விற்பனையாகும் உணவு மற்றும் பானங்கள் மீதான வரி விதிப்பு ஆகியவை மதிப்புக்கூட்டு வரிக்கு உட்படாது.

**145.** தமிழ்நாட்டிற்குள் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்குள் மதிப்புக்கூட்டு வரி செலுத்தப்பட்ட பொருட்களுக்கு உள்ளீட்டு வரி தள்ளுபடி/வரி கழித்தல் செய்துகொள்ள வரைவுசட்ட முன்வடிவு வகை செய்கிறது. மேலும், தமிழ்நாட்டில் விற்பனையாகும் பொருட்களின் மீது செலுத்தப்பட்ட மதிப்புகூட்டுவரி அல்லது மத்திய விற்பனை வரி எவ்வளவு செலுத்தப்பட்டதோ அந்த அளவிற்கு மட்டும் இந்த வரிக் கழிப்பு உண்டு. முதலீட்டு சரக்குகளின் மீது செலுத்தப்பட்ட வரியினை 3 ஆண்டுகால அளவில் வரிக் கழிப்பு செய்து கொள்ளலாம். ஏற்றுமதி நேர்வுகளைப் பொறுத்த வரையில், ஏற்றுமதி விற்பனைக்கு வரி விலக்கு தொடரும். அதே நேரத்தில், இடுபொருட்கள் மீது செலுத்தப்பட்ட வரி, திரும்பக் கொடுக்கப்படும். அதாவது, ஏற்றுமதி மீது வரி பூஜ்யம் விழுக்காடாக இருக்கும். பிற மாநிலங்களுக்கு கிளை மாற்றம் செய்யும் நேர்வுகளுக்கு இந்த வரிக் கழிப்பு வழங்கப்படமாட்டாது. மதிப்புக்கூட்டு வரி இணைப்பில், தொடர்ந்து வரியை கழித்துக்கொள்ளும் சலுகையினைப் பெறுவதற்கு தற்போது விற்பனை வரித் தள்ளுபடி அனுபவித்து வரும் தொழிற்சாலைகள், வரித்தள்ளிவைப்பு திட்டத்திற்கு மாற்றப்படும்.

**146.** மதிப்புக்கூட்டுவரி, விற்பனை வரிக் கட்டமைப்பினை எளிமையாக்குதல் மற்றும் பல்வேறு வணிகச் சட்டங்களை தவிர்த்திடுதல் ஆகிய நோக்கங்களை எய்த விழைவதால், தற்போதுள்ள மறு விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் உள்கட்டமைப்பு மேல்வரி ஆகியன மதிப்புக்கூட்டு வரி அறிமுகம் செய்யப்படும்போது திரும்பப் பெறப்பட்டதாக கருதப்படும். எனினும், மதிப்புக்கூட்டு வரிக்குட்படாத இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மற்றும் அயல்நாட்டு மதுவகை மீதான கூடுதல் விற்பனை வரி தொடரும். பெட்ரோல், டீசல் முதலிய பொருட்களைப் பொறுத்தவரை, கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல்வரி ஆகியன அடிப்படை வரி விகிதத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

**147.** வணிக முறை மாற்றம் (Diversion of trade) மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவற்றைத் தடுப்பதற்கு, சில குறிப்பிட்ட பொருட்களுக்கு இம்மாநிலத்தில் நுழைவு வரி விதிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பதிவு செய்துகொள்ளாமலும், கணக்குகள் பராமரிக்காமலும் வணிகத்தில் ஈடுபடுவோரைக் கண்டறிவது அடிப்படை நோக்கமாக இருந்தது. மதிப்புக்கூட்டு வரி திட்டம், முழுமையாக நிலைப்படுத்தப்படும் வரை, மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் தொடரக்கூடும் என்பதால், மோட்டார் வாகனங்கள் மற்றும் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட நுழைவு வரியினைத் தொடர முடிவு செய்யப்படடுள்ளது. எனினும், நுழைவு வரி செலுத்தப்பட்டிருந்தால் உள்ளூர் விற்பனைகள் அல்லது இடைமாநில விற்பனை மீது செலுத்த வேண்டிய வரிகளுக்கு, முழுவரிக்கழிப்பு உண்டு. இதன் மூலம் பொருட்கள் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவருவது, நுழைவுவரி விதிப்பின் மூலம் கண்காணிக்கப்பட்டாலும், அப்பொருட்கள் இரட்டை வரிவிதிப்பிற்குள்ளாவதைத் தடுக்க உறுதி செய்யப் படுகிறது.

**148.** மதிப்புக்கூட்டு வரி, இறுதியில் மாநில அரசுக்கு அதிக வருவாயினை ஈட்டித்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தொடக்க ஆண்டுகளில் மதிப்புக்கூட்டு வரித் தொடரில் மதிப்புக்கூட்டப்பட்ட பகுதி அனைத்தும் வரி விதிப்பிற்கு உள்ளாகும் வரை வருவாய் இழப்பு ஏற்படலாம். தொடக்கத்தில் ஆண்டொன்றுக்கு வருவாய் இழப்பு ரூ.2,500 கோடிக்கு அதிகமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களும் வற்புறுத்தியதைத் தொடர்ந்து, முதலாண்டில் 100 விழுக்காடு, இரண்டாமாண்டில் 75 விழுக்காடு மற்றும் மூன்றாம் ஆண்டில் 50 விழுக்காடு வரை வருவாய் இழப்பினை ஈடு செய்ய மத்திய அரசு முன்வந்துள்ளது. மத்திய அரசின் 2003–2004 நிதி நிலை அறிக்கையில் மத்திய விற்பனை வரி படிப்படியாக நீக்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு மற்றும் வேறு சில மாநிலங்கள் மத்திய விற்பனை வரியை நீக்குவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை 100 விழுக்காடு அளவிற்கு நிரந்தரமாக ஈடு செய்ய வேண்டுமென்று ஏற்கனவே மத்திய அரசை வலியுறுத்தியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் குறிப்பாக இது தொடர்பாக மத்திய நிதியமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார். மத்திய விற்பனை வரியை நீக்குவதால் ஏற்படும் வருவாய் இழப்பு வேறு முறையில் ஈடு செய்து வழங்கப்பட வேண்டும் என்ற இந்த அரசின் வாதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்று அறிவதில் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. மத்திய அரசு, மத்திய விற்பனை வரி வருவாய் இழப்பை 100 விழுக்காடு ஈடு செய்வதைத் தொடக்க ஆண்டுகளுக்கு மட்டும் வழங்காமல், நிரந்தர அடிப்படையில் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

**149.** வருவாய் இழப்பை ஈடு செய்யும் நடவடிக்கைகளில் ஒன்றாக, சில குறிப்பிட்ட சேவைகள் மீது மாநிலங்களே வரி விதித்து வசூலித்துத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டுவர மத்திய அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்கான சட்ட முன் வடிவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரும் அளவில் உள்ள சேவைகளின் பட்டியலை மத்திய அரசு வழங்கிட வலியுறுத்துகிறோம். அதே போன்று கூடுதல் ஆயத்தீர்வைக்குட்பட்ட சர்க்கரை, துணி வகைகள் மற்றும் புகையிலை போன்ற

பொருட்கள் மீது கூட மாநிலங்களே விற்பனை வரி விதித்துக் கொள்ள வகை செய்யப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. தற்போது நடைபெற்றுவரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இது சம்பந்தப்பட்ட சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுமென்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

150. மதிப்புக் கூட்டு வரி முறைக்கு மாறும் நிலையிலும், கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி நீக்கப்படுவதாலும், சில பொருட்களின் மீதான வரி விகிதங்களை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பெட்ரோலைப் பொறுத்தவரை மேல்வரி உட்பட தற்போதுள்ள வரிவிகிதமான 29.4 விழுக்காடு வரி, 30 விழுக்காடாக மாற்றியமைக்கப்படுகிறது. அதிவேக டீசல் மற்றும் பளுவற்ற டீசல் எண்ணெய்க்குக் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி உட்பட வரிவிகிதங்கள் தற்போது முறையே 23.1 விழுக்காடு மற்றும் 21.9 விழுக்காடு உள்ளது. அதிவேக டீசல் மற்றும் பளுவற்ற டீசல் எண்ணெய் மீதான வரியினை தற்போது ஒருங்கிணைக்கப்பட்ட 25 விழுக்காடாக மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. டீசல் எண்ணெய்க்கு மாற்றாக, வெள்ளை நிற மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுவதாக கடந்த சில மாதங்களாகப் பெருமளவில் தகவல்கள் வந்துள்ளன. இதனால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதுடன், வாகனங்களில் இயந்திரங்களுக்குப் பாதகங்களும் ஏற்படும். இதனைத் தடுப்பதற்காக வெள்ளை மண்ணெண்ணெய் மீதான வரியினை 4 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் மீது அதாவது நீல நிற மண்ணெண்ணெய் மீது 4 விழுக்காடு வரி தொடர்ந்து இருக்கும்.

151. இந்திய உச்ச நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு, தொலைபேசி வாடகை மீது மாநிலங்கள் வரி விதிக்க வகை செய்கிறது. உரிமை மாற்றம் செய்து பொருட்களைப் பயன்படுத்தும் கோட்பாட்டின் தேவைகளை இந்தத் தொலைபேசி வாடகைகள் நிறைவு செய்கின்றன என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதற்கேற்ப பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் மற்றும் தனியார் தொலைபேசி நிறுவனங்கள் வசூலிக்கும் தொலைபேசி வாடகை மீது, (செல்லுமிடத் தொலைபேசி வாடகை உட்பட) 12.5 விழுக்காடு வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

152. மேலே குறிப்பிட்ட வரி விதிப்பு நடவடிக்கைகள் ஆண்டொன்றிற்கு ரூ. 200 கோடி அளவிற்குக் கூடுதல் வருவாய் ஈட்டித்தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நுழைவு வரியினைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றங்கள், கணக்கில் காட்டப்படாத நேர்வுகளை சரிபார்த்தல் மற்றும் வரிவருவாயினைத் திரட்டுதல் ஆகியவற்றின் மூலம் சிறந்த பலன்களைத் தந்துள்ளன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதே நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, சலவை இயந்திரங்கள் மீது 12.5 விழுக்காடு நுழைவு வரியும், துகல்கள், நாடாக்கள் மற்றும் கழிவுகள் உள்ளடங்கலான எல்லா வகையான LDPP (Low Density Polyethylene and Polypropylene) மீது 4 விழுக்காடு நுழைவு வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வரி விதிப்பு நடைமுறையினை எளிமைப்படுத்துவதற்காக, நுழைவுவரிச் சட்டம் மற்றும் மதிப்புக்கூட்டுவரிச் சட்டம் ஆகிய இரண்டிற்கும் தனிப்பட்ட வணிகரொருவருக்கு ஒரே வரி விதிப்பு அலுவலர் இருப்பார் என முடிவு செய்யப்பட்டுள்ளது. பிற மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள் தமிழ்நாட்டிலுள்ள அச்சகங்களில் கூலி அடிப்படையில் அச்சுப் பணிக்காக அனுப்பும் காகிதங்களின் மீது நுழைவு வரியிலிருந்து விலக்களிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கூலி அடிப்படையில் அச்சுப்பணி செய்வதற்கான ஆதாரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

153. இந்த நடவடிக்கைகளை எடுக்கும்பொழுது மாநிலம் முழுவதும் உள்ள வரலாறு காணாத வறட்சி நிலையினை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. எனவே மதிப்புக் கூட்டு வரி அறிமுகம் செய்யப்பட்ட பின்னரும், அரிசி மீதான விற்பனை வரி விலக்கு தொடர்ந்து இருக்கும்.

154. தங்கம், வெள்ளி மற்றும் மதிப்பு மிக்க உலோகங்களாலான ஆபரணங்கள் அதிகமான அளவில் வரி ஏய்ப்புக்கு உள்ளானவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த நிதி நிலை அறிக்கையில் ஆபணரங்கள் மீது 1 விழுக்காடு ஆடம்பர வரி அறிவிக்கப்பட்டது. தற்போது, ஆபரணங்கள் இருப்பின் மீதான ஆடம்பர வரி 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக உயர்த்தி, மதிப்புக்கூட்டு வரியுடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதிப்புக்கூட்டு வரித் திட்டம் அமலாக்கப்படும்பொழுது ஆபரணங்கள் மீதான வரி விகிதம் 2 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாக குறைக்கப்படுகிறது. மேலும், ஆபரணங்கள் மீதான இந்த 1 விழுக்காடு வரி, விற்பனைத் தொகை எவ்வளவு இருந்தாலும் அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும். இதனைத் தொடர்ந்து ஆண்டு விற்பனைத் தொகை ரூ.50 இலட்சம் வரையில் உள்ள ஆபரண வணிகர்களுக்கு, தற்போதுள்ள இணக்க வரி விதிப்பு முறை ரத்து செய்யப்படும்.

155. தற்போது கம்பிவடத் தொலைக்காட்சி (Cable TV) இணைப்புகளுக்கு விதிக்கப்படும் வரியை உள்ளாட்சி அமைப்புகளே விதித்து வசூலித்து வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். எனினும், கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புகளை அளிப்பவர்கள், இணைப்புகளின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்து தெரிவிக்கின்றனர் என்று தெரிய வருகிறது. அனைத்து கம்பிவட தொலைக்காட்சி

இணைப்புகளும் வரி விதிப்புக்கு உட்படுத்தப்பட்டனவா என்பதை சோதித்து அறிந்து உறுதிப்படுத்திக்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளால் இயலவில்லை. அனைத்து கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு குறித்து வீதி வழியாகத் தணிக்கை செய்வதன் மூலம் கணக்கீடு செய்வதில் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. இதனைத் தொடர்ந்து அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் வருவாய் மிகவும் குறைவாக இருந்து வருகிறது. மேற்கூறிய சிக்கல்களிலிருந்து விடுபட, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு தருபவர்கள், கம்பிவடத் தொலைக்காட்சிகளின் எண்ணிக்கைகளின் மீது செலுத்தப்படும் வரிக்குப் பதிலாக இணக்க முறையில் வரி செலுத்தும் கட்டாய முறையினை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. கிராம ஊராட்சிகளிலுள்ள கம்பிவடத் தொலைக் காட்சி இணைப்பு தருபவருக்கு ஆண்டொன்றுக்கு இணக்க வரி ரூ.12,000; பேரூராட்சிகளில் இணைப்பு தருபவருக்கு ரூ.18,000; நகராட்சிப் பகுதிகளில் இணைப்பு தருபவருக்கு ரூ.36,000 மற்றும் மாநகராட்சிகளில் இணைப்பு தருபவருக்கு ரூ.72,000 என இருக்கும். இந்த வரி விதிப்பு மற்றும் வரி வசூல் செய்யும் அதிகாரம் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து அரசுக்கு மாற்றப்படுகிறது. 2002–2003–ஆம் ஆண்டில் கம்பிவடத் தொலைக் காட்சி இணைப்பு மூலம் பெறப்பட்ட வரி வருவாய்க்கு நிகரான தொகை ஆண்டு மானியமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். உடன் நிகழ்வாக, கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு தருபவர் ஒவ்வொருவரும் செலுத்தும் பிணை வைப்புத் தொகை ரூ.10,000–லிருந்து மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.5,000 ஆகவும் பிற பகுதிகளில் ரூ.2,500 ஆகவும் குறைக்கப்படும். இதற்காக 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதற்கான சட்ட முன்வடிவு நடப்பு கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். இந்த மாற்றங்களின் மூலம் அரசுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.30 கோடி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார வரி

156. டாக்டர் ராஜா J. செல்லையா அவர்களின் தலைமையில் அமைந்த வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம் மின்சாரத்தின் மீது விதிக்கப்படும் தீர்வை மற்றும் வரி ஆகியவற்றிற்கான சட்டங்களை முழுமையாக மறு பரிசீலனை செய்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 7வது இணைப்பில் 53-ஆம் பதிவில் உள்ள வகைப்பாட்டின் அடிப்படையில் மின்சாரத்தின் விற்பனை அல்லது பயன்பாட்டின் மீது வரி விதிக்க வழி செய்யும் புதிய சட்டமொன்றை அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்த ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது. 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரத் தீர்வைச் சட்டம் மற்றும் 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயன்பாட்டின் மீது வரி) சட்டம் ஆகியவை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, ஒற்றைச் சட்டமாக அறிமுகப்படுத்தப்படலாம் என இந்த ஆணையம் கருத்து தெரிவித்துள்ளது. ஆணையம் தனது அறிக்கையில் இறுதி நிலையில் மின்சாரத்தை வாங்கும் அமைப்புகளுக்கும், நுகர்வோர்களுக்கும் கட்டணத்தில் 6 சதவீதமும், வேளாண் பயனீட்டாளர்களுக்கும், குடிசைவாசிகளுக்கும் 5 சதவீதமும் வரி விதிக்கலாம் என பரிந்துரைத்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்தினால் செய்யப்படும் விற்பனை மீது இவ்வாறு வரி விதிக்கும் நேரத்தில் சுயப் பயன்பாட்டிற்காக மின்சார உற்பத்தி செய்வோரைப் பொறுத்தமட்டில் அவர்கள் சுய தேவைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்தின் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 25 பைசா வீதம் வரி விதிக்கப்படலாம் என ஆணையம் பரிந்துரைத்துள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகளைச் சிறிய மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது. மின்சாரத்தின் மீதான வரி பற்றிய புதியதொரு சட்டமியற்ற சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத்தொடரில் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படும். சுய தேவைக்கு மின் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட உரிமம் பெற்றுள்ள அனைவருக்கும் அவர்கள் விற்பனை செய்யும் எரிசக்தியின் நிகர மதிப்பின் மீது குறைந்தபட்சம் 5 சதவீதமும், அதிகபட்சம் 10 சதவீதமும் வரிவிதிக்க இது வகை செய்யும். சுயத் தேவைக்கு மின்உற்பத்தி செய்யும் உரிமதாரர்களைப் பொறுத்த வரை, இந்தச் சட்டத்தின் கீழ் அவ்வாறு சுயப் பயன்பாட்டிற்கு நுகர்ந்த மின்சாரத்தின் மீது யூனிட் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக 10 பைசாக்களும், அதிகபட்சமாக 20 பைசாக்களும் வரி விதிக்க வழிவகை செய்யப்படும். விவசாயப் பயன்பாடு மற்றும் குடிசைகளுக்கான மின்சாரத்தின் மீது எந்த வரியும் விதிக்கப்படமாட்டாது. இவைகளுக்கு இவ்வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்படும். மின்சார விற்பனை மீதான வரி தற்போது நடைமுறையில் உள்ள 5 சதவீத அளவிலேயே தொடரும். சுய தேவைக்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் சுய தேவைக்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத்திற்கும் 10 பைசா விகிதத்தில் இவ்வரிவிதிப்பு அமையும். இந்த சீரமைப்பின் மூலம் 2003–2004-ஆம் ஆண்டில் ரூ.80 கோடி கூடுதல் வருவாய் கிட்டும்.

மோட்டார் வாகன வரி

157. சாலைகளின் தரத்தை உலகத்தரத்திற்கு உயர்த்தவும், அவற்றை நன்கு பராமரிக்கவும், நிதிநிலை அறிக்கையில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள். நான் ஏற்கெனவே இந்நிதிநிலை அறிக்கையில் 'சாலை பராமரிப்பு நிதி' ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளேன். சாலைப் பணிகளின் வளர்ச்சிக்காகவும் அவைகளை நன்கு பராமரிப்பதற்காகவும் கூடுதலான நிதி ஆதாரத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். இதன் காரணமாக, கீழ்க் காணும் வாகனங்களுக்கு மோட்டார் வாகன வரியில் மாற்றம் செய்யக் கருதியுள்ளேன்.

158. அரசு, சரக்கு வாகனங்களுக்கான மோட்டார் வாகன வரியை 1.12.2001 முதல் மாற்றியமைத்தது. 15,000 கிலோ கிராம் மற்றும் அதற்கு அதிகமாக சுமை ஏற்றும் திறன் கொண்ட பெரிய சரக்கு வாகனங்கள் செலுத்த வேண்டிய வரியை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ரூ.2,500 காலாண்டு வரி, மற்றும் 15,000 கிலோ கிராமிற்கு கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 1,000 கிலோகிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.400 என்ற வரியை, ரூ.2,500 காலாண்டு வரி மற்றும் 15,000 கிலோகிராமிற்கு கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோகிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.75 என மாற்றம் செய்யப்படும். இம்மாற்றம், 1.12.2001 முதல் அமுலுக்கு வரும். 1.12.2001–இல் இருந்து கட்ட வேண்டிய நிலுவைத் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படும்.

159. 15,000 கிலோகிராமிற்கும் அதிகமாகச் சுமை ஏற்றும் திறன் கொண்ட பல அச்சு இரக சரக்கு வாகனங்களுக்கு, காலாண்டு வரி ரூ.2,300 எனவும், அதற்குக் கூடுதலாக ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோ கிராமிற்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.50 எனவும் வரிவிதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

160. பல்வேறு வகை வாகனங்கள் செலுத்த வேண்டிய வரி கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

| வ. எண் | வாகனவகை | தற்போதைய வரிவிகிதம் | மாற்றம் செய்யப்படும் வரிவிகிதம் |
|---|---|---|---|
| 1) | மேக்ஸிகேப் | ரூ.250 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி | ரூ.500 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 2) | பெருநகர் பேருந்துகள் | ரூ.50 மற்றும் ரூ.10 (சர்சார்ஜ்) ஆக ரூ.60 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் | ரூ.80 மற்றும் ரூ.20 (சர்சார்ஜ்) ஆக ரூ.100 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் |
| 3) | நகரப் பேருந்துகள் | ரூ.275 மற்றும் ரூ27.50 (சர்சார்ஜ்)ரூ.302.50 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் | ரூ.325 மற்றும் ரூ.32 (சர்சார்ஜ்) ரூ.357 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி, அமர்வதற்கும் நிற்பதற்கும் |
| 4) | புறநகர் மற்றும் விரைவுப் பேருந்துகள் | ரூ.360 மற்றும் ரூ 90. (சர்சார்ஜ்) ஆக ரூ.450 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி | ரூ.400 மற்றும் ரூ.100 (சர்சார்ஜ்) ஆக ரூ.500 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 5) | ரிக்ஸ், ஜெனரேட்டர்ஸ் மற்றும் கம்ப்ரஸர்கள் | ரூ.2500 ஆண்டு வரி | ரூ.3500 ஆண்டு வரி |
| 6) | கல்வி நிறுவனப் பேருந்துகள் | ரூ.500 காலாண்டு வரி ஒரு வாகனத்திற்கு | ரூ.150 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 7) | தனியார் பணி வாகனங்கள் | ரூ.100 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி | ரூ.150 ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி |
| 8) | மோட்டார் சைக்கிள் 50 சி.சி முதல் 75 சி.சி.வரை | ரூ.1350 ஆயுட்கால வரி | ரூ.1500 ஆயுட்கால வரி |
| 9) | மோட்டார் சைக்கிள் 75 சி.சி முதல் 170 சி.சி வரை | ரூ.2000 ஆயுட்கால வரி | ரூ.2500 ஆயுட்கால வரி |
| 10) | மோட்டார் சைக்கிள் 170 சி.சி க்கும் அதிகமாக | ரூ.2500 ஆயுட்கால வரி | ரூ.3000 ஆயுட்காலவரி |

மேற்காணும் செயற்குறிப்புகளில் இனம் 6–ஐ தவிர, ஏனையவை 1.4.2003 முதல் அமுலுக்கு வரும். கல்வி நிறுவனப் பேருந்துகளைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச்சட்டத்தைத் திருத்தத் தேவையான சட்ட முன்வடிவு, இச்சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

161. நான்கு சக்கர போக்குவரத்து அல்லாத (Non-transport) வாகனங்களுக்கு 1.7.1998 முதல் ஆயுட்கால வரி வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வாகனத்தின் மொத்த விலையை அடிப்படையாகக்கொண்டு ஒரே சீரான ஆயுட்கால வரியை அறிமுகப்படுத்தலாம் என அரசு கருதுகிறது. எனவே, இனி, நான்கு சக்கர, போக்குவரத்து அல்லாத வாகனத்தின் மொத்த விலையில், 6 சதவீதம் ஆயுட்கால வரியாக விதிக்கப்படும். இதற்காக, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தைத் திருத்தத் தேவையான சட்ட முன்வடிவு இந்தக்கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

162. மோட்டார் வாகனங்களினால் ஏற்படும் புகை, சுற்றுபுறத்தூய்மைக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. மாசுபடுத்துபவர் அதிகமாக வரி செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் "பசுமை வரி" (Green Tax) எனும் புதிய வரியை அனைத்து பழைய மோட்டார் வாகனங்களுக்கும் கீழ்க்கண்டவாறு விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வாகனங்களின் வகைப்பாடு | அமுலுக்கு வரும் நாள் | உத்தேசிக்கப் பட்டுள்ள வரி விகிதம் |
|---|---|---|
| 1. இரண்டு சக்கர வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகாலம் முடிவடைந்த பின்னர் | ரூ.500 ஐந்தாண்டு காலத்திற்கு |
| 2. இரண்டு சக்கர வாகனங்கள் தவிர்த்து பிற (போக்குவரத்து அல்லாத) வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகாலம் முடிவடைந்த பின்னர் | ரூ.1000 ஐந்தாண்டு காலத்திற்கு |
| 3. அனைத்து வகை போக்குவரத்து வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டு காலம் முடிவடைந்த பின்னர் | ரூ.500 ஆண்டு ஒன்றுக்கு |

இந்த வரி, ஏற்கெனவே செலுத்தப்படவேண்டிய வரியுடன் கூடுதலாக விதிக்கப்படும். இதற்குத் தேவையான சட்ட முன்வடிவு இக்கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

163. மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற் குறிப்புகளால் சுமார் ரூ.120.00 கோடி கூடுதலாக 2003–2004-ஆம் நிதி ஆண்டில் கிடைக்கும்.

164. 2003–2004-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒட்டுமொத்த பற்றாக்குறை, ரூ.1295.15 கோடி ஆகும். கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக நான் விளக்கிக் கூறியுள்ள நடவடிக்கைகளினால் வருமாண்டில் ரூ.430 கோடி திரட்ட இயலும் என்று நாங்கள் நம்புகிறோம். இது, பற்றாக்குறையை ரூ.865.15 கோடியாகக் குறைக்கும். எஞ்சியுள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க, என்னுடைய உரையின் பின் இணைப்பில் விளக்கிக் கூறியவாறு நிதிநிலையை வலுப்படுத்துவற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து செயற்படுத்துவோம். இந்த நடவடிக்கைகள் மூலமும் நம்முடைய ஆண்டுத் திட்டத்திற்கும், நாம் மேற்கொண்டுள்ள பொருளாதாரச் சீரமைப்பு நடவடிக்கைகளுக்கும் மத்திய அரசின் கூடுதல் நிதியுதவியைப் பயன்படுத்தி எஞ்சிய பற்றாக்குறையை ஈடுகட்டுவோம் என்று நம்புகிறோம்.

165. இந்த வரவு–செலவுத் திட்டம் வளர்ச்சி செயல்திட்டத்திற்கான பொருள் நிரலைக் கொண்ட ஒரு பெரிய மாற்றாகத் திகழ்கிறது. கடுமையான விளைவுகளைச் சமாளித்த நம்பிக்கையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்துள்ள வளர்ச்சி செயல் திட்டத்தை மேற்கொள்ள நம்மால் தற்போது இயலும். இந்த அரசின் மூன்றாவது வரவு–செலவுத் திட்ட அறிக்கையை உருவாக்குவதில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்கிய, போற்றுதற்குரிய தாராளமான வழிகாட்டுதலுக்கும், ஆதரவுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

166. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் துணிச்சலான மற்றும் அரிய சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கா விட்டால், இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையையே தாக்கல் செய்ய இயலாமற் போயிருக்கக்கூடும் என்று கூறினாலும் அது மிகையில்லை.

167. இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில், பேருதவியை நல்கிய மேம்பாட்டு ஆணையர் மற்றும் நிதித் துறை செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் அயராது பணியாற்றிய அலுவலர் குழுவிற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

168. 2003–2004-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை, தமிழ்நாட்டு மக்களுக்கு நான் அர்ப்பணிக்கிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 2003–2004-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

★ ★ ★

# தொழில் முதலீட்டைக் கவரும் நகரமாக சென்னையை மாற்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**

இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டலம் ஏற்பாடு செய்துள்ள ஒருங்கிணைந்த அடிப்படைக் கட்டுமான வசதிகள் மற்றும் மூலதனமும் குறித்த இந்த இரட்டைக் கருத்தரங்கில் கலந்து கொண்டு துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### தனியார் துறையினரின் ஒத்துழைப்பு

இது ஒரு சரியான தருணத்தில் நடைபெறுகின்ற கூட்டம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், தற்போது நாங்கள் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நேரம் இதுவாகும். எல்லா வகையான வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் மூலதனம் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகளும் இரண்டு முக்கியமான தூண்களாகும். மூலதனம் என்பது வளத்தை உருவாக்குவது, மக்களிடையே வருமானத்தை அதிகரிப்பது குறிப்பாக ஏழை மக்களின் கைகளில் வருமானம் வந்து சேர்வது என்ற வகையில்தான் பார்க்கின்றேன். இந்த வகையான விரைவான அல்லது வேகமான வளர்ச்சியை நாம் எட்ட வேண்டுமானால் அரசு பொதுத்துறை மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்பும் முக்கியக் காரணியாக இருந்து செயல்பட வேண்டும்.



10ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்தின் விவசாயத் துறையில் 4 சதவிகித வளர்ச்சியும், உற்பத்தித் துறையில் 7 சதவிகித வளர்ச்சியும், பணிகள் துறையில் 10 சதவிகித வளர்ச்சியுமாக ஒட்டுமொத்தத்தில் 8 சதவிகித வளர்ச்சி விகிதத்தை உறுதியோடு எட்டும் வகையில் 10ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கமாகக் கொண்டுள்ளேன். அதாவது அதிகரிக்கப்பட்ட மூலதன உற்பத்தி விகிதம் (ICOR-Incremental Capital Output Ratio) இந்த கால கட்டத்தில் 3.26 ஆக உயர்த்த நாம் முயற்சிக்க வேண்டும்.

### தனிநபர் வருமானம்

10ஆவது ஐந்தாண்டுக்கான மொத்த நிதியின் திட்ட மதிப்பீடு சுமார் ரூ.40 ஆயிரம் கோடி அளவுக்கு இருக்கும். கடுமையான நிதிப் பற்றாக்குறையால் பின்னுக்குத் தள்ளப்பட்டு, செயல்படுத்தப்படாமல் உள்ள வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நிதிச் சீரமைப்பை செயல்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பதாலும் மிகுந்த கடினமான நிலையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. தனிநபர் வருமானத்தை வரும் 2010க்குள் இரட்டிப்பாக்க வேண்டும். அதாவது தேசிய செயல்திட்ட கால இறுதிக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பாக அடைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ளோம்.

விவசாயம் மற்றும் உற்பத்தித் துறையில் வளர்ச்சி விகிதம் கடந்த 9ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்துவிட்டது. உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட தனியார் மூலதனம் குறித்த அறிக்கையில் மின் உற்பத்தித் துறை 40 சதவிகித தனியார் முதலீட்டை வரவேற்று உள்ளதாகவும் அதனையடுத்து தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் தனியார் முதலீடு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. ஆகவே, பொது முதலீடு அடிப்படைத் துறைகள் மற்றும் முக்கியமான உள்கட்டமைப்பு வசதிகளை, தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி அதனுடைய மதிப்பினை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் சவாலை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

### புதிய முயற்சிகளுக்கு வரவேற்பு

தமிழகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. ஆனால் மாநிலத்தின் நிகர உள்நாட்டு உற்பத்திக்கு (GSDP-Gross State Domestic Product) இத்துறையில் இருந்து வரும் பங்களிப்பு வெறும் 17 சதவிகிதம் தான். ஆனால் மாநிலத்தில் உள்ள

62 சதவிகித மக்கள் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலை நம்பித்தான் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துறையில் மூலதனம் செய்வது என்பது முதலீடு, புதிய நவீன தொழில்நுட்பம், திறமையான நிருவாக முறைகள் மற்றும் எளிதான சந்தைப்படுத்தும் முறைகளை உருவாக்கித் தருவது என்பது இன்னும் கடினமான ஒன்றாகத்தான் உள்ளது. நமது விவசாயிகள் அதிக நீர்தேவைப்படும் பாரம்பரிய முறைகளை விட்டு அதிக பலன் மற்றும் வருவாய் தரும் பணப் பயிர்களையும் பயிரிட முன்வர வேண்டும். அதே நேரத்தில் விவசாயம் சாராத பால் பதப்படுத்துதல், கோழி வளர்ப்பு, தோட்டக் கலை மற்றும் மீன்வளர்ப்பிலும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரவேண்டும். சிக்கனமான நீர்நிர்வாக மேலாண்மை, மண் பாதுகாப்பு மற்றும் தரிசுநில மேம்பாடு ஆகியவற்றில் என்னுடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

பண்ணைகள் மற்றும் பண்ணை நிர்வாகத்தில் தனியார் துறையினரின் புதிய முயற்சிகளையும் செயல்திட்டங்களையும் வரவேற்கின்றேன். இவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு விவசாய–பதப்படுத்துதல் மண்டலம் மூலம் தொடர்பு கொண்டுள்ளது.

மேலும் தோட்டக் கலை மற்றும் விதை மற்றும் மலர் உற்பத்திக்கு உதவும் வகையில் தனியார் துறையின் பங்களிப்பு மற்றும் முயற்சிகளை வரவேற்கின்றேன்.

### கிராமப்புற கட்டமைப்பு

கிராமப்புற அடிப்படைக் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காக 10ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் கிராமப்புற அடிப்படைக் கட்டுமான வசதி மேம்பாட்டு நிதியத்துக்கு (RIDF-Rural Infrastructure Development Fund) ரூ.2,000 கோடி நிதியை ஒதுக்கீடு செய்ய திட்டமிட்டுள்ளோம். விவசாயிகளையும், சந்தைகளையும் இணைக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம்.

விவசாயிகளையும், சந்தையையும் இணைத்து விவசாயத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் அரசின் இந்தத் திட்டத்திற்குத் தனியார் துறையினரும் இணைந்து பங்கேற்க வேண்டும் என அழைக்கின்றேன்.

விவசாயத் துறையில் உருவாகும் வருமானத்தின் வளர்ச்சியானது, உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் பரிணமிக்கும் என்பதில் நான், உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளேன்.

உற்பத்தித் துறையானது இன்று மிகவும் சிக்கலான ஒரு காலகட்டத்தில் உள்ளது. உலகமயமாக்கலின் விளைவாக, இன்று நமது பொருட்களை விற்பனை செய்யும் பாரம்பரிய சந்தைகள் மற்றும் பணிகள் துறையின் செயல்பாட்டையும், அமைப்பையும் மாற்றி அமைத்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு உற்பத்தி நிறுவனங்கள் போட்டியை எதிர்கொள்வதற்காகத் தங்களின் உற்பத்தித் தளங்களை, வளர்ந்து வரும் ஆசிய–பசிபிக் பிராந்தியங்களை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றன.

### கடுமையான போட்டி

இந்த சூழ்நிலையால் அளவுக்கு அதிகமான வாய்ப்புகள் உருவாகும் நிலையிலும் கடுமையான போட்டிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையையும் நாம் சந்திக்க வேண்டி உள்ளது.

இந்திய தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்து, டில்லியில் இந்திய பொருளாதார மாநாடு 2002, இரண்டாவது கட்ட பொருளாதாரக் கொள்கை மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தங்களை மத்திய–மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தியது.

உற்பத்தித் துறையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களாக டேவிட் டோலர் உலக வங்கிக்காகத் தயாரித்த அறிக்கையில் முக்கிய காரணியாகக் கீழ்க்கண்டவற்றைச் சுட்டிக்காட்டி இருப்பதோடு, அதனைச் செயல்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

★ அதிகாரப் பரவலையும் மற்றும் பணிகள் நடைபெறும் காலம் மற்றும் செலவுகளையும் குறைத்தல்
★ தரமான மின்சார விநியோகம்
★ தொழிலாளர் உற்பத்தித் திறன்
★ மாநில அளவிலான வரி சீர்திருத்தம்
★ தொழிற்சாலைக்குத் தேவையான வலிமையான அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்கித் தருவது ஆகியவையாகும்.

என்னுடைய தலைமையிலான அரசு உற்பத்தித் துறைக்கு முக்கிய காரணியாக விளங்கும் மேற்கண்ட பணிகளுக்கான கொள்கை மற்றும் செயல் திட்டங்களை ஒருங்கிணைத்துள்ளது.

### ஒற்றை விண்ணப்ப முறை

முதலீட்டாளர்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க ஒரே ஓர் அமைப்பை அணுகினால் போதும். வழிகாட்டும் இயக்கம் ஒரே விண்ணப்பத்தின் மூலம் எல்லா ஒழுங்குமுறை ஆணையத்தில் இருந்து தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் குறித்த கால அளவுக்குள் பெற்றுத் தர வழிவகை செய்துள்ளது.

ஏற்கெனவே திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கான கால அளவும் மற்றும் செலவுகள், மாநிலத்தின் முதலீடு செய்பவர்களுக்குக் குறைந்துள்ளது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பொதுவான கணக்கு சமர்ப்பிக்கும் விண்ணப்பம் நடைமுறைக்குக் கொணர்வதன் மூலம் ஏற்கெனவே 51 விண்ணப்பங்கள் மூலம் காண்பிக்கப்படும் கணக்கு நடைமுறைகள் முறை மாற்றி அமைக்கப்படுவதால் தொழில் முனைவோர் பயன்பெறுவர். ஒற்றை விண்ணப்ப முறையில் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் நிர்வாக நேரம் குறைவதோடு அரசு அலுவலகங்களில் செலவிடும் நேரம் மட்டுப்படுத்தப்படும்.

### தரமான மின்சாரம்

2003 ஜனவரி முதல் தேதியில் இருந்து சர்வதேச மின்சார விநியோக தர அளவான 50 ஹெர்ட்ஸ் அளவில்




மின் விநியோகத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கி வருகிறது என்பதை உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நிலை கடந்த ஜனவரி 2003, 1ஆம் தேதி முதல் கிடைக்கும் மின்சாரத்துக்கான புதிய கட்டண முறையைச் செயல்படுத்தியதால் தான் வழங்க முடிகின்றது. மின்சாரம் கிடைக்கவில்லை, தட்டுப்பாடு என்பது எல்லாம் தற்போது இல்லை. தரமான மின்சாரத்தை வழங்கவும், ஒருங்கிணைந்த மறுசீரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமும் தமிழ்நாடு மின்சார வாரியத்தைத் தரமானதாகவும், தலைசிறந்ததாகவும் மாற்ற உறுதி கொண்டுள்ளேன்.

உற்பத்தித் துறையில் தேவைப்படும் மனித வளங்களுக்குத் தமிழகத்தில் குறைவே இல்லை. உற்பத்தித் துறைக்குத் தேவையான மனித சக்தியை உருவாக்கித் தருவதில் தமிழகம் தனி இடத்தைப் பெற்றுள்ளது.

ஆண்டுதோறும் 75 ஆயிரம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் தமிழகத்தில் உள்ள 500க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து பயிற்சி பெற்று வெளிவருகின்றனர்.

பள்ளிக் கூடங்களில் கணினிப் பயிற்சியை அறிமுகப்படுத்தியதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது.

இந்தியாவில் நிலவும் வியாபாரப் போட்டியைச் சமாளிக்க தொழிலாளர்களின் ஊதியத்தையும் உற்பத்தி திறனையும் அதிகரிக்கத் தொழிலாளர்களும் நிருவாகத்தினரும் பேசி ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

பழைய மற்றும் நலிவடைந்த தொழிற்சாலைகள் உலகமயமாக்கல் கொள்கையால் ஏற்பட்டுள்ள தற்போதைய போட்டி சூழ்நிலையை எதிர்கொள்ள முடியாமல் உள்ளது. அதனைச் சீரமைக்கப் புதிய நிதி முதலீடு செய்யப்பட வேண்டும்.

தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது மற்றும் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளும் தன்மை ஆகியவற்றை நம்முடைய தொழிற்கல்வி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

இந்திய தொழில் கூட்டமைப்பு இந்த செயல் திட்டத்தைச் சிறப்பான வகையில் செயல்படுத்தத் தேவையான முழு செயல்திட்டம் ஒன்றை வகுத்து வளர்ச்சி காண வேண்டும்.

இரண்டாவது தொழிலாளர் ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது குறித்த ஆரம்ப கட்டப் பணிகள் குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகின்றது. நாங்களும் இதனை மாநில அளவில் செயல்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து வருகின்றோம்.

### சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

உயர்தரமான அடிப்படை கட்டுமான வசதிகளை, குறைந்த முதலீட்டில் கிடைக்கச் செய்வது நவீன உற்பத்திக்குத் தேவையாகும். கடற்கரை நகரங்களான எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடியில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

திருப்பூர் மற்றும் சென்னையை அடுத்த இருங்காட்டுக் கோட்டையில் இரண்டு ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்காக்கள் விரைவில் செயல்பட உள்ளது. ஊட்டியில் மலர் ஏற்றுமதி பூங்கா விரைவில் செயல்பட உள்ளது. மேலும் தருமபுரி மாவட்டத்தில் தோட்டக் கலைத்துறை (பழவகை ஏற்றுமதி பூங்கா) அமைக்கப்படவுள்ளது.

அதே போன்று சுற்றுப்புறச் சூழல் சார்ந்த தொழில் பூங்கா ஒன்று திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அமைக்கப்படவுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நவீன ரப்பர் பூங்கா அமைக்கப்பட உள்ளது.

பெருகி வரும் சமூக அடிப்படை கட்டுமான தட்டுப்பாட்டின் காரணமாகச் சென்னைக்கு அருகில் ஒருங்கிணைந்த நகரங்களை உருவாக்க என்னுடைய தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது. அதே போன்று பெருகி வரும் உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரமான அடிப்படை கட்டுமான வசதிகளை உருவாக்கி தரும் வகையில் தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் நகரங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படும்.

### உலக உற்பத்தியாளர்களுக்கு முதலீட்டுக்குச் சென்னை சிறந்த இடம்

இந்த தொழிற்பேட்டைகள் மற்றும் நகரியங்களை மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் தனியார் துறை ஒத்துழைப்பை எனது அரசு வரவேற்கின்றது. இந்த நடவடிக்கைகள் தமிழகத்தை உலக உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் முதலீடு செய்ய சிறந்த இடமாக சென்னையைத் தேர்ந்தெடுக்க உதவி செய்யும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தில் பணிகள் துறையில் அதிக வேலை வாய்ப்புகளும், வருவாய் பெருக்கத்திற்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. பணிகள் துறையில் முக்கியமான துறையாக தகவல் தொழில்நுட்பத்துறை விளங்கி வருகிறது. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் தரமான தேர்ச்சி பெற்ற பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்கள், மென்பொருள், வன்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் நிபுணத்துவம் கொண்டவர்கள் ஏராளமாக இருக்கின்றனர்.

பணிகள் துறையில் அதிகமான அளவில் வேலை வாய்ப்பை உருவாக்கி தரும் துறையாக தகவல் தொழில்நுட்பத் துறை விளங்கி வருகிறது. இதில் தமிழகம் தனக்கென தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

### அறிவுசார்ந்த நகரம்

தெற்காசிய மண்டலத்தில் அறிவு சார்ந்த நகரமாகச் சென்னையை மாற்றுவது என்று என்னுடைய தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப மையமாக விளங்கும் மத்திய கைலாசிலிருந்து சிறுசேரி வரை உள்ள பகுதியைச் சர்வதேசத் தரத்திற்கு இந்த ஆண்டுக்குள் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பகுதி விரைவில் நூறு கோடி டாலர் முதலீடு நடைபெறும் இடமாக மாறும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பகுதியில் 15 இலட்சம் சதுர அடிப்பரப்பில் மற்றும் ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்கா சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட உள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தைப் போன்றே உயிரி தகவல் தொழில்நுட்பத்துறையிலும் உலகம் முழுவதிலும் இருந்து முதலீடுகள் தமிழகத்தில் செய்யப்படுகின்றது. தமிழ்நாடு தொழில்நுட்ப வளர்ச்சி கழகமும் (TICEL-TIDCO Centre for Life Science) அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக் கழகமும் இணைந்து உயிரி அறிவியல் பூங்கா ஒன்றை இந்த ஆண்டு அமைக்கின்றது. இந்த பூங்காவில் உயிரியல் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஆராய்ச்சி மையங்கள் ஆகியவை இருக்கும். இதனை வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தி இலாபம் தரும் வகையில் பணிகளை மேற்கொள்ள அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

தமிழகத்திலுள்ள பெரிய நகரங்களான கோவை, திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பம், உயிரியல் நுட்பம் தொடர்பான முதலீட்டுக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. உலகம் முழுவதையும் இணைக்கும் கண்ணாடி இழை கேபிள் நெட்வொர்க் 5 ஆயிரம் கிலோ மீட்டர் அளவுக்கு இந்த நகரங்களில் பரவியுள்ளது.

தரமான நல்ல அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்கித் தருவதற்கான மூலதனத்தை அரசால் மட்டும் முதலீடு செய்ய இயலாது. கடுமையான நிதி நெருக்கடி காரணமாக அரசால் மூலதனம் செய்ய இயலாத நிலையில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் உள்ள நிலையில் தனியார் துறையினர் இதுபோன்ற திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும்.

இந்திய அடிப்படைக் கட்டுமான வசதிகள் குறித்து ராக்கேஷ் மோகன் குழுவின் பரிந்துரையின்படி அரசும், தனியாரும் இணைந்து (PPP-Public Private Partnership) இதுபோன்ற அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்க முன்வர வேண்டும். அதே போன்று பயன்படுத்துபவர்களே உருவாக்கிக் கொள்ளும் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும்.

10–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தின் வளர்ச்சியில் பொதுத்துறையும் தனியார் துறையும் இணைந்து மாநிலத்தின் வளர்ச்சியில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முடிவெடுத்துள்ளோம்.

அடிப்படைக் கட்டுமான வசதிகளைப் பெருக்குவதற்காக மத்திய அரசு அறிவித்த 2003–2004ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் போதுமான அளவு நிதி ஒதுக்க முடியாத நிலை உள்ளது. இதற்குக் காரணம் போதுமான மூலதனம் இல்லாதது தான். எனவே என்னுடைய தலைமையிலான அரசு பத்தாவது ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தில் அடிப்படை கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தனியார் முதலீட்டைப் பெறும் வகையில் புதிய சட்ட திருத்தத்தைக் கொண்டு வர உள்ளது.

இந்த சட்ட திருத்தத்தின் மூலம் சலுகை மேம்பாட்டு ஒப்பந்தங்கள் இலாபம்–நஷ்டத்தில் சம பங்கு மற்றும் அடிப்படைக் கட்டுமான வசதிகள் மேம்பாடு மற்றும் அமலாக்கம் குறித்த விதிமுறைகள் இதில் அடங்கும்.

தேசிய அனல்மின் கழகத்துடன் (NTPC-National Thermal Power Corporation) இணைந்து தமிழக அரசு 1000 மெகாவாட் உற்பத்தி நிலையத்தை வட சென்னையிலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC-Neyveli Lignite Corporation) கழகத்துடன் இணைந்து தமிழக அரசு 1000 மெகாவாட் அனல்மின் நிலையம் ஒன்றைத் தூத்துக்குடியிலும் துவக்கவுள்ளது.




### மின்உற்பத்தி 50 சதவிகிதம் அதிகரிக்கும்

இந்திய அரசு ஏற்கெனவே இரண்டாயிரம் மெகாவாட் அணுமின் நிலையம் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் அமைத்து வருகிறது. இதன் உற்பத்தி எதிர்காலத்தில் இரட்டிப்பாக்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் தற்போது 8200 மெகாவாட்டாக இருக்கும் மின் உற்பத்தித் திறன் 50 சதவிகிதம் அதிகரிக்கப்படும்.

கடந்த 1995–இல் அறிவிக்கப்பட்ட தமிழகச் சாலைத் திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தத் திட்டம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் நாகப்பட்டினத்தில் இருந்து தூத்துக்குடி வரை ரூ.2 ஆயிரம் கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதே போன்று மற்ற சாலைகளும் 13 புறவழிச் சாலைகளும் மேம்படுத்தப்பட்டு மற்ற நகரங்களில் உள்ள போக்குவரத்து இடையூறுகள் களையப்படும்.

அதே போன்று மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலைகளைத் தனியார் உதவியுடன் மேம்படுத்தி பொருளாதார வாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வரும் 2005–ஆம் ஆண்டிற்குள் சென்னைத் துறைமுகத்தையும்–எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் சாலைப்பணி முடிவடையும் போது சரக்குப் பெட்டி கையாளுவதிலும், ‘கண்டெய்னர்’ போக்குவரத்து சென்னைத் துறைமுகத்தில் அதிகரிக்கப்படும்.

இது எண்ணூர் விரைவு நெடுஞ்சாலையில் கடலரிப்பு பிரச்சினையையும் தீர்க்கும் இந்தத் திட்டங்கள் எல்லாம் தமிழகத்தின் ஒட்டு மொத்த சாலைப் போக்குவரத்தை மேம்பாடு அடையச் செய்யும்.

மாநிலத்தில் உள்ள நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் உள்ள தரமான அடிப்படைக் கட்டுமான வசதிகள் அம்மாநிலம் பொருளாதாரத்தில் சிறப்பாக இருப்பதை எடுத்துக்காட்டும் நல்ல அறிகுறிகளாகும்.

### மாபெரும் குடிநீர்த் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படைக் கட்டுமான வளர்ச்சிக் கழகம் மற்றும் நிதி சேவை நிறுவனம் (TNUIFSL-Tamil Nadu Urban Infrastructure and Financial Services Ltd) அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சிக்கு (PPP-Public Private Partnership) சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் மூலம் ரூ.200 கோடி செலவில் நகர்ப்புறக் கழிவகற்றல், குடிநீர் வழங்கல், போக்குவரத்து வசதிகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும். ரூபாய் 1000 கோடி மதிப்பில் தனியார் மற்றும் அரசும் இணைந்து செயல்படுத்தும் மாபெரும் குடிநீர்த் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் திருப்பூர் நகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் பனியன் ஏற்றுமதியாளர்கள் பயனடைவார்கள். ஒருங்கிணைந்த சென்னை பெருநகர அடிப்படைக் கட்டுமான வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ.18 ஆயிரம் கோடி செலவில் மெகா திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இதில் ரூ.10 ஆயிரம் கோடி செலவில் மின் விநியோகம் சாலை மேம்பாட்டுப் பணிகள், போக்குவரத்து, குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், திடக்கழிவு அகற்றல் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும். இதற்கு அதிக அளவு முதலீடு தேவைப்படுவதால் முதலீட்டிற்கான புதிய வழிமுறைகள் கண்டறியப்படும்.

### ஆசியாவிலேயே சிறந்த நகரமாகச் சென்னை

மேலும் பெரிய அளவில் தனியார் துறையில் பங்களிப்பும் அவசியமாகிறது. சென்னையைப் புதுப்பித்து தென்னிந்தியாவில் மிகச்சிறந்த நகரமாகவும் தென்கிழக்காசியாவின் நுழைவு வாயிலாகவும் மாற்றி முதலீடு செய்வதற்கு ஆசியாவிலேயே சிறந்த நகரமாகச் சென்னையை மாற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய தலைமையிலான அரசின் நோக்கமாகும்.

இதனை நிறைவேற்றுவதில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் கண்டிப்பாகக் கிடைக்கும் என்பதை நான் முழுமனதுடன் நம்புகிறேன்.

சென்னை நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க ரூ.720 கோடி செலவில் ஒருங்கிணைந்த புதிய வீராணம்

திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் சென்னை நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க நவீன தொழில்நுட்பத்துடன் கடல்நீரை குடிநீராக்கும் புதிய தொழில்நுட்பங்கள் குறைந்த மூலதனத்தில் தற்போது உள்ளது.

சென்னை நகரில் உள்ள கழிவுநீரைச் சுத்திகரித்து தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் திட்டம்–II செயல்படத் துவங்கும்போது போதுமான அளவு குடிநீர் அடுத்த மூன்றாண்டுக்குள் கிடைக்கும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்திற்குப் பொதுமக்களுடைய பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதனை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடிப்படை கட்டுமான வசதிகள் என்பதைப் பற்றி குறிப்பிடும் போது சாலைகள், குடிநீர் வழங்கல் ஆகியவை முக்கியமானவைதான். அதே நேரத்தில் தரமான பாதுகாப்பான சமூக வாழ்க்கை வாழத் தேவையான, சமூக கட்டமைப்பையும் உருவாக்க வேண்டியதும் அவசியமாகிறது.

### சுகாதாரத்தின் தலைநகர்

சுகாதாரத்தைப் பொறுத்தமட்டில் சென்னை நகரம் இந்தியாவில் உள்ள மற்ற எல்லா நகரங்களைவிட அதிக அளவில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மருத்துவமனைகளைக் கொண்டுள்ளது. எனவே, இந்தியாவில் சுகாதாரத்தின் தலைநகரமாகச் சென்னை விளங்குகிறது என்று அழைப்பதில் தவறில்லை.

நம்மிடம் உள்ள தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும் தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்க இயலும்.

மேலும் சுகாதாரத் துறை எதிர்காலத்தில் அபரிமிதமான வகையில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இந்தத் துறையில் அதிகமான அளவு வேலை வாய்ப்புக்கு வசதி வாய்ப்புகள் உள்ளன.

அரசு மற்றும் தனியார் இணைந்து தொழில்நுட்ப வல்லுநர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் செவிலியர்களை உருவாக்க வேண்டும். தமிழகத்திலிருந்து பயிற்சி பெற்று வரும் சுகாதாரப் பணியாளர்கள் உலகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு விரிவான சீர்திருத்தத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக நிதித்துறையில் செயல்படுத்தப்படும் சீர்திருத்தங்களுக்கு உற்பத்தித் துறையைச் சார்ந்தவர்களும், தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த தொழில் முனைவோர்களும், தொழில் அதிபர்களும் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தருவீர்கள் என்றும் அரசின் இந்த தைரியமான முயற்சிக்கு ஆதரவு தருவீர்கள் என்றும் நம்புகிறேன்.

தற்போது நடைமுறையில் உள்ள உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் கொள்கைகளால் உருவாகியுள்ள போட்டிகளைச் சமாளிக்கும் வகையில் இந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு கடுமையான வழிமுறைகளை உள்ளடக்கிய நிதிச் சீர்திருத்தத்தை மிகப் பெரிய அளவில் சீர்திருத்தத்தைச் செய்து வருகின்றோம். முதலீட்டுக்கு ஏற்ற இடமாகத் தமிழகத்தை மாற்றும் வகையில் பல்வேறு சீர்திருத்தங்களை அரசு எடுத்து வருகிறது.

### தொழிலதிபர்கள் தயாராக வேண்டும்

உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகளைச் செயல்படுத்துவதால் ஏற்பட்டுள்ள வர்த்தகப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவதோ, தோல்வியைத் தழுவுவதோ உங்கள் கைகளில்தான் உள்ளது. முதலீடுகளை ஈர்ப்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுப்பது அரசின் பணியாகும்.

தமிழகத்தில் ஒரு தரமான ஆடுகளத்தை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது; முதலீட்டாளர்கள் இந்தப் போட்டியைச் சமாளிக்க வேண்டும். இந்த போட்டியில், ரன் ஏதும் எடுக்காமல் அவுட் ஆகலாம் அல்லது சிக்சர் அடித்து வெற்றி பெறலாம். தென்னாப்பிரிக்காவில் உலக கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியைச் சந்திக்கவுள்ள இந்திய அணி வெற்றிபெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்துறையில் ஒரு சிறப்பான இன்னிங்சுக்கு தொழிலதிபர்கள் தயாராக வேண்டும்.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவிப்பதோடு பங்கேற்ற அனைவருடைய முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்கள்.

முன்னதாக இந்திய தொழில் கூட்டம் (தென் மண்டலம்) சென்னை லீ ராயல் மெரிடியனில் ஏற்பாடு செய்திருந்த அடிப்படை உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு மாநாட்டை துவக்கி வைக்க வந்த தமிழக முதல்வர் அவர்களைத் தமிழ்நாடு இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் பி.கே. மொகாபத்ரா பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

பின்னர் முதல்வர் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில் இந்திய தொழில் கூட்டமைப்பின் ஆய்வறிக்கையை முதல்வர் அவர்கள் வெளியிட தொழில் அதிபர் அருண் ஜெயின் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டலத் தலைவர் டி.கண்ணன், இந்திய தொழில் கூட்டமைப்பின் உள்கட்டமைப்புத் துணைக் குழுத் தலைவர் மல்லிகா சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் தென்மண்டலம் ஏற்பாடு செய்திருந்த "முதலீட்டில் வெற்றிப்பாதையில் தமிழகம் மற்றும் சுபின்போ – 2003" (ஒருங்கிணைந்த அடிப்படைக் கட்டுமான வளர்ச்சி) ஆகிய இரு கருத்தரங்குகளை சென்னை லீ ராயல் மெரிடியன் ஹோட்டலில் 19.3.2003 அன்று துவக்கிவைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

# தமிழகத்தில் ஒரு சிலிகான் பள்ளத்தாக்கு

*மாண்புமிகு முதலமைச்சர் உறுதி*

தமிழக அரசின் சார்பில் ஸ்காட் மெக் நீலி மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவன அதிகாரிகளை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம் ஆகியவை இணைந்து தலைசிறந்த இணையதள சேவைகள், மின்னணு பயிற்சி மற்றும் மின்னணு அரசுப் பணிகள் ஆகியவற்றில் இணைந்து செயல்படுவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

இந்த ஒப்பந்தம் அரசு, கல்வி நிறுவனம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவை இணைந்துள்ளதோடு பொது மற்றும் தனியார் துறை (PPP-Public Private Partnership) இணைந்து செயல்பட முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.



தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழகத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்திற்கு வளத்தையும், புகழையும் உருவாக்கித் தருவதில் இது முக்கியப் பங்காற்றும் என்று நம்புகிறேன். என்னுடைய தலைமையிலான அரசு கடந்த ஆண்டு வெளியிட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கையின் நோக்கமும் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

21ஆம் நூற்றாண்டின் வளர்ச்சி என்பது அரசினால் மட்டுமே இயலாது என்பது என்னுடைய திடமான கருத்தாகும். சிலிகான் பள்ளத்தாக்குக் கூட்டு முயற்சியால் உருவானது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழகத்தில் மற்றொரு 'சிலிகான் பள்ளத்தாக்கு' உருவாவதற்கு தளம் அமைத்துள்ளோம் என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஒரு பகுதியான மின்னணு நிருவாகத்தை பல்வேறு அரசுத் துறைகளில் பயன்படுத்த இந்த ஒப்பந்தம் ஒரு நுழைவாயிலாக அமைந்துள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்பெறும் வகையில் பல்துறை அறிவு சார்ந்த பணிகளையும் மற்றும் தகவல்களையும் இந்த ஒருங்கிணைந்த தகவல் மையத்தின் மூலம் நிர்மானித்து அதனைச் செயல்படுத்துவதில் வெற்றி கண்டு, அதனை

மேம்படுத்தி சிறப்பாகச் செயல்பட அண்ணா பல்கலைக்கழகத்துக்கும், சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்துக்கும் எனது அரசு முழு ஒத்துழைப்பை நல்கும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்தின் 'ஸ்டார் ஆபீஸ் 6.0' என்ற மென்பொருளை இலவசமாக வழங்க இருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 'ஸ்டார் ஆபீஸ் 6.0' மென்பொருளை பள்ளிகளிலும் மற்ற நிறுவனங்களிலும் பயன்படுத்த அரசு ஊக்கத்தை அளிக்கும்.

தமிழகத்தில் மின்னணு நிருவாகம் செயல்படுத்தப்பட்டுள்ள துறைகள் குறித்து மெக் நீலி அவர்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

எளிய மற்றும் வெளிப்படையான நிருவாகப் பதிவுத் திட்டத்தைத் (Simple and Transparent Administration of Registration - STAR) தமிழகப் பதிவுத் துறையில் அமல்படுத்தி உள்ளோம். இந்த திட்டத்தின் முதல் கட்டமாக 17 மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக 325 மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினி மயமாக்கப் பட்டுள்ளன. மூன்றாவது கட்டமாக மற்ற எல்லா மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட உள்ளன.

இதே போன்று நிருவாகத்தின் முதுகெலும்பாக தாலுகா அலுவலகங்கள் உள்ளன. தமிழகத்தில் உள்ள 206 தாலுகா அலுவலகங்களிலும் நில ஆவணங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளது. கணினிமயமாக்குவதில் எங்களது பணி தொடர்ந்த வண்ணம் உள்ளது.

21.3.2003 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள என்னுடைய அலுவலகத்தில் இருந்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைத் தலைமையிடம் ஆகியவற்றை இணைக்கும் 'வீடியோ கான்பரன்சிங் நெட்வொர்க்'-ஐத் தொடங்கி வைத்தேன். இந்த வீடியோ கான்பரன்சிங், தகவல் பரிமாற்றம், நேருக்கு நேர் கலந்துரையாடல் மற்றும் விரைந்து முடிவெடுத்தல் ஆகிய பணிகளைச் செய்ய உதவி புரியும்.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வீடியோ கான்பரன்சிங் முறை, பரப்பளவு, தன்மை மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவிலேயே, வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

அரசு மற்றும் தனியார் துறை இணைந்து செயல்படுவதற்கு மற்றொரு அருமையான எடுத்துக்காட்டு என்னுடைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட, பள்ளிகளில் கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.


அரசுத் துறையில் கணினியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு உரிய நடைமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்து ஆராய ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் என்னுடைய தலைமையிலான அரசு உறுதியுடனும் முழுமூச்சுடனும் செயல்பட்டு வருகிறது. அறிவுசார்ந்த சமுதாயமாக மாறிக் கொண்டே இருக்கின்ற நிலையில் எல்லோருடைய முகத்திலும் புன்னகையையும் மகிழ்ச்சியையும் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

தமிழக அரசு மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து பணியாற்ற உள்ள ஸ்காட் மெக் நீலி மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதுமையான திட்டம் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் 22.3.2003 அன்று அரசுத் துறையில் மின்னணு நிருவாகத்தைப் பயன்படுத்த அமெரிக்க நிறுவனமான சன்மைக்ரோ சிஸ்டத்துடன் தமிழக அரசு மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.* ★



# விளையாட்டு மூலம் இளைஞர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்




51ஆவது அகில இந்திய காவல்துறை தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் 2002–ன் நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எந்தவொரு விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா இறுதி நேரம் என்பது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளில் ஒரு சிலருக்கு மகிழ்ச்சியும், வேறு சிலருக்கு துக்கமும் சிலருக்கு வெற்றியும் வேறு சிலருக்கு தோல்வியும் என்பது இரண்டறக் கலந்த ஒன்றாகும். ஆனால் ஒட்டு மொத்தத்தில் விளையாட்டுக்கு அது ஒன்று தான் பெருமையாகும்.

இந்தப் போட்டிகளில் இந்தியா முழுவதிலும் இருந்து வந்து கலந்து கொண்ட வீரர்களில் சிலர் வெற்றி பெற்ற கோப்பைகள் மற்றும் மெடல்கள் பளபளக்க, பல வீரர்கள் சற்று ஏமாற்றத்துடன் திரும்பினாலும், இந்தப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களின் மனதில் இந்த நாட்களில் பெற்ற அனுபவங்கள் பசுமையாக அவர்களின் வாழ்க்கையில் இருக்கும் என்பதை நினைவு கூர விழைகின்றேன்.

தமிழகத்திற்கு என்றே உயர்ந்த பாரம்பரியம், பழக்கவழக்கம், கலை மற்றும் கலாச்சாரம் வந்தோரை உபசரிக்கும் பண்பு ஆகியவைகளில் சிறந்து விளங்குவது எல்லோரும் அறிந்த ஒன்று.

நான்காவது முறையாக தமிழக காவல் துறையினர் இந்தப் போட்டிகளை சென்னையில் நடத்துவது குறித்து நான் பெருமையடைகின்றேன்.

### நேரு விளையாட்டு அரங்கத்தின் பெருமை

இந்த உலகத்தரம் வாய்ந்த நேரு விளையாட்டு அரங்கம் கடந்த முறை நான் முதல்வராக




இறகுப்பந்து, பூப்பந்து மற்றும் நீச்சல் ஆகியவற்றுக்கான மையங்கள் தனியார் ஒத்துழைப்புடன் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**ஊக்கத்தொகை**

தகுதியும், திறமையும் வாய்ந்த சாதனை புரிந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்துவதற்காகவும், ஒலிம்பிக் ஆசிய விளையாட்டு போட்டிகள், காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், தேசிய விளையாட்டு போட்டிகள் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை புரியும் தமிழக வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு என்னுடைய தலைமையிலான அரசு ரூ.25,000 முதல் ரூ.1 கோடி வரை அதிகபட்சமான ஊக்கத் தொகை வழங்கி உற்சாகம் அளித்து வருகின்றது என்பதை இங்கு நினைவுபடுத்த விழைகிறேன். இதன்படி வெற்றிபெற்ற வீரர்களுக்கு மட்டுமல்லாது அவர்களைத் தயார் செய்த பயிற்சியாளர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்கி உற்சாகப்படுத்தி வருவதையும் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கடந்த 2001ஆம் ஆண்டு லூதியானாவில் நடைபெற்ற 31ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 93 பேர்களுக்கு ரூ.31.75 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கியுள்ளது என்னுடைய தலைமையிலான அரசு.

**ஊக்கத்தைப் போற்ற சில பரிசுகள்**

இதேபோன்று ஜப்பான் நாட்டில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்ற என்.வி.ஆர். வாசுதேவனுக்கு ரூ.1 இலட்சமும், சர்வதேச தகுதி பூப்பந்துப் போட்டிகளில் பங்கேற்ற ருஷ்மி சக்கரவர்த்திக்கு ரூ.4 இலட்சமும் ஊக்கத் தொகை வழங்கி ஊக்கம் கொடுத்துள்ளோம்.

இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளிலும், தென்கொரியாவின் பூசன் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளிலும் வெண்கலம் மற்றும் தங்கப்பதக்கம் வென்ற அஞ்சு ஜார்ஜ்க்கு ரூ.30 இலட்சம் பரிசுத் தொகை வழங்கி உள்ளோம். மேலும் ஸ்நூக்கர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ரபாத் ஹபீப்க்கு ரூ.20 இலட்சம் பரிசுத் தொகை வழங்கியுள்ளது என்னுடைய தலைமையிலான அரசு.

மேற்கூறியவை எல்லாம் என்னுடைய தலைமையிலான அரசு விளையாட்டு வீரர்களின் ஊக்கத்தையும், அவர்களின் உழைப்பையும் போற்றும் வகையில் கொடுத்தவற்றில் சில தான்.

இருந்தபோது 1993ஆம் ஆண்டில் தான் கட்டப்பட்டது. சுமார் 40,000 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் வகையில் சர்வதேச தரத்தில் கட்டப்பட்டது என்பதனை இங்கு நினைவுப்படுத்த விழைகின்றேன்.

ஜவஹர்லால் நேரு சர்வதேச அழைப்பு கால்பந்தாட்ட போட்டிகள், சர்வதேச அழைப்பு தடகளப் போட்டிகள், மதிப்பும் மரியாதை மிக்க தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (1995) ஆகிய போட்டிகள் நடைபெற்ற பெருமை இந்த நேரு விளையாட்டு அரங்கிற்கு உண்டு. மேலும் 1995இல் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 7 தெற்காசிய நாடுகளும் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. கடந்த 1994–95ஆம் ஆண்டுகளில் 4 சர்வதேச தரத்தினாலான விளையாட்டு அரங்குகள் என்னுடைய ஆட்சியில் கட்டப்பட்டன.


அவை டென்னிஸ், ஹாக்கி, நீச்சல் மற்றும் உள்விளையாட்டு அரங்கம் ஆகியவையாகும். கடந்த 1996–2001ஆம் ஆண்டுகளில் ஆட்சி நடத்தியவர்கள் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட இந்த விளையாட்டு அரங்குகளைப் பயன்படுத்தாமலும், பராமரிக்காமலும் விட்டுவிட்டனர். தற்போது அவற்றைத் தொடர்ந்து பராமரிக்கவும், பயன்படுத்துவதற்கு ஏற்றவகையிலும் தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து வருகின்றேன். விரைவில் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் செஸ் போட்டிக்காக ஒரு கட்டடமும், வலை அடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நம்பிக்கை உள்ளது**

சாதனையாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்றை நான் அறிவித்துள்ளேன். தேசிய அளவில் பதக்கங்கள் வாங்கிய வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து அவர்களின் தகுதியை மேம்படுத்தி சர்வதேச போட்டிகளில் பங்கேற்கச் செய்து சாதனைபுரிய தேவையான அனைத்து உதவிகளும் இந்தத் திட்டத்தின் மூலம் செய்யப்படும். எல்லா விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பதக்கம் வென்று சாதனையாளர்களாக வரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் என்னுடைய தலைமையிலான அரசு மேற்கண்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. அந்த என்னுடைய எண்ணத்தை நீங்கள் கட்டாயம் செய்து சாதனை படைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உங்கள் மேல் உள்ளது.

**விடாமுயற்சியால் வெற்றி**

மனிதகுலத்துக்கு விளையாட்டு சிறப்பான வகையில் பல்வேறு வகையில் உதவி புரிந்து வருகின்றது என நான் நம்புகின்றேன். விளையாட்டு வீரர்களுக்கு இடையே போட்டியை அதிகப்படுத்தும் அதே நேரத்தில் விளையாட்டு ஆரோக்கியமான போட்டியைத் தான் உருவாக்கும். ஒவ்வொரு விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் அவர்களுக்கென்று தனியாக வரைமுறைகளை, கொள்கைத் திட்டங்களை வகுத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் விடாமுயற்சியுடன், திரும்பத் திரும்ப முயன்றால் வெற்றியை கண்டிப்பாக அடையமுடியும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.




எந்தவொரு விளையாட்டு போட்டியானாலும் வெற்றி பெற்றவர்கள், தோற்றவர்கள் இருப்பது இயல்புதான். ஆனால் வெற்றி பெற்றவர்களும், தோல்வி அடைந்தவர்களும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வெற்றி பெறுவது மட்டும் வாழ்க்கையில் முக்கியமானது அல்ல. ஆனால் அதற்காகப் போராட வேண்டும். வெற்றி பெறுவதற்கு தேவையான முயற்சிகளில் முழுவதுமாக நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இது விளையாட்டுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் பொருந்தும்.

காவல்துறையில் பணியாற்றும் ஆண் ஆனாலும், பெண் ஆனாலும் காவலர் என்ற ஒரே சொல்லால் அழைக்கப்படுகிறார். காவலர் என்ற சொல் சட்டத்தின் காவலர், மக்களின் காவலர் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இத்தகைய காவலர் பணியில் மெலிந்தவர்களுக்கோ, முயற்சியற்றவர்களுக்கோ, தோல்வி மனப்பான்மை உள்ளவர்களுக்கோ சிறிதும் இடமில்லை. காவல்துறையில் உள்ளவர்களுக்கு, விளையாட்டு மன வலிமையை உண்டாக்கி சமூகத்திற்கும், மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற இலட்சியத்தை உருவாக்கும் என்று நம்புகின்றேன். விளையாட்டு, வீரர்களை உருவாக்குவதில்லை. அவர்களிடம் உள்ள திறமையை வெளிக் கொணருகின்றது.

விளையாட்டில் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து செயல்படுவதால், அந்தக் குழுவில் உள்ளவர்களிடையே வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை உண்டாக்குகின்றது. நாம் நமது பள்ளி நாட்களில் கற்ற குழுவில், நான் என்ற தனி ஒருவனுக்கு இடம் இல்லை என்று கற்றதை மறக்க கூடாது. இதனால்தான் எனது அரசு காவல் துறையில் விளையாட்டு வீரர்களுக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு செய்துள்ளது. இதே மாதிரி சிறைத்துறை, வனத்துறையிலும் 10 சதவீத இடத்தை விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்க நான் உத்தரவு பிறப்பித்துள்ளேன். இதனால் காவல் துறையில் அதிக அளவு விளையாட்டு வீரர்கள் பணியாற்ற முடியும். இரண்டு தரப்பிலும் நன்மை கிடைக்கும்.

தமிழ்நாடு தனது காவல்துறையை பற்றி பெருமை அடைகின்றது. இதன் அதிகாரிகள், ஆண், பெண் காவலர்கள் நெருக்கடியான நேரங்களில் திறம்பட செயல்பட்டு பணியில் தங்களது திறமை பளிச்சிட செயலாற்றி உள்ளனர். நமது காவல் துறைக்கு விளையாட்டு நல்ல மதிப்பை பெற்றுக் கொடுத்துள்ளது. அகில இந்திய அளவில் நடந்த போலீஸ் விளையாட்டு போட்டிகளில், நமது காவல்துறை திறம்பட பங்கேற்றுள்ளது. தமிழக அளவில் நடக்கும் காவல்துறை போட்டிகளால் இத்துறையில் உள்ள திறமையானவர்களை கண்டறிய முடிகின்றது. நான் சமுதாய காவல் என்ற புதிய முறையைப் பற்றியும், வலியுறுத்தி கூறுகின்றேன்.




இதனால் காவல் துறைக்கும், மக்களுக்கும் இடையே சிறந்த புரிந்து கொள்ளும் நிலை ஏற்படும். விளையாட்டும், விளையாட்டு மைதானங்களும் காவல்துறை பொது மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி சிறந்த பங்கு வகிக்கும் என்று எண்ணுகிறேன். நாங்கள் தற்போது காவல்துறையின் செயல்பாடுகளில் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறோம். இளைஞர்களின் சில பிரிவினர் குறிப்பாக நகர்ப் பகுதியில் உள்ளவர்கள் போதைகளுக்கு அடிமையாகி பல தீய பழக்க வழக்கங்களை எளிதாக பெறுகின்றனர். இதனால் நகர்ப் பகுதிகளில் குற்றங்கள் அதிகரிக்கின்றன. குறிப்பாக பாலியல், பெண்கள் மீதான வன்முறை அதிகரிக்கிறது. இந்த இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை நமது காவல்துறை வெளிக்கொணர வேண்டும். இதற்காக விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட வேண்டும். இளைஞர்களைக் குழுக்களாக அமைத்து அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். இதனால் மனம் உடைந்து நாம் எதற்கும் உபயோகமற்றவர்கள் என்று நினைத்துக் கொண்டு தங்களுக்குக் கிடைக்கும் உபரி நேரத்தில் சாகசம் செய்வதாக நினைத்துக் கொண்டு குற்ற செயல்களில் ஈடுபடுவது தடுக்கப்படும். கிராமப்புறங்களில் தவறாக வழிகாட்டப்பட்ட தீவிரவாதத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களையும் விளையாட்டு மூலம் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். இவர்களை மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்த முடியும். எனவே காவல்துறை சமுதாய காவல் பணிகளுக்கு புதிய அணுகுமுறையில் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த சில நாட்களாக நடந்து வந்த 51ஆவது அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட ஆண்களும்– பெண்களும் சில புதிய சாதனைகளை ஏற்படுத்தி இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களையும், பரிசுகளையும் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திய ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். இதில் பங்கேற்ற உங்களில் சிலர் எந்த பதக்கத்தையோ, பரிசுகளையோ பெற்றிருக்கமாட்டீர்கள்.

ஒலிம்பிக் வீரரும், அமெரிக்கருமான ஜேசிஸ் ஓவன் கூறியதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கடைசி மணித்துளிகளில் கூடுதலாக சக்தியை செலவழிக்காவிட்டால் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விடுவோம். ஆனால் வெற்றி பெறுவதற்கு இந்தக் கடைசி நிமிட முயற்சிகள் மட்டுமே போதாது. வெற்றியை ஈட்டுவதற்கு தொடக்கத்திலிருந்தே முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு ஒழுக்கம், முயற்சி, உழைப்பு, சுயதியானம் ஆகியவை வேண்டும். இத்துடன் உங்கள் சகமனிதர்களின் மேல் அன்பும், பணிவும் மரியாதையும் வேண்டும். இவைகள் எல்லாம் இருந்தும் வெற்றி பெறமுடியாவிட்டால் அது உங்களின் இழப்பல்ல.

இன்று இந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் தோல்வியடைந்த அனைத்து வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் இந்த பொன்மொழியை நினைவுப்படுத்த விரும்புகிறேன். இதை நினைவில் வைத்துக்கொண்டால் உங்களுக்கு விளையாட்டிலும் பணியிலும் வாழ்க்கையிலும் தோல்வி என்பதே கிடையாது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திருமதி லட்சுமி பிரானேஷ், உள்துறைச் செயலாளர் திரு. சையத் முனீர் ஹோடா மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

முடிவில் காவல் துறைத் தலைவர் திரு. ராஜகோபாலன் நன்றி கூறினார்.

**– 5.3.2003 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 51ஆவது அகில இந்தியக் காவல்துறைத் தடகள விளையாட்டுப் போட்டி 2002 நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**

விழி மாநகரம் என்னும் பெயர் பெற்ற இந்த விழுப்புரம் நகரில் என் அன்புக்குரிய மக்களாகிய உங்களை எல்லாம் சந்தித்து, இன்று என் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிறைவேற்றப்பட்ட பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற நல்லதொரு வாய்ப்பு இன்று இந்த விழாவிலே எனக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டமும் தனக்கே உரிய சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. விழுப்புரம்

**மக்கள் வாழ்வில் வளர்ச்சியை உருவாக்கவே உங்கள் அரசு பாடுபட்டு வருகிறது**

*விழுப்புரம் மாவட்டத்தில் 27.2.2003 அன்று*
*வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா*
*மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி* ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் ஆற்றிய உரை.*

மாவட்டம் இயற்கைச் சிறப்பால் மட்டுமல்லாமல் சான்றோர்களின் பிறப்பாலும் பெருமை படைத்த மாவட்டமாக விளங்குகின்றது. மலை வளமும், மருத நில வளமும், கலை வளமும், ஒருங்கே நிறைந்து விளங்கும் இந்தப் பகுதி முற்காலத்தில் நடுநாடு என்று அழைக்கப்படுகின்ற சிறப்பினைப் பெற்று விளங்கியது. சோழ நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும், இடையே அமைந்த காரணத்தால் நடுநாடு என்று அழைக்கப்பட்டதாக வரலாற்றிலே காண்கிறோம்.

மேற்கு அரணாக, பசுமை கொஞ்சும் கல்வராயன் மலை அமைந்து தென் பெண்ணை, கெடிலம் ஆகிய நதிகளால், வளம் பெற்று விளங்கும் இந்த மாவட்டத்தில் தான் சைவத்தோடு தமிழையும் தழைக்கச் செய்த, சுந்தரமூர்த்தி நாயனார் தோன்றினார் என்பதையும், இதே விழுப்புரம் நகரத்தில் தான் காஞ்சிப் பெரியவர், பரமாச்சாரியார் ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தோன்றினார் என்பதையும் நினைத்துப் பார்க்கும் போது எத்தனை ஆன்மீகச் சிறப்புள்ள மண்ணிலே இன்று நாம்





ஆட்சியில் எந்தவித சாதிக் கலவரமோ மதக் கலவரமோ தமிழ் நாட்டில் நடைபெறவில்லை என்பதை இன்று உங்கள் முன் கூறிக் கொள்வதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

தொடர்ந்த வளர்ச்சி நீடித்த வளர்ச்சி இருக்க வேண்டும் என்றால், அங்கே பழமைச் சிறப்பும் இருக்க வேண்டும். புதுமைப் பொலிவும் இருக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டம் எவ்வளவு பழமை வாய்ந்தது என்பதற்கு பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட மரங்கள் கல்லாக மாறி இருக்கின்ற திருவக்கரையே சாட்சி. அது மட்டுமல்லாமல் 3,500 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுத் தடயங்கள் கிடைத்துள்ளதால் விழுப்புரம் மாவட்டம் தொன்மையான வரலாற்றைக் கொண்டது என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

கூடியிருக்கிறோம் என்னும் புனித உணர்வு நமக்குள் எழுகிறது.

கவிச் சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் பிறந்து வாழ்ந்த திருவெண்ணை நல்லூர்; சங்கப் புலவர் கபிலர், நட்புக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த திருக்கோவிலூர்; நினைத்தவுடன் கவி பாடும் ஆசு கவியாகிய காளமேகப் புலவர் பிறந்த எண்ணாயிரம் ஆகிய ஊர்களைத் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குவது விழுப்புரம் மாவட்டம் என்னும் செய்தி, இந்த மண் நெற்பயிரை மட்டும் அல்ல ஆன்மீகப் பயிரையும், கவிதைப் பயிரையும் வளர்க்கின்ற மண் என்னும் பெருமித உணர்வையும் நமக்குத் தருகிறது.

எல்லா மதத்தினரும் நட்போடு இணைந்து வாழலாம் என்னும் உணர்வை இந்த மண் வளர்த்து வருகிறது என்பதற்கு அன்றைய எடுத்துக்காட்டு செஞ்சியை ஆண்ட தேசிங்கு ராஜன். சாதுல்லா கான், முகம்மது கான் ஆகியோரை நண்பர்களாக ஏற்று மதம் கடந்த நட்புக்கு மாபெரும் உதாரணமாக அன்றைக்கு தேசிங்கு ராஜன் விளங்கினான் என்பதை வரலாறு சொல்லுகிறது.

உலக நாடுகளில் ஆன்மீகவாதிகள் ஒன்று கூடி, ஒருமித்து ஒரே இடத்தில் வாழலாம் என்பதற்கு, இந்த விழுப்புரம் மாவட்டத்தின் வானூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள ஆரோவில் நகரம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இது அண்மைக் காலத்துச் சாதனை.

இன்று, எனது தலைமையில் அமைந்த அரசு சாதி மத பேதமற்ற ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டு வருகிறது என்பதையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எந்தவித வேறுபாடும் கருதாமல் சகல ஜாதிகளைச் சேர்ந்தவர்களையும் அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களையும் ஒன்றாகவே கருதுகிறேன் என்பதையும், நீங்கள் அறிவீர்கள். கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலத்தில் உங்கள் அன்புச் சகோதரியின்

ஓரிடத்தின் வளர்ச்சி உயிர்த் துடிப்போடு இருக்க வேண்டுமென்றால் பழமைச் சிறப்போடு இன்றைய சாதனைச் சிறப்பும் அங்கே இடம் பெற வேண்டும்.

1993ஆம் ஆண்டு என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டு விழுப்புரம் மாவட்டம் உதயமானது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே அதிக கிராம ஊராட்சிகளைக் கொண்ட, அதாவது, 1104 ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டமாக விளங்குவது விழுப்புரம் மாவட்டம் தான். மேலும், மாநிலத்திலேயே அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கிய மாவட்டமும் விழுப்புரம் மாவட்டம் தான். இவை எல்லாம் விழுப்புரம் மாவட்டம் பெற்று வரும் புதிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

''பானை பிடித்தவள் பாக்கியசாலி'', என்னும் பத்தாம் பசலித்தனமான கருத்துக்களை மாற்றி ஆணையிடும் அனுபவசாலி தான் பெண் என்னும் உண்மையை இந்த உலகம் உணர வேண்டும் என்பதே உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னுடைய விருப்பமாகும். அதனால்தான் கடந்த 1992ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது, மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்தை நான் அறிமுகப்படுத்தினேன். அன்று நான் இட்ட விதை இன்று பரந்து விரிந்து ஆலமரமாய், பல இலட்சக்கணக்கான பெண்களுக்கு நிழல் தரும் பெருமரமாய், பலன் தரும் பழ மரமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. அன்று நான் ஊன்றியது, சிறு விதை தான். ஆனால், இன்று தமிழ்நாட்டில் மொத்தம் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 583 மகளிர் சுய

உதவிக் குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்களில் மொத்தம் 19 இலட்சத்து 77 ஆயிரத்து 274 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது, 255.49 கோடி ரூபாய் சேமிப்புடன் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி பெரிய ஆல விருட்சமாக இந்த இயக்கம் வளர்ந்து உள்ளது. இந்தச் சாதனை சரித்திரத்தில், விழுப்புரம் மாவட்டம் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெற்றிருப்பதை நான் பாராட்டுகிறேன். விழுப்புரம் மாவட்டத்தில் 6,390 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கியுள்ளதன் மூலம் தமிழ்நாட்டிலேயே அதிக சுய உதவிக் குழுக்களை உருவாக்கியுள்ள மாவட்டம் என்ற பெருமையை விழுப்புரம் மாவட்டம் பெற்றுள்ளது என்பதை அறிந்து எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமின்றி 2531 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 6 கோடியே 32 இலட்சம் ரூபாய் சுழல் நிதி வழங்கியுள்ளதன் மூலம் சுழல் நிதி வழங்குவதிலும் விழுப்புரம் மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 6,390 குழுக்களும் வங்கிகளில் சேமித்து வைத்துள்ள மொத்த சேமிப்புத் தொகை 27 கோடி ரூபாயாகும். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு, இன்னலுறும் அரவாணிகளுக்கும் சுய உதவிக் குழுக்கள் இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.



மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 14 நியாய விலைக் கடைகள் மற்றும் உரக் கடைகளை சிறப்பாக நடத்துகின்றனர். மகளிர் சுய உதவிக் குழுவின் பணி இத்துடன் நின்று விடாமல் கள்ளச் சாராயம் ஒழிப்பு, அநாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்துப் படிக்க வைத்தல், கண் தானம் செய்தல், போன்ற சமூக அக்கறையுள்ள பணிகளிலும் ஈடுபட்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது. பெண்களுக்கு சிறப்பான கல்வியைத் தருவதுடன் அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு, தொழிற் பயிற்சி அளித்திடும் வகையில் இந்த அரசு கொண்டு வந்துள்ள ''ஐந்து இலட்சம் மகளிர்க்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டம்'' என்ற திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 7,316 பெண்கள் இந்த மாவட்டத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தின் இந்த சாதனைகளை, நான் மிகவும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வானூர் ஒன்றியம் ஆரோவில்லில் உயர் தர தோல் பொருட்கள், விளக்கு அலங்காரப் பொருட்கள் உட்பட பல வகையான கைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 31 சுய உதவிக் குழுக்களை இணைத்து 'Varsha' என்ற கூட்டமைப்பையும்; கள்ளக்குறிச்சி ஒன்றியம், தென்கீரனூர் ஊராட்சியில், மரச் சிற்பக் கலை தொழிலில் ஈடுபட்டுள்ள 12 சுய உதவிக் குழுக்களை இணைத்து 'Vruksha' என்ற கூட்டமைப்பையும் இம்மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இந்த இரண்டு கூட்டமைப்புகளும் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு தொழில் தொடங்கவும் இயந்திரங்கள் வாங்கவும் 52.75 இலட்சம் ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளதற்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இயக்கம் இத்தோடு நின்று விடக் கூடாது. தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகப் பெருமளவில் சேர வேண்டும் – சேர்ந்து பொருளாதார முன்னேற்றம் சமுதாய முன்னேற்றத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று, உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சேமிப்பினைக் கூட்டி, சிறு தொழிலில் ஈடுபட்டு, பொருளை ஈட்ட வேண்டும். அதன் மூலம் உங்களது வீட்டையும், தமிழகத்தையும், வளப்படுத்த உழைக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் அனைத்து மகளிரையும் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்களில் இதுவரை சேராமல் உள்ள அனைத்து பெண்களும் மென்மேலும் சேர்ந்து பொருளாதார ரீதியில் பயன்பெற முன் வர வேண்டும் என்பதே எனது பேரவா. பெண்கள் சுய உதவிக் குழுக்களில் சேர்ந்தால் நீங்கள் யாரையும் தேடிச் சென்று போக வேண்டிய அவசியமே இல்லை. எல்லோரும் உங்களைத் தேடி வருவார்கள். ஆரம்பத்தில் இந்த சுய உதவிக் குழுக்களை நான் ஏற்படுத்திய போது அந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக

இருந்த பெண்களுக்கு கடன் வழங்க வங்கிகள் எல்லாம் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால் இன்றைக்கு நிலைமையே தலைகீழாக மாறியிருக்கிறது. இன்றைக்கு இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் சேமிப்பாக இருப்பதைப் பார்த்து இந்த வங்கிகளே அவர்களைத் தேடிச் சென்று உங்களிடம் இருக்கின்ற சேமிப்பு நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள் என்று இந்த மகளிரைத் தேடி போகிறார்கள். ஆகவே தமிழகத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து சொந்த கால்களில் நின்றால் இந்த உலகமே உங்கள் காலடிகளில் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் விழுப்புரம் மாவட்ட அரசு விழாவிலே இன்றைய தினம் 236 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டங்களை நான் இந்த மாவட்டத்து மக்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறேன். வளர்ச்சிப் பணிகளும் நலத்திட்ட உதவிகளும் மக்களை விரைந்து சென்றடைய வேண்டும் என்பதில் எங்கள் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டப் பணிகளை விரைவு படுத்துவதிலும் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து அவற்றை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதிலும் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கற்களை நாட்டுவதிலும் இதுபோன்ற மாவட்ட அரசு விழாக்களில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும் எனக்கு மிகுந்த மன நிறைவு ஏற்படுகின்றது.

முதலமைச்சர் ஒரு மாவட்டத்திற்கு வருகிறார் என்று சொன்னால் அந்த மாவட்டத்தில் உள்ள பணிகள் எந்த அளவுக்கு விரைவாக செய்து முடிக்கப்பட்டு மக்களுக்கு கொண்டு செல்லப்படும் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். இத்தகைய அரசு விழாக்களின் வாயிலாக மக்களுக்கு திட்டப் பணிகள் உடனடியான பலனை அளிப்பதற்கு எனது வருகை பயன்பட்டு இருக்கின்றது என்பதை எண்ணும் போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்

இன்றைய தினம் இந்த விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு இருக்கும் மொத்தம் 168 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய முடிவுற்ற பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

அவற்றில் ஒரு சில முக்கியப் பணிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக இன்றைய தினம் மொத்தம் 33கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 10 பாலங்களையும் நான் திறந்து வைத்து இருக்கிறேன். இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இந்த 10 பாலங்களில் குறிப்பாக ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்புடைய வானூர் – கண்டமங்கலம் சாலையில் உள்ள பாலம்; உளுந்தூர்பேட்டை – திருவெண்ணைநல்லூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள 12 கோடி ரூபாய் மதிப்புடைய உயர் மட்ட பாலம்; 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை – கும்பகோணம் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள உயர் மட்ட பாலம் ஆகியவை இந்த மாவட்டத்தின் நெடுஞ்சாலை வசதிகளை மேலும் மேம்படுத்தும் என்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அதே போன்று, 9 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள மேம்படுத்தப்பட்ட 23 சாலைகளையும், இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். இவை மட்டுமின்றி, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ''கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ், 9 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 51 தார்ச் சாலைகள் மற்றும் இதே துறையின் மூலம் ''நபார்டு'' திட்டத்தின் கீழ் 6 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டுள்ள 34 தார்ச்சாலைகள் ஆகியவற்றையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பருவ மழை பொய்த்ததன் வாயிலாகத் தற்போது மாநிலம் எங்கும் கடும் வறட்சியும், குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. கிராமப்புறங்களிலும் சரி, நகர்ப் புறங்களிலும் சரி இத்தகைய குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க எங்கள் அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம், விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 58 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள 777 பணிகளை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். கள்ளக்குறிச்சி, தியாகதுர்கம் மற்றும் சின்னசேலம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் உள்ள 92 கிராமங்களுக்கு பயன் தருகின்ற 45 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்புடைய ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – தகடி மற்றும் 14 கிராமங்களுக்கு முடியனூர் மற்றும் 8 கிராமங்களுக்கு பயன் தருகின்ற முடியனூர் கூட்டுக் குடிநீர் திட்டம் – திருக்கோயிலூர், சங்கராபுரம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கு பயன் அளிக்கின்ற குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் – மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் 72 இடங்களில் 4 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் – 3 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள 500 சிறு விசை இறைப்பான்கள் (Mini Power Pumps) – 200 பள்ளிக் கூடங்களில் நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றை திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக இந்த மாவட்டம் முழுவதிலும் பல்வேறு இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 250 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார மையங்கள் – 700 களங்கள் – 1400 தொகுப்பு வீடுகள் – மகளிர் சுய உதவி குழுக்களுக்கான கட்டடங்கள் – 50 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள் ஆகியவை உள்ளிட்ட


மொத்தம் 32 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு கட்டுமானப் பணிகளை இன்றைய தினம் உங்களுக்கு அர்ப்பணித்துக் கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் கூட்டுறவுத் துறை, பொதுப் பணித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கல்வித் துறை, வேளாண்மைத் துறை போன்ற பல்வேறு துறைகளின் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான பணிகளையும் இந்த விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன். இவை அனைத்தையும் விரிவாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினாலே திறந்து வைக்கப்பட்டுள்ள ஒரு சில திட்டப் பணிகளை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் அரசு எந்த அளவுக்கு விவசாயம் சார்ந்த திட்டப் பணிகளுக்கு சிறப்பு கவனத்தை அளித்து வருகின்றது என்பது உங்கள் அனைவருக்குமே நன்கு தெரியும். ஏனென்றால், கிராமப் பகுதிகளில் பொருளாதாரம் செழிக்க வேண்டும் என்றால் அங்கே விவசாயம் செழிக்க வேண்டும்; அதற்கு கூடுதல் பாசன வசதி தேவை. அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த விழாவில் பல முக்கியமான பணிகள் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறை சார்பாக கீழ்பெண்ணையாற்றில் 7 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கூடுதல் நீர் வழிந்தோடி (Surplus Weir) – 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கோமுகி அணையிலிருந்து சின்னசேலம் ஏரிக்கு செல்கின்ற வரத்து கால்வாய்கள் – 85 இலட்சம் ரூபாய் செலவில் மணிமுத்தாறு அணைக்கட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்பு பணிகள் ஆகியவை இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி ஏறத்தாழ 2817 ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெறுகின்ற வகையில் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் வசிஷ்ட நதி குறுக்கே கட்டப்பட்டுள்ள பாசன அணைக்கட்டு – மற்றும் 2 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில், கோமுகி அணையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வெள்ளத் தடுப்பு அமைப்பு (Flood Regulator) ஆகியவற்றை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆக, இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 168 கோடி ரூபாய் மதிப்புடைய, இந்த கட்டுமானப் பணிகள் அனைத்தும் இந்த மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் துணை நிற்கும் என்று கூறிக்கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

## அடிக்கற்கள் நாட்டுதல்

புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டுதல் என்ற வகையில் இன்றைய தினம் என்னால் மொத்தம் 38 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள பல்வேறு திட்டப் பணிகளுக்காக அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் இறையூர் மற்றும் பிரம்மதேசம் ஆகிய இடங்களில் 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள துணை மின் நிலையம் – விழுப்புரம், கள்ளக்குறிச்சி அருகே நெடுஞ்சாலைத் துறையினால் 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள பல்வேறு சாலைகள் – 8 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரத்தில் அமைக்கப்பட உள்ள வட்டார தடய அறிவியல் கட்டடம் – 17 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் நகரில் அமைக்கப்பட உள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் உள்ளிட்ட மொத்தம் 13 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு கட்டடங்கள் ஆகியவற்றிற்கான அடிக்கற்களை நான் இந்த விழாவிலே நாட்டி உள்ளேன். தாட்கோ நிறுவனத்தின் மூலம் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம், புளிச்சப்பள்ளம், சித்தாலம்பட்டு, தும்பூர், கொசக்களத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் மேல் உலக்கூர் ஆகிய ஏழு இடங்களில் அமைய உள்ள ஆதிதிராவிடர் இன மாணவர்களுக்கான தங்கும் விடுதிகள் – தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலம் அமைக்கப்பட உள்ள 3 கோடி ரூபாய் மதிப்புடைய விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டிடம் – 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள தீயணைப்பு கட்டிடம் ஆகியவற்றிற்கான அடிக்கற்களை இந்த இனிய விழாவிலே நான் நாட்டி உள்ளேன். இவை மட்டுமன்றி 90 இலட்சம் ரூபாய் செலவில் நடுக்குப்பம் கிராமத்தில் தடுப்பு சுவர் கட்டும் பணிகள் –



ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள 275 மீனவர் குடியிருப்பு கட்டடங்கள் – 84 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட உள்ள 210 குடியிருப்பு கட்டடங்களுக்கு இந்த விழாவிலே அடிக்கற்களை நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### புதிய திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தல்

இன்றைய தினம், இந்த விழா மேடையிலே 10 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகளைத் துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, சின்னசேலம், உளுந்தூர்பேட்டை மற்றும் செஞ்சி பேரூராட்சிகளுக்குப் பயன் அளிக்கும் 2 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்புடைய அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் – விழுப்புரம் மாவட்டம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கான 4 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் – மற்றும் ஆவின் நிறுவனத்தின் மூலம் 89 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடத்தப்பட உள்ள மகளிருக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை இந்தச் சீர்மிகு விழாவில் துவக்கி வைத்துள்ளேன் என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியோடு கூடியிருக்கின்ற இந்த விழுப்புரம் மாவட்ட அரசு விழாவில் மொத்தம் 24,258 பேர் பயன் பெறுகின்ற வகையில் ஏறத்தாழ 19 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என சமுதாயத்தின் அடித்தளத்துப் பிரிவினர் அனைவரும் தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை அளிப்பதில் எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் உள்ளது என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் இந்த விழாவிலே 19 அரசு துறைகள் 24,258 பயனாளிகளுக்கு மொத்தம் 19 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கவிருக்கின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினாலே வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக 12,551 பயனாளிகளுக்கு 9 கோடியே 42 இலட்சம் ரூபாய் அளவிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக 403 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு குழு ஒன்றிற்கு 25,000 ரூபாய் என்ற அளவில் சுழல் நிதி திட்டம் – 127 குழுக்களுக்கு 2 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடன் உதவி வழங்கும் திட்டம் – சமூக நலத் துறையின் சார்பாக 308 பெண்களுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், கலப்பு திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள் – மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மூலம் 3300 பெண்களைக் கொண்ட 155 குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி ஆகியவை இன்றைய தினம் வழங்கப்பட உள்ளன. இவை மட்டுமன்றி வருவாய்த் துறையின் சார்பாக 3,162 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும் – 390 பேர்களுக்கு நிலப் பட்டாக்களும் – 316 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகையும் வழங்கப்பட உள்ளன. தாட்கோ நிறுவனத்தின் மூலமாக 422 பேர்களுக்கும் – வேளாண்மைத் துறையின் மூலமாக 181 பேர்களுக்கும் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வாயிலாக 315 பேர்களுக்கும் – கூட்டுறவுத் துறை வாயிலாக 621 பேர்களுக்கும் – பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் எல்லா பயனாளிகளுக்கும் நானே வழங்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால் இந்த மேடையிலே 15 பேர்களுக்கு மட்டும் எனது கரங்களாலே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் விரைந்த வளர்ச்சியைப் பெற்று இந்திய நாட்டிலேயே முதன்மையான மாநிலம் என்ற சிறப்பை அடைய வேண்டும் என்பது தான் எனது இலட்சியம் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். இந்த இலக்கினை எட்ட வேண்டுமென்றால் நமது தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூக பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும். இவ்வாறு, தமிழக மக்களின் வாழ்வில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் உருவாக்கவே உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறது.

இதைக் கூறுகின்ற நேரத்தில் மகாபாரதத்தில் நடந்த ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

உலக அரசியல் வரலாற்றில் எந்தக் காலத்திலும் நல்லவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே இருக்கிறார்கள்; ஆனால், கெட்டவர்களோ எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். இதைத் தான் நாம் புராணங்களிலும், இதிகாசங்களிலும்

பார்க்கிறோம், படிக்கிறோம். மகாபாரதக் காலத்தில் பாண்டவர்கள் ஐந்து பேர் தான் இருந்தார்கள். ஆனால் கவுரவர்களோ 100 பேர் இருந்தார்கள். இந்தக் காலத்திலும் அப்படித் தான். உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னை, அரசியலில் எதிர்க்க எத்தனை பேர்! தங்களுக்குள் எலியும், பூனையுமாக இருப்பவர்கள்கூட கீரியும், பாம்புமாக இருப்பவர்கள் கூட என் விஷயத்தில் ஒரே அணியில் நின்று எதிர்ப்பதை, தொடர்ந்து எதிர்த்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

எனக்கும் அவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம்? எனக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மகாபாரதத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியை விளக்கிச் சொன்னால் வித்தியாசம் புரியும் என்று நினைக்கிறேன்.

ஒரு முறை பாண்டவர்களுக்கும், கவுரவர்களுக்கும் ஆசிரியராக இருந்த துரோணாச்சாரியார், தன்னுடைய மாணவர்களுக்கு ஒரு சோதனை வைத்தார். பாண்டவர்கள் சார்பில் தருமனையும், கவுரவர்கள் சார்பில் துரியோதனனையும் அழைத்தார் துரோணாச்சாரியார். – உங்கள் இருவருக்கும் ஒரு சோதனை வைக்கிறேன். அதோ ஒரு வீடு இருக்கிறது. வீட்டில் பொருள் ஒன்றும் இல்லை. காலியாக இருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அந்த வீட்டை நிரப்ப வேண்டும். அவ்வாறு வீட்டை நிரப்ப என்ன செய்யப் போகிறீர்கள் என்பது தான், நான் வைக்கும் சோதனை. இந்தச் சோதனை உங்கள் அறிவை எடைபோட எல்லோருக்கும் ஒரு சந்தர்ப்பமாக அமையும்'' என்று துரோணாச்சாரியார், தருமனிடமும், துரியோதனனிடமும் சொன்னார்.

முதல் வாய்ப்பு துரியோதனனுக்கு வழங்கப்பட்டது. துரியோதனன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். எங்கெங்கோ சென்று, முயற்சி செய்து, கொண்டு வந்த பொருளால் அந்த வீட்டை நிரப்பினான். அதைப் பார்த்தவர்கள் பரிகாசம் செய்தார்கள். அந்தப் பொருள் என்ன தெரியுமா? வைக்கோல், வீடு முழுவதையும், கொஞ்சம் கூட காலியிடம் இல்லாமல் வைக்கோலாலேயே துரியோதனன் வீட்டை நிரப்பிவிட்டான்.

அடுத்தது தருமனின் முறை. அந்த வீட்டில் துரியோதனனால் அடைக்கப்பட்டிருந்த வைக்கோல் முற்றிலும் நீக்கப்பட்டது. தருமன் உடனே அந்த வீட்டிற்குள் சென்று அங்கே ஒரு விளக்கை ஏற்றி வைத்தான். இப்போது வீடு வெளிச்சத்தால் நிரப்பப்பட்டு இருந்தது.

துரியோதனனும் வீட்டை நிரப்பினான். தருமனும் வீட்டை நிரப்பினான். அந்த வகையில் இரண்டும் ஒன்று தான். ஆனால், எதைக் கொண்டு நிரப்பினார்கள்; என்ன பலன் கிடைத்தது என்பது தான் கேள்வி.

வீடு நிறைந்தபொருள் என்பதற்கு வைக்கோல் என்று அர்த்தப்படுத்திக் கொண்டு வீட்டை வைக்கோலால் நிரப்பினான் துரியோதனன். வீடு நிறைந்த பொருள் என்பதற்கு வெளிச்சம் என்று பொருள் கொண்டு தீப ஒளியால் வீட்டை நிரப்பினான் தருமன்.

இது தான் துரியோதனனுக்கும், தருமனுக்கும் இடையே இருந்த வேறுபாடு!

இது தான் கவுரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையே இருந்த வேறுபாடு!

இதுதான் எதிர்க் கட்சியினருக்கும், எனக்கும் இடையே இருக்கும் வேறுபாடு!


தமிழ்நாடு தான் அந்த வீடு! அதில் விளக்கை ஏற்றி வைத்தது உங்கள் அன்புச் சகோதரி! வீட்டில் வைக்கோலை அடைத்த புத்திசாலிகள் யார் என்று நான் உங்களுக்கு விளக்கத் தேவையில்லை. அது உங்களுக்கே தெரியும்.

அப்படிப்பட்ட "புத்திசாலிகளோடு'' அனுதினமும் போராடித்தான் உங்கள் இல்லங்கள் முழுவதும் நலமும் வளமும் செழித்தோங்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வருகின்றேன்.

அரசு வழங்குகின்ற உதவிகளை பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் அனைவரும், இவற்றை ஆதாரமாகக் கொண்டு கடின உழைப்பை பயன்படுத்தி மென்மேலும் உயர்ந்து தங்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்று அன்போடு வாழ்த்துகிறேன்.

வெற்றி எப்போதும் உங்கள் பக்கமே! என்று கூறி இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

★ ★ ★



# பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளில் அன்னதானத் திட்டம்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.2003 அன்று சென்னை அண்ணாசாலையில் உள்ள ஹஜரத் சையத் மூஸா ஷா காதிரி தர்கா வளாகத்தில் தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளுக்கு தொழுகை நடத்த வருகின்ற இறையன்பர்களுக்கு வாராந்திர மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் சிறப்புமிகு அன்னதானத் திட்டத்தை, சென்னை மைலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் 23.3.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பின்னர் இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள 144 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்காகளிலும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு வக்பு வாரியம் 16.12.2002 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது. இதனைத் தொடர்ந்து, சென்னை அண்ணா சாலையில் உள்ள ஹஜரத் சையத் மூஸா ஷா காதிரி தர்கா வளாகத்தில் இந்த அன்னதானத் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.2003 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த தர்காவில் தொழுகைக்கு வருகை தந்த இறையன்பர்களுக்கு கேசரி, காலிபிளவர் பகோடா, வடை, வெஜிடபிள் பிரியாணி, சாம்பார் சாதம், தயிர் சாதம் ஆகியவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் பரிமாறப்பட்டன. மேலும், தர்காவிற்கு வருகை தந்த இறையன்பர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உணவுப் பொட்டலங்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் தமிழகத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஒரு பள்ளிவாசல் மற்றும் தர்காவில் தொழுகை நடத்த வருகை தரும் சுமார் 200 இறையன்பர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும். பள்ளிவாசல் மற்றும் தர்காகளில் இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி, சமுதாய ஆர்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஆகியோரிடமிருந்து தமிழ்நாடு வக்பு வாரியத்தின் மூலம் பெறப்பட்டு செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிரானேஷ், உள்துறைச் செயலாளர் திரு. சையது முனிர் ஹோடா மற்றும் முஸ்லீம் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அன்வர் ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சையது கான், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் திருமதி. பதர் சையீது, அண்ணா சாலையில் உள்ள ஹஜரத் சையத் மூஸா ஷா காதிரி தர்காவின் ட்ரஸ்டி திரு. சையத் மொய்னுதீன் ஆகியோர் உடனிருந்தனர். •

# பெண்களை வலிமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை!

## – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

இந்தப் பந்தல் மிக பிரமாண்டமான அளவில் அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பந்தலுக்குள்ளே மிகப் பெரிய கூட்டம் கூடியிருக்கிறது. ஆனால் இன்னும் வெள்ளமான மக்கள் இந்த பந்தலில் இடம் கிடைக்காததால், வெளியே கொளுத்தும் வெயிலில் நிற்கிறார்கள். இப்படி சுட்டு எரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது என்னை காண வேண்டும், எனது உரையைக் கேட்க வேண்டும், என்று வெளியே வெயிலில் நிற்கும் அன்பு நெஞ்சங்களுக்கு எனது அன்பான வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன்.




வரலாற்றுச் சிறப்பு மிக்க, திருச்சி மாநகரில் நடைபெறும், இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு, என் அன்பிற்குரிய திருச்சி மாவட்டப் பெருமக்களாகிய, உங்களை எல்லாம் கண்டு, 209 கோடி ரூபாய் மதிப்பில், முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கிட்டத்தட்ட 15,910 பேர்களுக்கு, நலத் திட்ட உதவிகளை வழங்கி, உங்களோடு எனது கருத்துக்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு, இன்று கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு குறித்து, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்திருக்கும், திருச்சி மாவட்டம், கிழக்கில் தஞ்சாவூரும், மேற்கில் கரூரும், வடக்கில் பெரம்பலூரும், தெற்கில் புதுக்கோட்டையும், எல்லைகளாக அமைந்திருக்க, தனக்கென்று தனி ஒரு வரலாற்றைக் கொண்டு விளங்குகின்றது.

சங்க காலச், சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய உறையூர், இன்றைக்கு திருச்சி மாநகரின், ஒரு பகுதியாக விளங்குகிறது.

சங்க காலத்தில், உறையூருக்கு, கோழியூர் என்றும் பெயருண்டு. சங்க காலச் சோழ மன்னர்களாகிய, நெடுங்கிள்ளி, கரிகாலன், கோப்பெருஞ்சோழன் ஆகியோரின் தலைநகராக விளங்கிய சிறப்பு, உறையூருக்கு உண்டு.

முற்காலத்தில் ஆடை நெய்தல், ஆடைகளுக்குச் சாயம் பூசுதல், ஆகிய தொழில்கள், மிகச் சிறப்பாக, இங்கு நடைபெற்று இருக்க வேண்டும்.

ரோமாபுரியின் சாயத் தொட்டி, பானை வகைகள் போன்று, உறையூரில் கிடைத்த, அகழ்வாராய்ச்சிப் பொருள்கள் மூலம், இந்த உண்மையை அறிந்து கொள்கிறோம்.

உறையூர், சங்க காலத்தில் மட்டுமல்லாமல், இந்தக் காலத்திலும் கூட, கைத்தறி ஆடைகளுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது.

திருச்சிராப்பள்ளி என்னும் இந்தத் திருநகரம், மலைக்கோட்டை மாநகரம், என்று அழைக்கப்படுகின்றது.

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் சின்னமாகவே, விளங்கிக் கொண்டிருக்கிறது.

மலை மேல் உச்சி பிள்ளையார் கோவிலும், மலையைச் சுற்றி உள்ள கோட்டைச் சுவர்களும், கோட்டைச் சுவர்களுக்கு உள்ளே, அமையப் பெற்றுள்ள இருப்பிடமும், வணிக வளாகங்களும், தொன்று தொட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின், பழம்பெரும் சின்னங்களாக இருந்து வருகின்றன.

திருச்சி மாநகரின் நடுவில், அமைந்துள்ள இந்த மலைக்குத், திருசிராமலை என்றும் பெயர் உண்டு. இந்த மலையில், தாயுமானசுவாமி கோயில் உள்ளது. திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்

'சிறாப் பள்ளிக் குன்று உடையானைக் கூற
என் உள்ளம் குளிருமே?' என்று பாடுகிறார்.

இறைவன் உயிர்களுக்குத் தந்தையானவன் என்பது தெரியும்; அவன் 'தாயும்' ஆனவன் என்பது, சிவபெருமானின் அருட்செயல் ஒன்றால் அறிகிறோம்.

தாயும், பிரசவ நிலையில் இருந்த மகளும், காவிரியின் ஒரு கரையில் இருந்து, அக்கரைக்குச் செல்ல வேண்டும்.

தாய் காவிரி ஆற்றைக் கடந்து விடுகிறாள். மகள் ஆற்றைக் கடப்பதற்குள், ஆற்றில் வெள்ளம் வந்து விடுகிறது. அக்கரையில் தாயும், இக்கரையில் மகளுமாக, இருக்க வேண்டிய நிலை. அந்த நேரத்தில் மகள், பிரசவ வேதனையால், துடித்துக் கொண்டு இருக்கிறாள்.

அப்போது சிவபெருமான், அந்தப் பெண்ணின் தாய் வடிவத்தில் வந்து, அவளுக்கு பிரசவம் பார்த்து காப்பாற்றுகிறார். வெள்ளம் வடிந்த பிறகு, வந்தது பெற்ற தாய் இல்லை, இறைவனே என்று தெரிகிறது. அதிலிருந்து, தந்தையாய் இருக்கும் இறைவன், தாயும் ஆனான் என்று, ஆன்மீக வரலாறு சொல்கிறது.

கட்டடக் கலையிலும், சிற்பக் கலையிலும், சிறந்து விளங்குகின்ற கோயில், இந்தக் கோயில். சைவர்களுக்கு கோயில் என்றால், சிதம்பரம் தான். வைஷ்ணவர்களுக்கு கோயில் என்றால், அது ஸ்ரீரங்கம் தான் என்பார்கள்.

ஸ்ரீரங்கம், இந்தியாவிலுள்ள மிகப் பெரிய வைணவ ஆலயம், என்னும் சிறப்பிற்குரியது.

மேலும், சமயபுரத்தில், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவானைக் கோயில், அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், வயலூர் சுப்பிரமணியர் திருக்கோயில், போன்ற திருக்கோயில்களும், பழமை வாய்ந்த தப்லே ஆலம் பாதுஷா நத்தர்வலி தர்காவும், புனித லூர்து அன்னை தேவாலயமும், திருச்சிராப்பள்ளியின் சிறப்பு மிக்க திருத்தலங்களாக விளங்குகின்றன.

வேதாந்த, சித்தாந்த சமரச நிலையை, உலகிற்குப் போதித்த தாயுமானவர் சுவாமிகள், பிறந்து, வளர்ந்து, அமைச்சராக விளங்கியது திருச்சிராப்பள்ளியில் என்பதை அறிகிற போது, எத்தகைய ஞானத் திருத்தலம் திருச்சிராப்பள்ளி, என்பதனை உணர்ந்து கொள்கிறோம்.

திருக்குறளைப் பரப்புவதையே, லட்சியமாய் கொண்டு வாழ்ந்த முத்தமிழ்க் காவலர், கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும்; புரட்சி வீரராய், நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட, சிறந்த தமிழறிஞர் வ.வே.சு ஐயர் அவர்களும், இந்த மாவட்டத்திற்கு உரியவர்கள் என்பதை, இந்த இனிய நேரத்தில், பெருமையோடு நினைவு கூர்கிறேன். இன்னும் பல அறிஞர்கள், திருச்சியில் இருந்தார்கள்.

திருச்சியில் திருவாசகமணி கே.எம்.பாலசுப்ரமணியம், என்னும் அறிஞர் இருந்தார். அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும், சைவ சித்தாந்தத்திலும், சிறந்த புலமை பெற்றிருந்தார்.

ஒரு முறை, ஓர் ரயில் நிலையத்தில், வெளியூருக்குப் போவதற்காக, முதல் வகுப்பு பயணச்சீட்டு வாங்க வேண்டியிருந்தது. எனவே டிக்கெட் கொடுப்பவரிடம், "அப்பர் கிளாஸ்' டிக்கெட் தாருங்கள்'' என்று திருவாசகமணி கேட்டார். டிக்கெட் கொடுப்பவரோ "அப்பர் கிளாஸ் இல்லை" என்று சொன்னார். உடனே திருவாசகமணி அவர்கள் "அப்படியென்றால், 'சம்பந்தர் கிளாஸ்' டிக்கெட் கொடுங்கள்" என்றாராம்.

டிக்கெட் கொடுப்பவர் முறைத்தார். "என்ன? விளையாடுகிறீர்களா? அப்பர் டிக்கெட், சம்பந்தர் டிக்கெட், என்றெல்லாம் கேட்கிறீர்கள்" என்று கோபமாகக் கேட்டாராம், டிக்கெட் கொடுப்பவர்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! அப்பர் கிளாஸ் இல்லையென்றால் `Some under class' டிக்கெட் தான் கேட்டேன். அதாவது அதற்கு கீழ் இருக்கும், ஏதாவது வகுப்பு டிக்கெட் கொடுங்கள், என்று தான் கேட்டேன்'' என்று திருவாசகமணி அவர்கள் பதில் சொன்னாராம்.

அந்தக் காலத்தில், முதல் வகுப்புக்கு கீழே, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு பிரிவுகள், ரயில்வேயில் இருந்தன. ஆகவே தான் உயர் வகுப்பு டிக்கெட் இல்லையென்றால், ஏதாவது கீழ் வகுப்பு டிக்கெட் கொடுங்கள் என்னும் அர்த்தத்தில், "Upper Class இல்லையென்றால் Some under class கொடுங்கள்" என்று கேட்டிருக்கிறார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட பிறகு, பயணச் சீட்டு கொடுப்பவர், சிரித்துக் கொண்டே, மகிழ்ச்சியோடு இரண்டாம் வகுப்பு டிக்கெட் கொடுத்தாராம்.

இவ்வாறு ஆங்கிலத்தில் கூட, வார்த்தை விளையாட்டு நடத்துகின்ற அறிஞர் பெருமக்கள், வாழ்ந்த ஊர் திருச்சி, என்பதை நினைவு கூர்வதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதைச் சொல்லும் போது, பேரறிஞர் அண்ணாவின் உவமைகள் சில கூட, எனது நினைவுக்கு வருகின்றன.

**அன்பிற்குரிய மாவட்டம்**

பேரறிஞர் அண்ணா சொல்வார் – "தங்கப் பேழையில், தவிடு கொட்டி வைப்பது போல'' – "உடைவாளை உருவி, உருளைக் கிழங்கு சீவுவதைப் போல'' – "விண்ணில் பறந்த விண்வெளி வீரர், காற்றாடி விட வீதிக்கு வருவதைப் போல'' –என்று கருத்தைக் கவரும் உவமைகளால், பேரறிஞர் அண்ணா, தமது பேச்சிற்கு சிறப்பு சேர்த்தார், கேட்போரின் சிந்தையைக் குளிரச் செய்தார்.

இத்தனைச் சிறப்புகள் மட்டுமன்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு, சிறப்புத் திட்டங்களை அரங்கேற்றும் இடமாகவே, திருச்சிராப்பள்ளி விளங்கியதை, நான் மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சிறு வயதில் தன் குடும்பத்தில், தான் அனுபவித்த வறுமை நிலையை, நன்கு உணர்ந்திருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தமிழகத்திலுள்ள எந்தக் குழந்தையும், பசியால் வாடக் கூடாது, என்ற உயரிய எண்ணத்தில், 1982 ஆம் ஆண்டில், ஏழைக் குழந்தைகளை வாழ வைக்க, சத்துணவுத் திட்டத்தை திருச்சிராப்பள்ளி அருகே உள்ள, பாப்பாக்குறிச்சி காட்டூர் கிராமத்தில், துவக்கி வைத்தார். இத்திட்டம், இன்று உலக அளவில் பிரசித்தி பெற்று, பிற நாடுகளுக்கு முன்மாதிரித் திட்டமாக விளங்கி வருகிறது.

பாரதிதாசன் பல்கலைக்கழகம், புரட்சித் தலைவர் அவர்களால், 1982ஆம் ஆண்டு, திருச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு எங்கள் அன்பிற்கு உரிய மாவட்டமாக என்றென்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இதுவரை மொத்தம், 5182 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 84,993 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 35,442 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மகளிர், உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் மொத்த சேமிப்பு, 8 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழுவினர் மூலம், உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை, விற்பனை செய்ய, 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வணிக வளாகம் ஒன்றும், www.ruralmart.com என்னும் இணைய தளம் ஒன்றும், திருச்சியில் உருவாக்கப்பட்டு உள்ளதை நான் பாராட்டுகிறேன்.

**பெண்ணுரிமை நிலை நாட்டுவோம்!**

ஒரு முறை காசியில், ஒரு பெரிய கருத்தரங்கு நடந்தது. அது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை, நடத்தப்படும் கருத்தரங்கு! ஆன்மீக விஷயங்களைப் பற்றி, முடிவு செய்வதற்காகவும், வேதங்களைப் பற்றி எழுந்துள்ள, சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும், அது ஏற்பாடு செய்யப்பட்டது.

அற்புதமான ஞானியாகிய, கபீர், வாழ்ந்து கொண்டிருந்த காலம் அது. கபீர் இந்துவா, முஸ்லீமா என்று, யாருக்கும் தெரியாது. கபீர் ஒரு இந்துவா, என்பது தெரியாத நிலையில், அவர் அதற்கு அழைக்கப்படவில்லை. ஆனால் வேதங்களில் இருந்த, ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி, அவர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆகவே ஒருவர் சொன்னார், “கபீர் இந்துவா, முஸ்லீமா என்பது பற்றி, மறந்து விடுங்கள். அது பரவாயில்லை. இந்த வேத வாசகத்தின் அர்த்தம், மற்றும் இதில் உட்பொதிந்துள்ள கருத்து பற்றி உடனடியாக முடிவு எடுக்கக் கூடிய ஒரே நபர், அவர் தான். எனவே அவரை அழைப்போம்” என்றார்.

அதே சமயத்தில், ஆன்மீக அரசியாம் மீராபாயும் காசியில் இருந்தார். அவர் பெண் என்பதால், அவரை பண்டிதர்கள் அழைக்க விரும்பவில்லை. தயக்கத்துடன் பண்டிதர்கள் கபீரிடம் சென்று, “உங்களைக் கருத்தரங்குக்கு அழைக்கிறோம்; ஏனெனில், ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி, எங்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அதற்கான அனுபவம் யாருக்கும் இல்லை. கருத்தரங்கில், உள்ள பலரும், கபீருக்கு அந்த அனுபவம் உண்டு, என்று சொல்கிறார்கள். இந்தப் பகுதியில், தன்னைத் தானே அறிந்து கொண்டுள்ள ஒருவரால் தான், அதை விளக்க முடியும். எனவே நீங்கள் இந்துவா, முஸ்லீமா, என்பது பற்றி எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், உங்களை நாங்கள் அழைக்கின்றோம்” என்றனர். அதற்கு கபீர் “இதற்கு ஒரு நிபந்தனை உண்டு. மீராவும் அழைக்கப்பட்டால், நான் வருவேன்” என்றார். அவர்கள் சம்மதிக்கவில்லை. அப்போது கபீர், “அப்படி என்றால், கபீரும் வரமாட்டான். மீராவும் வருவதற்கு அனுமதிக்கப்பட்டால் தான், கபீரால் வர முடியும். நீங்கள் கபீரை அனுமதிக்கத் தயாராக இருக்கும் போது, அவனது சாதி நிச்சயமில்லை, மதம் நிச்சயமில்லை என்பதைப் பற்றிக் கவலைப் படவில்லை! மீராவைப் பற்றிய பிரச்சனை என்ன? அவள் பெண் என்பதற்காக மட்டுமே மறுக்கிறீர்கள். நான் பெற்றுள்ள அனுபவத்தை, அவளும் பெற்றிருக்கிறாள். அவளை அழையுங்கள்” என்றார். இதற்குப் பண்டிதர்கள் வேறு வழியின்றி ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. மீரா அந்தக் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டார்.

ஆன்மீக ஞானம், ஆண்களுக்கு மட்டும் தனிச் சொத்தல்ல. பெண்களுக்கும் அதில் உரிமை உண்டு. ஆனால் மீராவை அழைப்பதற்கே, ஒரு கபீரின் பரிந்துரை தேவைப்பட்டது என்றால், சாதாரணப் பெண்களைப் பற்றி, என்ன சொல்வது!

**தலைகீழாய் மாறிய நிலை**

பெண்களின் கல்விக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண்களின் கல்விக்கு, முன்னுரிமை வழங்கி வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு!

பெண்களை வலிமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை. அப்படி பெண்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக உயர வேண்டும், வாழ வேண்டும் என்றால் அதற்கு இரண்டு அடிப்படை தேவைகள் உண்டு. ஒன்று கல்வி, இரண்டாவது பொருளாதார ரீதியாக பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும். இதற்காகத் தான் இந்த சுய உதவிக் குழுக்களை அமைத்திருக்கிறோம். 1992ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராக இருந்த போது நான் தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்தேன். அப்போது



நான் இட்ட சிறிய விதை, இன்றைக்கு வளர்ந்து பெரிய ஆலமரமாகியிருக்கிறது. தமிழகத்தில் 1,19,000 சுய உதவிக் குழுக்கள் இன்றைக்கு அமைக்கப் பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏறக்குறைய 268 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு இந்த சுய உதவிக் குழுக்கள் எல்லாம் சேமிப்பு நிதியை வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் 1992இல் இந்த மகளிர் சுய உதவி குழுக்களை நான் தொடங்கிய போது, பெண்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்கவே தயங்கினார்கள். அப்போது இந்த சுய உதவிக் குழுக்களிலிருந்த மகளிருக்கு வங்கிகளிடம் கடன் பெற்றுத் தருவது குதிரைக் கொம்பாக இருந்தது. ஆனால், இன்றைக்கோ நிலைமை தலை கீழாக மாறியிருக்கிறது. இன்று இந்த சுய உதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு இந்த மகளிரிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்கு சேமிப்பாக இருப்பதைப் பார்த்து, வங்கிகளே இன்றைக்கு மகளிரை பின் தொடர்ந்து உங்களிடம் இருக்கின்ற நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள், தாருங்கள் என்று மகளிரைத் தேடி அவர்களுக்குப் பின்னால் போகிறார்கள். மகளிர், வங்கிகளைத் தேடிப் போனது அந்தக் காலம். இன்றைக்கு வங்கிகளே மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம். ஆகவே, இன்றைக்கு ஏறக்குறைய 20 இலட்சம் பெண்கள் இந்த சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக சேர்ந்திருக்கிறார்கள் என்றால் இது போதாது, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை பெண்களும் சுய உதவிக் குழுக்களில் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களை மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சொந்தக் காலில் நிற்க வேண்டும். உங்கள் தேவைகளுக்காக, வாழ்க்கையை நடத்துவதற்காக, வாழ்க்கைக்குத் தேவையான செலவுகளுக்காக எந்த ஆணையும் நம்பி மகளிர் இருக்கக் கூடாது. அந்த அளவிற்கு ஆண்களோடு, சரி நிகர் சமானமாக மகளிர் உயர வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மகளிரும் கல்வியைப் பெற வேண்டும், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழகத்தில் உள்ள எந்தப் பெண்ணாவது சுய உதவிக் குழுவில் சேரவில்லை என்றால் உடனடியாகச் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

### மேம்பாலங்கள்

இந்த இனிய விழாவிலே மொத்தம், 96 கோடி ரூபாய் மதிப்புடைய, பல்வேறு துறைகளைச் சார்ந்த, திட்டப் பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில், 11 கோடி ரூபாய் மதிப்பில், திருச்சிராப்பள்ளி – நாமக்கல் நெடுஞ்சாலையில் உள்ள, உத்தமர்கோவில் அருகே கட்டப்பட்டுள்ள, ரயில்வே மேம்பாலத்தையும், 11 கோடி ரூபாய் மதிப்பில், ஸ்ரீரங்கம் நகரில் கட்டப்பட்டுள்ள, ரயில்வே மேம்பாலத்தையும், திருச்சிராப்பள்ளி – சிதம்பரம் சாலை, புள்ளம்பாடி – விடுதலைபுரம் சாலை, ஆகியவற்றில், 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 பாலங்களையும், இன்று நான் திறந்து வைத்துள்ளேன். இந்த மேம்பாலங்களும், பாலங்களும், திருச்சி மாவட்டத்தின் போக்குவரத்து வசதிகளை, பெரிதும் மேம்படுத்தும் என்று கருதுகின்றேன்.

பொதுப்பணித்துறையால், 4 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, பல்வேறு துறைகளைச் சார்ந்த, 15 கட்டடங்களையும், இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக, 80 இலட்சம் ரூபாய் மதிப்பில், திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டு அரங்கத்தில், கட்டப்பட்டுள்ள நீச்சல் குளத்தை, திறந்து வைத்ததிலே, நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

குடிதண்ணீர் வழங்கல் பணிகளைப் பொறுத்த வரையில், எங்களது அரசு, மிகுந்த கவனத்தை செலுத்தி வருகின்றது. அந்த வகையில், 68 இடங்களுக்கு, குடிநீர் வழங்குகின்ற, 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள, திருவெறும்பூர் – துவாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், மற்றும் வையம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த, கருங்குளம் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்கு, 70 இலட்சம் ரூபாய் செலவில், குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்– தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில், தும்பலம் மற்றும் 24 குடியிருப்பு பகுதிகளுக்கு, 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில், குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – மணச்சநல்லூர் ஒன்றியத்தில், 18 குடியிருப்புகளுக்கு, 1 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பில், குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆகியவற்றை திறந்து வைத்துள்ளேன். இந்தப் பணிகள் அனைத்தும், இப்பகுதி வாழ் மக்களின், குடிநீர்த் தேவைகளை, பெரிதும் பூர்த்தி செய்யும் என்று, நான் நம்புகின்றேன். திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், 1 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, 12 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் – 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, 2 ஆதிதிராவிடர் மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் – ஊரக வளர்ச்சி முகமை சார்பில், 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 470 கட்டடங்கள் – 18 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்டுள்ள, திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டடம் – ஊரக வளர்ச்சித் துறையினால், 7 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில், அமைக்கப்பட்டுள்ள, 1798 குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள், மற்றும் 30 கட்டடங்கள் ஆகியவற்றை, இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், இந்த விழாவில், மணிகண்டம் ஒன்றியம், அம்மாப்பேட்டையில், 3 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பில், துணை மின் நிலையம் ஒன்றை, திறந்து வைத்ததிலும் – பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், 11 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பில், கட்டி முடிக்கப்பட்டுள்ள 7 கட்டடங்களையும், இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.


### ஆண்டாள் பாடலும் அன்னதானத் திட்டமும்

நம்முடைய இதிகாசங்களும், இலக்கியங்களும், ஆன்ம நேயத்தையே அதிகம் வலியுறுத்துகின்றன.

மனிதாபிமானம் என்பது, மனிதர்களிடம் அன்பு காட்டுவது. ஆன்ம நேயம் என்பது, எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவது.

ஆழ்வார் பெருமக்கள், அரங்கனிடத்து மட்டுமல்ல; அடியாரிடத்திலும் அன்பு காட்டினார்கள். ஆண்டாள் அற்புதமான தமிழால் திருப்பாவை பாடினார். அந்தத் திருப்பாவையில், 27–ஆவது பாடலில், பாவை நோன்பு நோற்று, கண்ணனிடத்தில் என்னென்ன பரிசுப் பொருட்களைப் பெறலாம், என்பதைச் சொல்லுகிறார் ஆண்டாள்.

"ஆடை அணிகலன்கள் எல்லாம் பெற்று, அணிந்து கொண்ட பிறகு, பால் சோற்றை மூடும்படியாக, நெய்யை அதிலே ஊற்றி, முழங்கை வழியாக, அந்த நெய் வழியும்படி உண்ண வேண்டும்", என்று சொன்ன ஆண்டாள், அதற்கு மேல், இந்த உலகம் உணர்ந்து கொள்ள வேண்டிய, ஒரு உண்மையைச் சொன்னார்.



'பால் சோறு மூட
நெய் பெய்து
முழங்கை வழிவார'
– என்று பாடிய
ஆண்டாள்

'கூடியிருந்து
குளிர்ந் தேலோர்
எம்பாவாய்'
– என்று பாடலை
நிறைவு செய்கிறார்.

பால் சோற்றில் முழுக்க நெய் பெய்த சத்துணவை, தான் மட்டும் சாப்பிட வேண்டும், என்று ஆண்டாள் சொல்லவில்லை. கூடியிருந்து, – எந்தவித சாதி பேதமும் இன்றி – எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்து – சேர்ந்து உண்போம், என்பது தான், இந்தப் பாடலின் பொருள்.

எல்லோரும் ஒன்றாக இருந்து உண்ண வேண்டும். இது தான் ஆண்டாளின் கொள்கை! இது தான் வைணவத்தின் கோட்பாடு!

**இது தான் தமிழகத்தின் பண்பாடு!**

இது தான் உங்கள் அன்புச் சகோதரி, ஆலயங்களில் அறிமுகப்படுத்தி இருக்கும், அன்னதானத் திட்டத்தின் அடிப்படை!

இன்றைக்கு, தமிழகம் முழுவதும் உள்ள, 144 திருக்கோயில்களில், பகல் நேரத்தில், திருக் கோயில்களுக்கு வரும், பக்தர்களின் பசியைப் போக்க, அன்னதானத் திட்டம், மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதிகாசங்களும், இலக்கியங்களும் சொன்னவை, வெறும் தத்துவமாக இருந்து விடக் கூடாது. அவை வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது தான், என்னுடைய நோக்கம்,! என்னுடைய செயல்பாடு!

**மகளிர் தொழில் பூங்கா**

கட்டி முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்தால் மட்டும் போதாது. மக்களின் தேவைக்கும், வசதிக்கும், மேலும் புதுப்புது கட்டுமானப் பணிகளை, அமைத்துத் தந்து கொண்டே இருக்க வேண்டும், என்பது தான், இந்த அரசின் கொள்கை. அந்த வகையில், இன்றைய தினம், மொத்தம் 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு துறைகளில் அமைக்கப்பட உள்ள, பல் வகை கட்டுமானப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறையால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட உள்ள, 21 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 11 பாலங்களுக்கும், 7 சாலைப் பணிகளுக்கும், இந்த விழாவிலே அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். மேலும், 1 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பில், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான, 6 மாணவர் விடுதிகள் – 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய உள்ள, 29 துணை சுகாதார நிலையங்கள் – 35 இலட்சம் ரூபாய் மதிப்பில், புளியஞ்சோலை பகுதியில் அமைக்கப்படவுள்ள, சுற்றுலாத் தலம் ஆகியவற்றிற்கு, அடிக்கற்கள் நாட்டியதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், மொத்தம் 126 குடியிருப்புப் பகுதிகளுக்கு, 9 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள, குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கும் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், 12 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்படவுள்ள கால்வாய்கள் தூர்வாரும் பணி, சமுதாயக் கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலகங்கள், மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், கதிரடிக்கும் களங்கள், கழிப்பிடங்கள் ஆகியவற்றை அமைக்கின்ற பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியதில், நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

இவை மட்டுமின்றி, யானைக்குளம் பகுதியில், 7 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமையவுள்ள, வணிக வளாகம் – திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில், 2 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைய உள்ள, துணை மின் நிலையம் – திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில், வாழவந்தான் கோட்டையில், 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில், 51 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள, மகளிர் தொழில் பூங்கா – திருச்சிராப்பள்ளி மாவட்ட, காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கான, 3 கோடி ரூபாய் மதிப்புடைய, புதியக் கட்டடம், ஆகிய முக்கியமான கட்டுமானப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளதில், நான் பெருமை அடைகின்றேன். இவை மட்டுமின்றி, 25 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ், அமைக்கப்படவுள்ள, பல்வேறு திட்டப் பணிகள் – போக்குவரத்து ஊழியர்களுக்கான 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள, 311 குடியிருப்புகள் – 32 இலட்சம் ரூபாய் செலவில், பார்வை அற்றோருக்கு

அமைக்கப்பட உள்ள, 100 தொகுப்பு வீடுகள் – திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்குதல் திட்டம், ஆகியவற்றை எல்லாம் இந்த விழாவில் துவக்கி வைத்ததில், நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்

**எதையும் மறுத்தே அறிவாளிகள் ஆனவர்கள்**

ரஷ்ய நாட்டிலே, ஒரு சிறந்த சிந்தனையாளர் இருந்தார். அவரிடம் அறிவுரை கேட்பதற்கு, ரஷ்ய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மக்கள் வருவார்கள். அவருடைய பெயர் கோகோல் (GOGOL).

அந்த நாட்டின் ஒரு ஊரில், ஒரு முட்டாள் இருந்தான். அவன் என்ன சொன்னாலும், அவனைப் பார்த்து பரிகசித்து, மக்கள் சிரிப்பார்கள். முட்டாள் என்பது, அவனது பட்டமாக, ஒரு காலத்தில் இருந்தது. நாளடைவில், சொந்தப் பெயர் போய் விட்டது. முட்டாள் என்னும் இந்தப் பெயரே, சொந்தப் பெயராய் ஆகிவிட்டது.

அவன் சிந்தனையாளர் கோகோலைக் சந்தித்து, 'முட்டாள் என்னும் பட்டத்தை மாற்ற முடியுமா?' என்று கேட்பதற்காகப் போனான். கோகோலிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவப்பெயரை நீக்க வழி கூற வேண்டும், என்று அவரைக் கேட்டுக் கொண்டான்.

அவன் மிகவும் மனம் வருந்திச் சொன்னான். "நான் சொன்னதைக் கேட்ட பிறகு, மக்கள் என்னை முட்டாள் என்று அழைத்தாலும், பரவாயில்லை. ஆனால், நான் எதையாவது சொல்லத் தொடங்கினாலே – ஏன் – வாயைத் திறந்த உடனேயே, மக்கள் என்னை முட்டாள் என்று பரிகசிக்கிறார்கள். இதை மாற்றுவது எப்படி?" என்று பரிதாபமாகக் கேட்டான்.

அதற்கு அந்த ரஷ்ய சிந்தனையாளர் கோகோல் சொன்னராம் – "இனிமேல் யார், என்ன சொன்னாலும், உடனே அதை மறுத்துப் பேசு. எப்போதும் மறுத்துப் பேசு! எவரையும் மறுத்துப் பேசு! என்ன சொன்னாலும் மறுத்துப் பேசு! உதாரணமாக, யாராவது கடவுள் இருக்கிறார் என்று சொன்னால், உடனே இல்லை என்று சொல். நிரூபிக்க முடியுமா என்று சவால் விடு! யாரும் உன்னைப் பற்றி என்ன சொன்னாலும் மறுத்துப் பேசு! அதை மட்டும் ஒழுங்காகச் செய்!" என்று கோகோல் அவனுக்கு அறிவுரை வழங்கி, அனுப்பி வைத்தார்.

அவன் ஊருக்குள் போனான். யார் என்ன சொன்னாலும், உடனே அதை மறுத்துப் பேசினான். யார் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாலும், இவன் நடுவில் குறுக்கிட்டு "அப்படி இல்லை" என்பான். "நிரூபிக்க முடியுமா?" என்று சவால் விடுவான்.

ஒன்றிரண்டு மாதங்களிலேயே, அவனை ஊர் மக்கள், "அறிவாளி"! என்று பேசத் தொடங்கி விட்டார்கள். விரைவில் அவன் புகழ் நாடெங்கும் பரவியது. இதில் வேடிக்கை என்னவென்றால், முன்பு அவனை யார், யார் 'முட்டாள்' என்று அழைத்தார்களோ, அவர்களுக்கு எல்லாம் அவனை 'முட்டாள்' என்று அழைத்ததே, மறந்து போய்விட்டது. இப்போது அவன் அறிவாளி, அதனால் தான், எல்லோரையும் அவனால் மறுக்க முடிகிறது, என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

இப்படி அறிவாளி ஆனவர்கள், ரஷ்ய நாட்டிலே மட்டுமல்ல, நமது தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள். அடுத்தவர்களை மறுத்துப் பேசியே, அறிவாளிகள் என்று பெயர் பெற்று விட்ட இவர்களுக்கு, வேறு வேலையே இல்லை.

இவர்கள் "மக்களுக்கு ஏன் உதவி செய்யவில்லை?" என்று கேட்பார்கள். "விவசாயிகள் பட்டினி கிடக்கிறார்களே, ஏன் அரசாங்கம் உதவவில்லை?" என்பார்கள். அரசாங்கம் விவசாயிகளின் பசியைப் போக்குவதற்கு சோறு போட்டால், "ஏன் போட்டாய்?" என்பார்கள். போடவில்லை என்றால், "ஏன் போடவில்லை?" என்பார்கள்.

இவர்களில் சிலர் வேடிக்கையானவர்கள். மக்கள் ஒதுக்கித் தள்ளிய கட்சிகளில், இவர்கள் "முயல் தலைவர்கள்", "செயல் தலைவர்கள்", "புயல் தலைவர்கள்" என்றெல்லாம் பெயர்களை வைத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களை இன்னும் "புத்திசாலிகளாக" ஆக்க, ஒருவர் தூபம் போட்டுக் கொண்டே இருப்பார். அவருடைய பிழைப்பே, என்னை எதிர்ப்பது மட்டும் தான். எனது அரசு எதைச் செய்தாலும், அவர் அதை மறுப்பார், எதிர்ப்பார்.

இப்படிப்பட்ட புத்திசாலிகளின் எதிர்ப்புகளை எல்லாம் மீறித்தான், உங்கள் அன்புச் சகோதரியான நானும், எனது அரசும், மக்களுக்கான ஆக்கப் பணிகளை புரிவதில், இன்று ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்து வருகிறோம்.

இங்கே பேசிய அருமை சகோதரர் சபாநயாகர் டாக்டர் காளிமுத்து அவர்கள் பேசுகின்ற போது 1996–ம் ஆண்டு மக்கள் நம்மை தோற்கடித்தார்கள். ஆட்சியை இழந்தோம். மீண்டும் 5 ஆண்டுகள் கழித்து மக்கள் ஆட்சிப் பொறுப்பை நம்மிடம் வழங்கி இருக்கிறார்கள் என்று கூறினார். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை மக்கள் எங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இது எளிதான காரியம் அல்ல. சாமானியமாக செய்யக் கூடிய காரியமும் அல்ல. இன்றைக்கு மக்கள் என்னிடத்தில் என்ன வழங்கி இருக்கிறார்கள்? முள்ளாலான கிரீடத்தை வழங்கி இருக்கிறார்கள். People have given me a crown of thorns. தமிழகத்தின் அரியணையில் மக்கள் என்னை உட்கார வைத்திருக்கிறார்கள். அரியணை என்றால் சிம்மாசனம். இது எப்படிப்பட்ட சிம்மாசனம். ஆணிகளால் செய்யப்பட்ட சிம்மாசனம். A throne of nails. I am sitting on a throne of nails wearing a crown of thorns ஆணிகளால் ஆன சிம்மாசனத்தில் உட்கார்ந்துக் கொண்டு முட் கீரிடத்தை அணிந்து கொண்டிருக்கிறேன். இது தான் என்னுடைய நிலை. என்னுடைய அரசாங்கத்தின் நிலை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

1996–ல் என்ன தவறு செய்தோம். ஆனால், மக்கள் அப்படி ஒரு தீர்ப்பை அளித்து எங்களைத் தோற்கடித்ததால் இன்றைக்குத் தமிழகத்தை சீர்படுத்துகின்ற காரியம் பன் மடங்கு, நூறு மடங்கு கஷ்டமானதாக, சிரமமானதாக ஆகி விட்டது. 1996–ம் ஆண்டு அந்தத் தேர்தலில் மக்கள் வேறு

விதமான தீர்ப்பை அளித்திருந்தால் தொடர்ந்து இந்த அரசே செயல்பட்டிருந்தால் இந்நேரம் நிச்சயமாக தமிழ் நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆகியிருக்கும் அது உறுதி. ஆனால், மக்கள் அன்றைக்கு அத்தகையதொரு தீர்ப்பை வழங்கியதால் தமிழகத்தில் ஒரு பின்னடைவு ஏற்பட்டு விட்டது. 5 ஆண்டு காலம் தமிழகம் எல்ல வகைகளிலும், எல்லா துறைகளிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு இருளில் மூழ்கியது. நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதியதாக ஒரு வீட்டைக் கட்டுவது என்றால் அது எளிதான காரியம். கிடு கிடுவென்று வேகமாகக் கட்டி விடலாம். ஆனால், ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட ஒரு வீட்டை இடித்து விட்டு, நாசப்படுத்தி அலங்கோலப் படுத்தினால் அதன் பிறகு மீண்டும் அந்த வீட்டுக்குள் வந்து கிடக்கின்ற குப்பைகளை எல்லாம், இடிபாடுகளை எல்லாம் அகற்றி அந்த வீட்டை சுத்தப்படுத்தி மீண்டும் அந்த வீட்டை புதுப்பித்து, மீண்டும் கட்டுவது என்றால் அது எவ்வளவு கஷ்டமான காரியம் என்றால் செய்து பார்த்தால் தான் தெரியும், புதிய வீட்டை கட்டுவதை விட இப்படி பாழடைந்த ஒரு வீட்டை புதுப்பித்து மீண்டும் கட்டுவது என்பது இன்னும் நூறு மடங்கு கஷ்டமான காரியம். இதைத் திரும்ப திரும்ப செய்ய வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

புரட்சித் தலைவர் ஆட்சி 1987–ம் ஆண்டு வரை இருந்தது. புரட்சித் தலைவர் மறைந்த பிறகு ஒரு அரசியல் விபத்தால் 1989–ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கருணாநிதி முதலமைச்சர் ஆனார். அப்போது, 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கருணாநிதியின் ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போதே கஜானாவை காலியாக்கி விட்டுத் தான் அவர் சென்றார். 1991–ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று நான் முதலமைச்சரானேன். அப்போதே கஜானா காலி. மிகவும் நெருக்கடியான நிதி நிலைமை. எப்படியோ கஷ்டப்பட்டு, மன உறுதியோடு, 1991–லிருந்து 1996 வரை அரும்பாடுபட்டு தமிழகத்தை எல்லா துறைகளிலும் முன்னேற்றினோம். பல புதிய தொழில்களை இங்கு கொண்டு வந்தோம். புதிய தொழிற்சாலைகளை நிறுவினோம். மின் உற்பத்தியை பெருக்கினோம். ஒவ்வொரு துறையிலும் பல சாதனைகளைப் புரிந்தோம். ஆனால் இவ்வளவு செய்தும் கூட 1996–இல் மக்கள் எங்களுக்குத் தோல்வியை தந்தார்கள். நாங்கள் ஆட்சியை விட்டு இறங்கும் போது, தமிழகத்தில் நிதி நிலையை மிகவும் சீராக வைத்து விட்டு தான் போனோம். அன்றைக்கு உபரி நிதியை வைத்து விட்டுப் போனோம்.

ஆனால், மீண்டும் ஆட்சிக்கு வந்த தி.மு.க, மீண்டும் ஆட்சிக்கு வந்த கருணாநிதி, 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தை குட்டிச் சுவராக்கி அலங்கோலப்படுத்தி எல்லா வகையிலும் பின்னுக்குத் தள்ளி விட்டு படுகுழியில் தமிழகத்தை தள்ளி விட்டு போய் விட்டார். மீண்டும் 2001–ல் மக்கள் ஆட்சி பொறுப்பை என்னிடத்தில் வழங்கினீர்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், தமிழகத்தில் யாருமே ஆட்சிப் பொறுப்பை ஏற்க விரும்ப மாட்டார்கள். இது விரும்பக் கூடிய ஒரு பதவி அல்ல. ஆசைப்பட்டு ஏற்கக் கூடிய ஒரு பொறுப்பு அல்ல. வைராக்கியத்துடன் இன்றைக்கு செயல்பட்டு கொண்டிருக்கிறேன். எந்தப் பக்கம் திரும்பினாலும், முட்டுக் கட்டை, நெருக்கடி. ஏற்கெனவே பற்றாக்குறையில் இருக்கின்ற நிதி நிலைமை. எதற்குக் கேட்டாலும், எதை எடுத்தாலும் நிதி இல்லை, நிதி இல்லை என்ற பதில் தான் அரசு அதிகாரிகளிடமிருந்து வருகிறது. போதாக் குறைக்கு வறட்சி. எங்கேயும் தண்ணீர் இல்லை. காவிரியில் நம்முடைய உரிமை கிடைக்கவில்லை. நமக்கு வரவேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ஒரு அரசாங்கம் என்ன செய்ய முடியும்? கடன் வாங்கும் உரிமையைக் கூட மத்திய அரசு மறுத்து விட்டது. முன்பு எல்லாம் ஒரு மாநில அரசுக்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டால் எங்காவது கடன் எழுப்புவோம். கடன் வாங்குவோம். நிலைமையை சமாளிப்போம். அந்த அதிகாரங்களும் மாநில அரசாங்கத்திற்கு இல்லை. மறுக்கப் படுகின்றன.

இந்த நிலையில் ஒரு மாநில அரசு என்ன செய்ய முடியும்? முடிந்ததை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இன்றைய தினம் நிதிப் பற்றாக்குறை; காவேரியில் போதுமான தண்ணீர் இல்லை. அதனால் சம்பா பயிரை இழந்து விட்டோம். எங்கு பார்த்தாலும் வறட்சி தாண்டவமாடுகிறது. குடிக்க தண்ணீர் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு மாநில அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், இத்தகைய ஒரு சூழ்நிலையில் கூட மாவட்டந்தோறும் சென்று நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் துவக்கி வைத்து மக்களுக்குப் பல பணிகளை ஆற்றி வருகிறோம். பல உதவிகளை செய்து வருகிறோம் என்று சொன்னால், இந்த அரசுக்கு இருக்கின்ற வைராக்கியம், உறுதி Political will இதுதான் இதற்குக் காரணம், மக்களின் ஆதரவும் காரணம்.

இதனால் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் எந்த மாநில அரசும், இத்தகைய சூழ்நிலையில் தலை நிமிர்ந்து நிற்பது கஷ்டம். ஆனால், தமிழக அரசு திவாலாகி விடக் கூடாது. என்னை நம்பி இந்தப் பொறுப்பை ஒப்படைத்த மக்களை நான் உயர்த்தியே தீர வேண்டும். தமிழகத்தை முன்னேற்றியே தீர வேண்டும் என்ற வைராக்கியத்துடன் மன உறுதியுடன் நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே, தமிழக மக்கள் அனைவரும் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டும். இந்த அரசுக்குத் தோளோடு தோள் நிற்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன்.

பொருளாதாரக் கடன் உதவி

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு, அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில், எங்கள் அரசு முன்னணியில் இருக்கின்றது என்பதை, நான் பல முறை சுட்டிக் காட்டி இருக்கின்றேன். அந்த வகையில், இன்றைய தினம், மொத்தம் 15,910 பயனாளிகளுக்கு, சுமார் 9 கோடி ரூபாய் மதிப்புடைய, பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இந்த விழாவில் வழங்க இருக்கின்றேன். அவற்றில் ஒரு சில, முக்கிய நலத் திட்ட உதவிகளைப் பற்றி, எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

இன்றைய தினம், மொத்தம் 6526 பெண்களுக்கு, பொருளாதார கடன் உதவி மற்றும் சுழல்நிதி என்ற வகையில், 2 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, நலத் திட்ட உதவிகள் – 2925 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு, 93 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, வீட்டு

மனைப் பட்டாக்கள் – முதியோர் உதவித் தொகை போன்ற உதவிகள் – 85 பயனாளிகளுக்கு, திருமண உதவித் திட்டம், இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை, 12 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குதல் – தொழில் வணிகத் துறையின் சார்பில், 154 பயனாளிகளுக்கு, 58 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடன் உதவி – 1277 பயனாளிகளுக்கு, 3 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பில், வீடுகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவி, ஆகியவற்றை இந்த விழாவிலே வழங்க உள்ளதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும், பயனாளிகள் அனைவருக்கும், நானே எனது கரங்களாலேயே வழங்க வேண்டும், என்று எனக்கு விருப்பம் தான். ஆனால் அதற்கு போதுமான நேரம் இல்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்த மேடையில், 15 பயனாளிகளுக்கு மட்டும், நலத்திட்ட உதவிகளை, நானே எனது கரங்களாலே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அலுவலர்களும், இப்போதே, இங்கேயே, இந்த விழாவிலேயே, வழங்கி சிறப்பிப்பார்கள், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பலவும் பெற உள்ள பயனாளிகள், தாம் செய்து வருகின்ற தொழில்களில், மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும், என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

**புரட்சித் தலைவரிடம்**
**மக்கள் காட்டிய அன்பு**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., எனது நீண்ட கால நண்பர் என்று சொல்லி, அவர் மறைந்த பிறகு, ஆதாயம் தேடிக் கொள்ள நினைக்கும் ஒருவர், அவர் வாழ்ந்த காலத்தில், அவருக்கு என்னென்ன கொடுமைகள் செய்தார், என்பதையெல்லாம் தமிழகம் அறியும்.

சென்னையில் இருந்து திண்டுக்கல்லுக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், அவர்கள், சென்று கொண்டிருந்தார்.

ஒவ்வொரு 10 கிலோ மீட்டருக்குப் பிறகும், வாகனத்தை மாற்றி மாற்றிப், பயணம் செய்ய வேண்டிய நிலை! காரணம், கண்ட இடத்தில், அவருடைய கதையை முடித்துவிட வேண்டும் என்பதற்காக, எதிரிகள் கழுகுகளாக, வட்டமிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

மணப்பாறையைத் தாண்டும் போது, மாட்டு வண்டியில் அவர் சென்று கொண்டிருந்ததை எதிரிகள் அறிந்து கொண்டார்கள்.

புத்தா நத்தத்தைத் தாண்டி வண்டியை, வழி மறித்தார்கள் வஞ்சகர்கள்!

அவர்களுக்குத் தெரியாது, மணப்பாறையைத் தாண்டியதும், புரட்சித் தலைவர் ஒரு வேனிலே ஏறி விட்டார் என்ற விவரம்!

வேனை ரோட்டிலே நிற்க வைத்து விட்டு, பக்கத்திலிருந்த காட்டுக்குள் சென்று, தரையில் படுத்து உறங்கினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதிகாலை 5 மணிக்கு கண் விழிக்கும் போது, கால்மாட்டில் ஒரு மூதாட்டி, இரண்டு அலுமினிய தூக்குச் சட்டிகளுடன், காத்துக் கிடப்பதைப் பார்த்தார்.

"அம்மா! உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று புரட்சித் தலைவர் கேட்டார்.

"ஐயா! நான் வாங்க வரவில்லை. உனக்கு கொடுக்க வந்திருக்கிறேன்.

"ஒரு தூக்குச் சட்டியில் சோறு இருக்கிறது. இன்னொரு தூக்குச் சட்டியில் வெடக்கோழி குழம்பு இருக்கிறது. சாப்பிடு மகராசா!" என்று மூதாட்டி சொன்னார்.

அந்த இரண்டு பாத்திரங்களையும் வேனிலே எடுத்துக் கொண்டு புறப்பட்டார் புரட்சித் தலைவர்.

திண்டுக்கல்லில் அன்று பிரச்சாரம் முடிந்து இரவு ஒரு மணிக்கு மேல், சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

காரில் மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவர் மட்டும் விழித்துக் கொண்டிருந்தார்.

முதல் நாள் இரவு, மூதாட்டியைச் சந்தித்த இடத்தில், வண்டியை நிறுத்தச் சொல்லி, அந்த மூதாட்டியை புரட்சித் தலைவர் தேடிப் போனார்.

டார்ச் லைட் வெளிச்சத்தில், ஓட்டுத் திண்ணையில், படுத்திருந்த கிழவியைக் கண்டு, குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த அவருக்கு, கம்பளிப் போர்வையைப் போர்த்தினார்.

அது மட்டுமல்ல, மூதாட்டியின் கையில், ஆயிரம் ரூபாயை திணித்து விட்டு, விடைபெற்றார் அந்த வள்ளல்!

மக்கள் அவரிடம் வைத்த அன்பும், அவர் மக்களிடம் வைத்த அன்பும், வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

அந்தத் தர்மத் தலைவனின் வழியிலேயே நடக்கும், உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னிடம், நீங்கள் வைத்திருக்கும் அன்பும், நான் உங்களிடம் வைத்திருக்கும் அன்பும், வேறெங்கும் காணக் கூடியதா! இல்லை என்பது தானே இதற்கு விடை, இப்படிப்பட்ட அன்பை வேறு எங்கும் காண முடியாது என்பது தானே உண்மை.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

*(திருச்சிராப்பள்ளியில் 10.3.2003 அன்று நடைபெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்புவிழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல்நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை).*



# சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க ஆண்டுக்கு ரூ.1000 விதம் பண உதவி

– மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

**1998**-ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் கீழ், பல்வேறு வகையான பயனீட்டாளர்களுக்கு தமிழ்நாடு மின்வாரியத்தால் விற்கப்படும் மின்சாரத்திற்கான 16.3.2003 முதல் செயலுக்கு வரும் புதிய கட்டண விகிதங்களை, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது.

*நிதிச் சீரமைப்பு நடவடிக்கை*

1996-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசு நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், மாநிலத்தை நிதிச் சீரழிவில் தள்ளிவிட்டது என்பது அனைவரும் அறிந்ததே. 1999–2000 மற்றும் 2000–2001 ஆகிய ஆண்டுகளில் மிகச் சீர்குலைந்த நிதி நிலைமையைச் சரி செய்ய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை செயல்படுத்தாமல், மார்ச் 2001 இறுதியில் மாநிலத்தை நிதிச் சீரழிவில் சென்றடையும் வகையில் தி.மு.க. அரசு செய்துவிட்டது. 2001-ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் நிலுவையிலிருந்த உணவுப் பொருள் வழங்குதலுக்கான உதவி மானியத் தொகை, அரசுப் பணியாளர்களுக்கான ஊதிய நிலுவைத் தொகை, தமிழ்நாடு மின் வாரியத்தினால் மைய அரசு நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்கியதற்காக கொடுக்க வேண்டிய தொகைகளின் நிலுவை, அரசு தமிழ்நாடு மின் வாரியத்துக்கு வழங்க வேண்டிய மானிய நிலுவைத் தொகையை வழங்காமை, மாநில அரசால் கொடுக்கப்பட வேண்டிய பட்டியல் தொகைகள் ஆகியவை அனைத்தும் நிதி நிலையின் மொத்தச் சீரழிவைத்தான் காட்டுகின்றன. இந்த மிகப் பெரிய நிதிச் சீரழிவினை எதிர்கொண்ட இவ்வரசு, நிலைமையை சரி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது. மாநிலம், தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி நலத்தை மீளப்பெறும் இமாலயப் பணியை மேற்கொள்ளும் நிலைக்கு இவ்வரசு தள்ளப்பட்டது.

1998-ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதிய சட்டத்தை இந்திய அரசு இயற்றியது. இந்தச் சட்டம் 25.4.1998 முதல் செயல்முறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ், முந்தைய தி.மு.க. அரசு 17.3.1999 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை தோற்றுவித்தது. இந்தச் சட்டம் மின்சாரத்திற்கான கட்டணம், பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் சராசரி செலவு அளவின் அடிப்படையில், மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

2001-ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலைமை சீரழிந்த நிலையில் இருப்பதைக் கண்டறிந்தது. 2001–2002-ஆம் ஆண்டில் மின்சார வாரியம் ரூபாய் 5,000 கோடி அளவிற்கு மொத்த நட்டத்தை எதிர்கொண்டிருந்தது. மைய அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு மின்சாரம் மற்றும் நிலக்கரி வாங்கியதற்காக ரூபாய் 1,962 கோடி மின்சார வாரியத்தால் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. நிதிநிலை மிக அபாயகரமான நிலையில் இருந்ததால், 1.12.2001 முதல் மின் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கும், மைய அரசு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வாரியம் செலுத்த வேண்டிய தொகைகளை அரசே ஏற்க வேண்டிய கட்டாயத்திற்கும் இந்த அரசு தள்ளப்பட்டது. இருந்தபோதிலும், விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்குவது தொடரப்பட வேண்டும் என இவ்வரசு ஆணையிட்டது. அரசினால் 1.12.2001 முதல் செய்யப்பட்ட இந்த மின் கட்டண மாற்றத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம் 14.6.2002 அன்று மின் கட்டண மாற்றத்தை ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தியதோடு, இனிவரும் காலத்தில் மின் கட்டண மாற்றம் மாநில ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்று தனது தீர்ப்பில் உத்தரவிட்டது.

### வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி உதவி

மேலும் 2001ஆம் ஆண்டு மார்ச் திங்களில், முந்தைய தி.மு.க. அரசு துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின் (Accelerated Power Development Programme) கீழ் நிதி உதவியைப் பெற்றுவிட்டது. இதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஒன்றிற்கு ஏற்பளிக்க வேண்டியிருந்தது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மாநில ஒழுங்குமுறை ஆணையத்தை செயலாக்க வேண்டும். மேலும் 31.12.2003க்குள் அனைத்து நுகர்வோருக்கும் மின் பயனீட்டு அளவுக் கருவிகள் பொருத்தப்பட வேண்டும் என்பதும் தமிழ்நாடு மின்சார வாரியம் மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண விகிதத்தை மாற்றி அமைக்க ஒரு விண்ணப்பத்தினை 30.9.2002க்குள் கொடுக்க வேண்டும் என்பதும் இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள். எனவே, இந்த அரசுக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது. எனவே, முந்தைய தி.மு.க. அரசு, மைய அரசின் நிதி உதவியை ஏற்கெனவே பெற்றுவிட்ட நிலையில், நிபந்தனைகளின்படி 2002ஆம் ஆண்டு ஜனவரியில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

2002ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி, தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண மாற்றத்திற்கான விண்ணப்பத்தினை கொடுத்தது. 1998ஆம் ஆண்டு மைய அரசின் சட்டத்தின்படி, தற்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டண விதிமுறைகளை பின்பற்றி, கட்டண விகித ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னர், 10.3.2003 அன்று தமிழ்நாடு அரசு விரிவான கொள்கை விளக்கத்தை எழுத்து வடிவில் அளித்து, விவசாயிகளுக்கும் கிராமப்புற குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுவது தொடரப்பட வேண்டும் என்று அதில் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின் வாரியம் மிக மோசமான நிதி நெருக்கடியில் இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். 2001–2002ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறையை சரிசெய்ய, 1.12.2001 அன்று முதற்கொண்டு கட்டண விகிதத்தை மாற்றி அமைத்த பின்னரும், நடப்பு 2002–2003ஆம் ஆண்டில் ரூபாய் 2,589 கோடி அளவிற்கும், 2003–2004ஆம் ஆண்டில் ரூபாய் 2,993 கோடி அளவிற்கும் பற்றாக்குறையை தமிழ்நாடு மின் வாரியம் சந்திக்கும். இந்தப் பற்றாக்குறையை சரிசெய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தமிழ்நாடு மின் வாரியம் அளித்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையமும் அனைத்துக் கூறுகளையும் கருதிப் பார்த்து, 2003ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் தேதி முதல் செயல்படுத்தும்படியான இந்த மின் கட்டண விகித ஆணையைப் பிறப்பித்துள்ளது.

### தமிழ்நாட்டில் மட்டுமே இலவச மின்சாரம்

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தனது ஆணைகளில், விவசாய பம்பு செட்டுகளுக்கான கட்டண விகிதம் மீட்டர் பொருத்தப்பட்டு அதனடிப்படையிலான பயனீட்டளவில் யூனிட் ஒன்றுக்கு 20 பைசா அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை விருப்புரிமை அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ஒரு குதிரை சக்தி பம்பு செட்டுக்கு ரூபாய் 250/– வீதம் எனவும் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. இக்கட்டணம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் 2003 செப்டம்பர் திங்களில் கட்ட வேண்டியிருக்கும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்துள்ள இந்தக் கட்டணம் நாடு முழுமையிலும் பம்புசெட்டுகளுக்கான கட்டண விகிதத்தில் மிகக் குறைந்த அளவாகும். மிகப் பெருமளவில் நிதிப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டுள்ள நிலையில் தனது கடன்பாடுகளை நிறைவேற்ற சிரமப்படும் நிலையிலிருந்தாலும், விவசாயிகளுக்கு அரசின் உறுதியான உதவி அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு, பம்பு செட்டுகளைப் பயன்படுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் அரையாண்டுக்கு ரூ.500/– வீதம் இரு தவணைகளில் 2003-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இருந்து வழங்கப்படக்கூடிய வகையில் ஆண்டொன்றிற்கு ரூ.1000/– பண உதவி செய்யும் என நான் முடிவு செய்துள்ளேன். இதில் 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுவர். இது நாடு முழுவதிலும் தமிழ்நாட்டில் மட்டுமே சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்பதனை உறுதி செய்யும்.

இவ்வாறாக 3 குதிரை விசை பம்புசெட்டினை பயன்படுத்தும் ஒரு விவசாயி அரசிடமிருந்து நேரடியாக ரூ.1000/– பண உதவி பெறுவதற்கு தகுதியானவராவார். பின்னர் அவர் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ரூ.750/– கொடுக்க வேண்டும். உண்மையில் அவர் நிகர உதவியாக ரூ.250/–க்கு பண உதவி பெறுவார். இவ்வாறு அவர் தொடர்ந்து இலவசமாக மின்சாரம் பெறுவதோடு மட்டுமன்றி, ரூ.250/– பண உதவியையும் அரசிடமிருந்து பெறுவார். சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாதுகாப்பிற்கான இவ்வரசின் முழு ஆதரவை எடுத்துக் காட்டுவதோடு, அவர்கள் உண்மையில் கூடுதலாக பண உதவி பெறுவதையும் இது உறுதி செய்யும்.

இலவச மின்சாரம் பெற்று வரும் மொத்தமுள்ள 15.04 இலட்சம் விவசாயிகளில் 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் இவ்வாறு அரசின் பண உதவியைப் பெறுவார்கள். 1984ஆம் ஆண்டில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய கொள்கையைத்தான் நாம் இந்த முறையில் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டண விகித

ஆணையினால் சிறு மற்றும் குறு விவசாயிகள் பாதிக்கப்படாமல் காக்கப்படுவதை இது உறுதி செய்யும். அரசு எதிர்கொண்டுள்ள பெரும் நிதிச் சுமைகளுக்கிடையே விவசாயிகளின் பாதுகாப்பிற்காக இந்த உறுதியான முடிவை இவ்வரசு எடுத்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின்கட்டணத்தைச் செலுத்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவும் வகையில் நேரடி உதவி வழங்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். சட்டப்படியான தேவைகள் நிறைவு செய்யப்படுவதோடு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதையும் நாம் இதன் மூலம் உறுதி செய்கிறோம். சிறு மற்றும் குறு விவசாயிகள் தொடர்ந்து இலவச மின்சாரம் பெற வழி செய்ய உதவும் இதுபோன்ற ஒரு திட்டம் நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

## குடிசை வாழ் மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு

தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் ஒரு விளக்கு கொண்ட 14 இலட்சம் குடிசைகள் இலவச மின்சாரம் பெற்று வருகின்றன. தமிழ்நாடு மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் யூனிட் ஒன்றிற்கு 50 பைசா அல்லது மீட்டர் பொறுத்தப்படும் வரை விருப்புரிமை அடிப்படையில் மாதமொன்றிற்கு ரூ.10/– என்ற கட்டண விகிதத்தை விதித்துள்ளது. கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் நலத்தைப் பாதுகாப்பதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, ஒவ்வொரு குடிசைவாழ் குடும்பத்தினருக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.100/– உதவித்தொகை வழங்கப்படும் என்று நான் முடிவு செய்துள்ளேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் விதிக்கப்படும் கட்டணத்தை குடிசை வாழ் மக்கள் அரை ஆண்டுக்கு ஒரு முறை 2003ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் செலுத்துவதற்கு இந்த உதவித்தொகை பயன்படும். இவ்வாறு குடிசைவாழ் மக்கள் தொடர்ந்து இலவச மின்சாரம் பெறுவர். மீட்டர் கணக்கின் அடிப்படையில் ஒரு மின் விளக்குப் பயன்பாட்டிற்கான மாதாந்திரக் கட்டணம் ரூ.7.50 பைசா ஆகும். ஆண்டொன்றிற்கு இந்தக் கட்டணம் ரூ.90/– இத்தொகையை தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் செலுத்த உதவி செய்ய அரசு ரூ.100/– வழங்கும். இவ்வாறாக குடிசைவாழ் மக்கள் எந்த வகையிலும் பாதிப்பிற்குள்ளாக மாட்டார்கள்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோரது நலனில் இந்த அரசு என்றென்றும் அக்கறை காட்டி வந்துள்ளது. குடிசைவாழ் மக்களுக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் நேரடியாக பண உதவி வழங்கும் இதுபோன்ற திட்டம் நாட்டில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லை. இவ்விரு திட்டங்களும் சிறு மற்றும் குறு விவசாயிகளும் குடிசைவாழ் மக்களும் முழுமையான பாதுகாப்பு பெறுவதை உறுதி செய்யும் என்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 20.3.2003

15.3.2003 அன்று மின்சார ஒழுங்கு முறை ஆணையம் தமிழ்நாடு மின்வாரியத்தால் விற்கப்படும் மின்சாரத்திற்கான 16.3.2003 முதல் செயல்பாட்டிற்கு வரும் புதிய கட்டண விகிதங்களை அறிவித்து இருந்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் தனது ஆணைகளில் விவசாய பம்ப் செட்டுகளுக்கான கட்டண விகிதம் மீட்டர் பொருத்தப்பட்டு அதன் அடிப்படையிலான பயனீட்டு அளவில் யூனிட் ஒன்றுக்கு 20 பைசா அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை விருப்புரிமை (Optional basis) அடிப்படையில் ஆண்டொன்றுக்கு குதிரைத் திறன் (1 Horse Power) ஒன்றுக்கு ரூ.250/– வீதம் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. இக்கட்டணம் 6 மாதங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் 2003 செப்டம்பர் மாதத்தில் கட்ட வேண்டியது இருக்கும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்துள்ள இந்தக் கட்டணம் இந்தியாவிலேயே பம்ப் செட்டுகளுக்கான கட்டண விகிதத்தில் மிகக் குறைந்த அளவாகும்.

மிகப் பெருமளவில் நிதிப் பற்றாக் குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டுள்ள நிலையில் தனது கடன் சுமைகளை நிறைவேற்ற சிரமப்படும் நிலையில் இருந்தாலும், விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பம்ப்செட்டுகளை பயன்படுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் அரையாண்டுக்கு ரூ.500/– வீதம் இரு தவணைகளில் 2003, செப்டம்பர் மாதத்தில் இருந்து வழங்கப்படக்கூடிய வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.1,000/– நிதி உதவி அளிக்கும் என்று நான் அறிவித்துள்ளேன். இதனால், 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்து இருந்தேன். இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் மட்டுமே சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவது இதன் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது 5 குதிரை சக்தி பம்ப் செட்டினை பயன்படுத்தும் ஒரு சிறு விவசாயி, அரசிடமிருந்து ரூ.1,000 நிதி உதவி பெற்று பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,250 செலுத்த வேண்டும் என்றும், எஞ்சிய தொகையான ரூ.250ஐ தாமாகவே செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையும் அரசு உதவித் தொகையாக அளித்தால் 5 குதிரைத் திறன் உள்ள பம்ப் செட் கொண்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் பயன் பெறுவார்கள் என்ற கருத்து பல்வேறு தரப்பினரால் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முழு பாதுகாப்பினை அளித்து வருகின்ற எங்கள் அரசு, இலவச மின்சாரம் பெறும் விவசாயிகளுக்கு முழுமையான பலனை அளிக்கக்கூடிய இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் அடிப்படையில் தமிழக அரசு 5 குதிரைத் திறன் பம்ப் செட் வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/– என்பது உயர்த்தப்பட்டு ரூ.1250/–ஐ உதவித் தொகையாக வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் அரையாண்டுக்கு ரூ.625/– வீதம் இரு தவணைகளில் ஆண்டொன்றுக்கு ரூ.1,250/– வழங்கப்படும். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும் விவசாயிகளின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட எங்கள் அரசு இக்கூடுதல் நிதிச் சுமையையும் தாங்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது. தமிழகத்திலுள்ள இலவச மின்சாரம் பெறும் அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் உதவும் வகையில் அமைந்துள்ள இந்தச் சலுகையை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.



# உலக ஒற்றுமை

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
கன்னலடா என்சிற்றூர் என்போ னுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்!
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்பு றுத்தல்!

ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச் செய்வார்
மாம்பிஞ்சின் உள்ளத்தின் பயனும் கண்டோம்!
தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!

– பாரதிதாசன்

# பெண்மையைப் போற்றுவோம்! பெண் சிசுவதையைத் தடுப்போம்!



சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கின்ற பழக்கத்தில் பெண் சிசுவதையும் ஒன்று. இது சில மாவட்டங்களில் வேரூன்றிப் போயிருக்கின்றது. இந்த ஆணி வேரை அறுத்தெறிய பலவிதமான திட்டப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்படி இத்திட்டத்தின் மூலம் பெண் சிசுவதையை ஒழிப்பதற்கு பல்வேறு ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெண்களுக்குப் போதிய கல்வி அறிவு இல்லாதது,

குடும்ப வறுமையின் காரணமாக பெண் குழந்தை வளர்ப்பது பொருளாதார சுமை எனக்கருதுதல்,

சில சமூகத்தில் பெண்களின் தாழ்ந்த நிலை,

வரதட்சணை கொடுமை,

பெண் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த பயம்,

ஆண்களால் மட்டுமே சமயச் சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணம்,

ஒரு சில குடும்பத்தில் தொடர்ந்து பெண் குழந்தை பிறந்தது என்றால் குடும்பத்தில் சாபக்கேடு என்ற நம்பிக்கை,

ஆண்களுக்கு மட்டுமே மூதாதையர்களின் சொத்து வழங்கப்படுவதில் முன்னுரிமை,

வயதான காலத்தில் பெற்றோர்களை ஆண் குழந்தைகளால் மட்டுமே காப்பாற்ற இயலும் என்ற எண்ணம்,



பெண்சிசுவதை என்ற கொடிய செயலுக்கு சொல்லப்படும் காரணங்கள் ஆகும்.

சமுதாயத்தில் நிலவும் பாலினப் பாகுபாடு (Gender disparity)

வாரிசுகளை உருவாக்கிக் கொள்வதில் ஆண்களே பெரிதும் தீர்மானம் செய்யும்நிலை,

பெண் சிசுவதை புரிவோரின் மீது முழு வீச்சில் செயல்படுத்தும்படியான சட்டங்களை பயன்படுத்த போதிய விழிப்புணர்வு இல்லாமை,

மூடநம்பிக்கையும் பழக்கவழக்கங்களும் ஆகியவைகளே (Gender disparity) ஆகும்.

ஆதிகாலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்பட்டார்கள். பெண்கள் பல்வேறு துறைகளில் தமது கடமையினை நிறைவேற்றி உள்ளதாகவும், அதிலும் குறிப்பாக அரசாட்சி செய்தவர்களாகவும், படைவீரர்களாகவும், படைத்தளபதிகளாகவும் பணியாற்றி உள்ளதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

ஆனால் அதனைத் தொடர்ந்து வந்த பிற்காலத்தில் பெண்களுக்கு நேரிட்ட கொடுமைகள் கணக்கிட முடியாது. இருப்பினும் பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறார்கள். குறிப்பாக பேருந்து ஓட்டுநராக, விமான ஓட்டியாக, விஞ்ஞானியாக, சாதனைகள் படைக்கும் விளையாட்டு வீராங்கனையாக, பார்போற்றும் சமூக சேவகர்களாக, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களாக, நாட்டின் தலைவர்களாக இப்படி இன்னும் பல துறைகளில் சாதனைகள் புரிந்து வருகிறார்கள். இருப்பினும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் அடையவில்லை.

வரதட்சணைக் கொடுமை,

கல்வி மறுப்பு,

சதி எனும் உடன் கட்டை,

சொத்துரிமை மறுப்பு,

சமூக மூட நம்பிக்கை மற்றும் கட்டுப்பாடுகள்,

ஊனம்,

புகுந்த வீட்டினரால் துன்புறுத்தப்படுவது,

விதவையானால் ஆதரவற்றநிலை,

பொறுப்பற்ற கணவன்மார்கள்,

குழந்தைப் பேறின்மை,

கணவன் மறுமணம் செய்தல்,

சமுதாயத்தில் பாதுகாப்பற்ற நிலை,

பணிபுரியும் பெண்களிடம் பாலியியல் பலாத்காரம்,

குடிகாரக் கணவன்,

குடும்ப பாரம்,

இறுதியில் பெண் சிசுவதை என இன்றைக்கும் பல பெண்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

பிறக்கின்ற நான்கு குழந்தைகளில் ஒரு குழந்தை எடை குறைவாகப் பிறக்கின்றது. 1980-ஆம் ஆண்டு 93 ஆக இருந்த சிசு மரண விகிதம் 1990இல் 59 ஆகவும் 2000த்தில் 51 ஆகவும் குறைந்தது. அதன்பின்னர் எந்த முன்னேற்றமும் இல்லை. அதே நிலை நீடித்து வருகிறது. பிறந்த ஒரு மாத காலத்திற்குள் குழந்தைகள் இறப்பதும், குறிப்பாகப் பெண் குழந்தைகள் இறப்பதும், பேறுகால தாய்மரணமும் தொடர்ந்து நிகழ்ந்துக்கொண்டே இருக்கிறது. எனவே ஆபத்தான அறிகுறிகள் உள்ள தாய்மார்களையும் குழந்தைகளையும் தனி கவனம் செலுத்தி காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியம். மேலும் இது சார்ந்த இலக்குகளில் தொடர்ந்து கவனமுடன் பணியாற்ற வேண்டியது தலையாய கடமை எனக் கருதி இத்திட்டத்தின் மூலம் பல ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளால் அவதியுறும் பெண்களுக்கு நம் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு பெண் சிசுவதை என்னும் கொடுஞ்செயலிலிருந்து விடுபட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழ்நாட்டில் பெண் சிசுவதை நடைபெறும் மாவட்டங்களில் பெண்சிசுவதைத் தடுப்பு விழிப்புணர்வு முகாமினை நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்படி சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் பெண் சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்த ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ பெண் சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாமின் தொடர் நடவடிக்கையாக கீழ்க்கண்ட பணிகள் சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ பெண் சிசு வதை நடைபெறும் கிராமங்களில் வசிக்கும் மக்களிடையே கணக்கெடுப்பு

★ மாவட்ட அலுவலர்களுக்கு மாவட்ட அளவிலான ஒரு நாள் பணியரங்கம்

★ ஒன்றிய அலுவலர்களுக்கான ஒன்றிய அளவிலான ஒரு நாள் பணியரங்கம்

★ ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், சமுதாய சுகாதாரச் செவிலியர்கள், காவல் துறை அலுவலர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், ஊட்டச்சத்து பணியாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்களுக்கான பணியரங்கம்

★ மாவட்ட அளவிலான விழிப்புணர்வுப் பேரணி

★ வட்டார வாரியாக 12 வட்டாரங்களில் விழிப்புணர்வுப் பேரணி

★ பெண் சிசுவதை விழிப்புணர்வு தொடர்பாக உரிய விளம்பரங்கள் தயாரித்து விநியோகம் செய்தல்

★ பெண் சிசுவதை நடைபெறும் 12 வட்டாரங்களிலும் நாடகங்கள், தெருக்கூத்துகள் நடத்துதல்

★ பாலின சமன்பாடு குறித்த வயது முதிர்ந்த மூத்த குடிமக்களுக்கும், ஊர் பெரியவர்களுக்கும் ஆலோசனைக் கூட்டங்கள்

★ புதுமணத் தம்பதிகள், மாமனார், மாமியார்கள், தாதிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான ஆலோசனைக் கூட்டங்கள்

★ துறைவாரியான கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்

★ பெண் சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தியபின் கருத்துக் கணிப்பு மற்றும் அரசிற்கு அறிக்கை தாக்கல் செய்தல்

மேற்கண்ட பணிகளைத் தொடக்கி வைக்கும் பொருட்டு சேலம் மாவட்டத்தில் பெண்சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் மற்றும் பேரணி 4.1.2003 அன்று நடந்தது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் கல்வி அமைச்சர் திரு. செ. செம்மலை அவர்களும் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்களும் பங்கேற்று துவக்கி வைத்தனர். இந்த முகாமின் போது மாவட்ட அளவிலான பேரணி, கூட்டம், பணியரங்கு, பேச்சுப்போட்டி, கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலம் பெண்சிசுவதை தடுப்பு பற்றிய பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டன. கீழ்க்கண்ட முக்கிய கருத்துகளை அனைவரும் மனதிற் கொண்டு செயல்பட வேண்டும்.

• பெண்சிசுவதை தடுப்பதற்கு ஏதுவாக பிறப்பு/ இறப்புகள் உரிய முறையில் பதிவு செய்யப்படுகிறதா என்பதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

• தவறுகள் செய்வோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

• பெண்களுக்கென இயற்றப்பட்டுள்ள சட்டங்கள், பெண்களுக்கான சொத்துரிமை, பெண்ணின் திருமண வயது, பெண் உரிமை போன்ற பல்வேறு சட்டங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

• சிசு ஆணா பெண்ணா என்பதை கருவிலேயே கண்டறிந்து தவறாக பயன்படுத்துவோரை தண்டிக்கும் சட்டத்தை (The Pre-natal Diagnostic Technique regulation and prevention of misuse-1994) நன்கு நடைமுறைப்படுத்த வேண்டும்.

• குடும்ப வறுமையின் காரணமாக பெண் குழந்தை வளர்ப்பது பொருளாதார சுமை என்ற எண்ணத்தை போக்கிடும் வகையில் வங்கிகள் மூலமும் சுய உதவிக் குழுக்கள் மூலமும் போதிய நிதி உதவி பெற்று சுயதொழில் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

ஐ.நா. சபையின் குழந்தைகள் வாழ்வுரிமை மீதான நடவடிக்கை சட்டமானது (Convention on the rights of the child 20.11.1989) குழந்தைகளில் ஆண் பெண் என்ற பாகுபாடு களையப்பட்டு கல்வி, உணவு போன்ற பல அடிப்படை வசதிகள் மற்றும் சமஉரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தி கூறுகிறது.

•பெண் சிசுவதை என்ற கொடிய செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால்...

• பெண்களுக்கான சொத்துரிமையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

• வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க மேற்கொள்ளப்படும் தீவிர நடவடிக்கைக்கு சமுதாயம் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்

• சிறு குடும்ப நெறியை ஊக்குவிக்க வேண்டும்.

• வளர்இளம் பெண்கள் தன்னம்பிக்கை வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி மற்றும் தன்னுரிமை மேம்பாடு அடைய ஊக்குவிப்பதோடு உதவி புரிய வேண்டும்.

எனவே பெண்சிசுவதை தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டாலும் சமுதாய அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் அரசுத் துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் இக்கொடிய செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

நாட்டிற்கும் வீட்டிற்கும் விளக்காய் திகழ்பவள் பெண்!
வருங்கால வாரிசை உருவாக்கித் தருபவள் பெண்!
எனவே பிறந்ததிலிருந்து பெண் குழந்தையைப்
பேணிக்காப்போம்! நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை
சேர்ப்போம்!

---

*– திரு. ஜீ. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,*
*திட்ட ஒருங்கிணைப்பாளர்,*
*உலக வங்கி உதவி பெறும்*
*ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்*
*– 3வது திட்டம்.*

• • •

# புதுயுகம் நோக்கித் தமிழகம் - குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க புரட்சிகர நடவடிக்கை

டாக்டர் **மூ. இராசாராம்,** இ.ஆ.ப., - தொழிலாளர் ஆணையர்



எதிர்கால தலைமுறை ஏற்றமுற அமைந்திட நம் நாட்டின் இன்றைய இளம் தலைமுறை குழந்தைச் செல்வங்கள் கல்வி கற்பதும், அறிவாற்றல் பெறுவதும் இன்றியமையாதது ஆகும்.

குழந்தைகள், சீரான எதிர்காலத்திற்கு வலுவான அடித்தளமாகத் திகழக்கூடியவர்கள் ஆவார்கள். இன்றைய குழந்தைகள் நாளைய தலைமுறைகள்.

நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குழந்தைகள் முன்னேற்றம் – குழந்தைகளின் வளர்ச்சி – குழந்தைகளின் கல்வி – குழந்தைகளின் ஆரோக்கியம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு குழந்தைகள் – மகளிர் முன்னேற்றத்திற்காக 18 அம்சத் திட்டம் என்கிற உன்னத திட்டத்தினை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

நாடு போற்றும் நல்ல திட்டமாகிய இந்த 18 அம்ச திட்டத்தில் – 14–வது அம்சம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த வழிவகுப்பது ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களை ஈடேற்றும் தொழிலாளர் நலத்துறையின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் முறைப்படுத்தும் நடவடிக்கைச் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த உலகின் மனிதாபிமானமற்ற பெருந் தீமைகளில் ஒன்று குழந்தைத் தொழிலாளர் முறை. கல்விக்கும், விளையாட்டிற்கும், குதூகலத்திற்குமான குழந்தைப் பருவத்தில் அவர்கள் தொழிற்சாலைகளையும், வணிக நிறுவனங்களையும் நோக்கி அவர்கள் அனுப்பப்படுகின்றனர். நமது நாட்டின் அறிவும்,

வலிமையும் பொருந்திய தலைமுறையாக உருவாக வேண்டிய இலட்சக் கணக்கான குழந்தைகள் கடும் உடல் உழைப்பின் சுமையில் நசுக்கப்படுகின்றனர். இக்குழந்தைகள் உடல் உழைப்பின் நிர்ப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அவர்களது இயல்பான ஆளுமை வளர்ச்சியை உறுதி செய்வது நமது தலையாய கடமை.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழ்நாட்டை சிறந்த மாநிலமாக்குவதற்கான திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது.

1986–ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் அபாயகரமான தொழில்களில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மற்ற அபாயகரமற்ற தொழில்களில் பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் ஒரு மத்திய அரசு சட்டமாகும். தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம் ஆகியவற்றில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.78 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் தொடங்குவதற்காக 1995–ஆம் ஆண்டில் வேலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், கோவை, திருநெல்வேலி, விருதுநகர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகத்தால் குழந்தைத் தொழிலாளர் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேற்கண்ட மாவட்டங்களில் 2,45,796 குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாக அறியப்பட்டது.

இந்திய உச்சநீதிமன்றம் 10.12.96 அன்று வழக்கு எண்.465/86–இல் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் 1997–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் நடத்திய கணக்கெடுப்பின்படி, அபாயகரமான தொழிலில் 10,118 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழிலில் 9,052 குழந்தைகளும் கண்டறியப்பட்டனர். அனைவருக்கும் கல்வி இயக்ககம் (சர்வ சிக்ஷ அபியான்) 2001–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 3.49 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டது. ஆனால், 30.9.2002–இல் பள்ளி செல்லாக் குழந்தைகள் 2.12 இலட்சம் குழந்தைகள் உள்ளனர் என்று அந்த இயக்ககம் தெரிவித்துள்ளது.

தற்போது குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்புத் தொடர்பாகக் கல்வித்துறை மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சட்ட அமலாக்கம்

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல் தொடர்பாகக் கீழ்க்கண்ட நலச்சட்டங்கள் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களால் அமலாக்கப்பட்டு வருகின்றன.

1. குழந்தைத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986

2. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் 1961

3. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் 1966

4. தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம் 1947

5. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் 1958

6. தொழிற்சாலைகள் சட்டம் 1948

இந்தச் சட்டங்களை முறைப்படி நிறைவேற்றி வருவதால்,

1. பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் சிறப்புக் கல்வி பெற வசதி மற்றும் அவர்களுக்கு மதிய உணவு, இலவசச் சீருடைகள், புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், உதவித் தொகை ஆகியவை கிடைக்கின்றன.

2. ஆபத்தான தொழில்களிலிருந்து குழந்தைத் தொழிலாளர்கள் அகற்றப்படுகின்றார்கள்.


மொத்தத்தில் குழந்தைகளின் முழு நலனையும் பாதுகாக்க மாண்புமிகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலுடன் பல்வேறு சிறப்புப் பணிகள் தமிழகத்தில் செவ்வனே நடந்துவருகின்றன.

இந்தப் பணியில் அரசுடன் இணைந்து கீழ்க்கண்ட தொண்டு நிறுவனங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. அவை:

1. அருணோதயா
2. க்ரை (சைல்ட் ரிலீப் அண்ட் யு)
3. சங்கல்ப்
4. டான்பாஸ்கோ அன்பு இல்லம்
5. ஜீவஜோதி
6. கருணாலயா சோசியல் சர்வீஸ்
7. செண்ட்ரீடா
8. அப்டார்ப்
9. ஐ.சி.சி.டபிள்யு.
10. கிராமியக் கல்வி மற்றும் வளர்ச்சி மையம் (Centre for Rural Education and Development)

இவ்வாறாக, குழந்தைத் தொழிலாளர் முறைகள் ஒழித்தல் தொடர்பாக நலச் சட்டங்கள், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களால் அமலாக்கப்பட்டு வருகின்றன.

★ ★ ★



*அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறை உயர் அதிகாரிகள், துறைச் செயலாளர்கள் ஆகியோருடன் நேரடியாகப் பேசி அரசுப் பணிகளைத் துரிதப்படுத்தும் வசதியுடைய வீடியோ கான்பரன்சிங் (**Video Conferencing**) முறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.3.2003 அன்று துவக்கி வைத்தார்.*

# ஃபுளோரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பும், நலவாழ்வும்

உடல் ஆரோக்கியத்திற்கும், நல வாழ்விற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மிகவும் அவசியம். மக்கள் பயன்படுத்தும் குடிநீரில் மாசுப் பொருட்களும் நோய்க் கிருமிகளும் இருக்கக்கூடாது.

நீரைக் கொதிக்க வைப்பதன் மூலமோ அல்லது குளோரின் சேர்ப்பதன் மூலமோ நோய்க்கிருமிகளை முற்றிலும் அழித்து பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெறமுடியும்.

ஆனால் நீரில் இருக்கும் பிற மாசுப் பொருட்கள் பல வகைப்பட்டதாகும். இவற்றால் ஏற்படும் தீங்குகளும் வெவ்வேறு விதமாக இருக்கும்.

நீரில் கரைந்திருக்கும் பொருட்களால் ஏற்படும் உடல் நலக் கேடுகளில் ஃபுளூரைடு உப்பு ஏற்படுத்தும் கேடு முதன்மையானதாகக் கருதப்படுகிறது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

ஃபுளூரைடு என்பது என்ன?

ஃபுளூரின் என்பது இயற்கையாக இருக்கும் 92 தனிமங்களில் ஒன்று ஆகும். ஃபுளூரின் மிகவும் வீரியத்துடன் செயல்படும் தனிமம் ஆகும். இது பிற தனிமங்களுடன் வினைபுரிந்து ஃபுளூரைடு என்ற உப்பு உருவாகிறது. கால்சியம் என்கிற உலோகத்துடன் இணைந்து 'கால்சியம் புளோரப்படைட்டு (**Calcium fluorappatite**)' என்கிற தாதுப் பொருளாக பூமியில் காணப்படுகிறது.

*ஃபுளூரின் என்னும் தனிமத்தைக் கண்டறிந்தவர் பேராசிரியர் ஹென்றி மொய்சன் ஆவார். இவர் இதற்காக நோபெல் பரிசு பெற்றுள்ளார்.*

ஃபுளூரைடு உப்பு சில குறிப்பிட்ட பாறைகளில் அதிக அளவில் காணப்படுகிறது. ஃபுளூரைடு உள்ள தாதுக்கள் அல்லது பாறைகள் இருக்கும் நிலப்பகுதியில் உள்ள நிலத்தடி நீரில் ஃபுளூரைடு கரைவதால் அந்நீரில் ஃபுளூரைடு உப்பு அதிகமாக இருக்கும். எனவே இப்பகுதிகளில் புளோரோசிஸ் எனும் நோயும் அதிகமாகக் காணப்படும்.

குடிநீரில் ஃபுளூரைடு உப்பு அதிகமாக இருப்பது பொதுவாக மாசுபடும் நிகழ்ச்சி அல்ல. இது ஒரு இயற்கை செயல்பாடு ஆகும்.

நீரின் நிறம், மணம், சுவை இவற்றைக் கொண்டு நீரில் ஃபுளூரைடு உப்பு அதிகமாக உள்ளதா என்று கண்டறிய இயலாது. நீரைக் கொதிக்கவைப்பதன் மூலமும் நீரிலிருந்து ஃபுளூரைடு உப்பை அகற்ற முடியாது.

ஃபுளூரைடு கலந்துள்ள நீர் ஆதாரங்கள்

பொதுவாக ஃபுளூரைடு நிலத்தடி நீரிலேயே காணப்படுகிறது.

கால்சியம் (அ) மக்னீசியம் கலந்துள்ள கடின நீர் உள்ள பகுதிகளில் புளோரோசிஸ் நோய் குறைவாக காணப்படுகிறது.

நீரின் காரத்தன்மைக்கும் புளோரோசிஸிற்கும் நேரடி தொடர்பு உண்டு. நீரில் ஃபுளூரைடின் அளவு லிட்டருக்கு 2 மில்லி கிராம் என்கிற அளவை விட அதிகமாக இருப்பின் அந்த நீரில் கடினத்தன்மை குறைவாக இருக்கும். காரத்தன்மை அதிகமாக இருக்கும். இத்தகைய நீரில் உள்ள பைகார்பனேட்டு உப்பின் அளவும் அதிகமாக இருக்கும்.



இயற்கையான நீரில் கார்பனேட்டு மற்றும் பைகார் பனேட்டு உப்புக்கள் அதிகம் இருப்பின், ஃபுளூரைடு கலந்துள்ள கனிமங்களிலிருந்து ஃபுளூரைடு கசிந்து நீரில் அதிகமாகக் கரைந்து காணப்படும்.

திரு. என். வாசுதேவன், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5

திரு. எஸ்.தர்மர், இணைத் தலைமைப் பொறியாளர், திட்டம் மற்றும் வரைவுப் பிரிவு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5

திரு. அ. குலசேகரன், தலைமை நீர் ஆய்வாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5

### உடலில் ஃபுளூரைடு கலந்து செயல்படும் விதம்

நமது உடலில் ஃபுளூரைடு நீர், உணவு, காற்று (தொழிற்சாலை வாயுக்கள்), பற்பசை (ஃபுளூரைடு உள்ள பற்பசை), சில முகப்பூச்சு (அழகு பசைகள்), சில மருந்து பொருள்கள் மூலம் கலக்கிறது.

மனித உடலில் ஃபுளூரைடு விரைவில் உறிஞ்சப்படுகிறது. நீரில் ஃபுளூரைடு முழுவதும் மனித உடலால் கிரகிக்கப்படுகிறது. உணவில் உள்ள ஃபுளூரைடில் 80 சதவிகிதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கால்சியம் அதிகமுள்ள எலும்பு, பல் போன்ற பகுதிகள் அதிக அளவில் ஃபுளூரைடுடன் வினைபுரியும்.

புளோரோசிஸ் நோய் வர மூல காரணம் நீரில் ஃபுளூரைடு கலந்திருப்பதே ஆகும். எனினும் புளோரோசிஸ் நோயின் தன்மை கூடுவதும் குறைவதும் வேறு சில காரணங்களையும் பொறுத்து உள்ளது.

இதற்கு நீரின் காரத்தன்மை, நாம் உட்கொள்ளும் கால்சியத்தின் அளவு, உணவிலுள்ள விட்டமின் 'சி' அளவு, மாலிப்டினத்தின் அளவு, அலுமினியம் மற்றும் பாஸ்பேட்டின் அளவு ஆகியவை மறைமுகக் காரணங்களாக உள்ளன.

கால்சியம் எனும் தனிமம் கால்சியம் பாஸ்பேட்டு (அ) கால்சியம் கார்பனேட்டாக இருப்பின் உடலில் ஃபுளூரைடு உறிஞ்சப்படுவது 50 சதவிகிதம் குறைகிறது. சில உப்புக்களுடன் இணைந்திருக்கும் பொழுது ஃபுளூரைடு கரைதிறன் குறைவாக இருக்கும். எனவே அது மனிதக் கழிவுகள் மூலம் அதிகம் வெளியேறுகிறது.

குடல், கால்சியம், ஃபுளூரைடை அதிகம் உறிஞ்சாது. ஆனால் பாஸ்பேட்டு இருந்தால் அது ஃபுளூரைடு உறிஞ்சும் தன்மையை அதிகரிக்கிறது.

உணவில் உள்ள ஃபுளூரைடு அங்ககப் பொருள்களுடன் இணைந்து காணப்படும். சிலவகை மருந்துகளிலும் ஃபுளூரைடு அதிகம் கலந்திருக்கலாம். இவ்வாறு காணப்படும் ஃபுளூரைடும் மனித உடலில் செயல்பட்டு புளோரோசிஸ் நோய் ஏற்படக் காரணமாக இருக்கலாம்.

ஃபுளூரின் சிறுநீரின் மூலம் வெளியேற்றப்படுகிறது. தோலில் படிகிறது. வியர்வையின் மூலமும் வெளியே வருகிறது. மனிதக் கழிவில் வெளிப்படுகிறது. பெருமளவு ஃபுளூரைடு சிறுநீரின் மூலமும் வெளியேறுகிறது.

### ஃபுளூரைடிற்கு வழிகாட்டி அளவு

இந்திய தர நிர்ணய அளவுப்படி, நீரில் அதிக அளவு அனுமதிக்கக்கூடிய ஃபுளூரைடின் அளவு 1.0 மில்லிகிராம்/லிட்டர் (mg/L) ஆகும். மாற்று நீர் கிடைக்காதபோது, அதிகபட்ச அளவு 1.5 மில்லிகிராம்/லிட்டர்(mg/L) ஃபுளூரைடு இருக்க அனுமதிக்கலாம்.

### புளோரோசிஸ் நோய்

ஃபுளூரைடு அதிகமுள்ள நீரைப் பருகுவதால் கீழ்க்கண்டவாறு மூன்று வித புளோரோசிஸ் நோய் ஏற்படலாம்.

1. பல் புளோரோசிஸ்
2. எலும்பு புளோரோசிஸ்
3. எலும்புசாரா புளோரோசிஸ்

ஊட்டச்சத்து குறைவாக உள்ள மக்கள் ஃபுளூரைடு அதிகமுள்ள நீரைப் பருகுவதால் இந்நோயினால் எளிதாக பாதிக்கப்படலாம்.

### பல் சம்பந்தப்பட்ட புளோரோசிஸ்

கருவிலுள்ள குழந்தையையும் மற்றும் பல் உருவாகும் பருவத்தில் உள்ள குழந்தைகளையும் இந்நோய் பாதிக்கிறது.

குழந்தைகளின் பற்களில் கறை படிதல் புளோரோசிஸ் நோயின் முதல் அறிகுறியாகும்.

கறை படிந்த பற்களில், பற்களின் மேற்பூச்சு சிதையும்; பொலிவிழக்கும்; கடினத் தன்மை பெறும்; எளிதில் சிதையக் கூடியதாகவும், சுண்ணாம்பு போன்றும் மாறும்.

இந்நோயின் பாதிப்பால் முதலில் பற்களில் மஞ்சள் நிறம் உருவாகும். பின் பழுப்பு (காவி) நிறம் தோன்றும். இக்கறைகள் கிடைமட்டக் கோடுகளாக தென்படும்.

இந்த பழுப்புப் படிவம் வட்டப் புள்ளிகளாகவோ, கிடைமட்டக் கோடுகளாகவோ காணப்படும். நோயின் தீவிரம் அதிகம் ஆகும் பொழுது பற்கள் கறுப்பாக மாறும்.

இந்தப் பற்களில் நாளடைவில் நுண்குழிகளும் துளைகளும் ஏற்பட்டு பற்கள் சிதைந்து விடும். பற்களை முழு வளர்ச்சி பெறாமலேயே இழக்க நேரிடும்.



இந்தப் பழுப்பு மற்றும் காவிநிறக் கறை, ஈறுகளை ஒட்டி தோன்றி பற்களின் மேல்பூச்சில் பரவியிருக்கும். இந்த கறைகளை அகற்ற இயலாது. பாதிக்கப்பட்ட பற்களை சரிசெய்ய இயலாது. பால் பற்களும் புதிதாக முளைக்கும் பற்களும் புளோரோசிஸ் நோயினால் பாதிக்கப்படலாம்.

ஒரு நபரின் முதல் பன்னிரண்டு வயதுக்குள் ஃபுளூரைடு பாதிப்பு இல்லை எனில், பல் புளோரோசிஸ் அதன்பின் ஏற்படவாய்ப்பில்லை. வளர்ச்சியடைந்த மனிதனுக்கு, ஃபுளூரைடின் தாக்கத்தால் பற்களில் பாதிப்பு ஏற்படாது. ஆனால் எலும்பு மற்றும் எலும்பு சாரா பகுதிகளில் பாதிப்பு ஏற்படும்.

பல் சொத்தை என்பது பற்களின் மேல் உணவு தங்கி, கிருமிகள் அதைச் சிதைத்து, அமிலம் உண்டாகி, அதனால், பல் சேதம் அடைவதே ஆகும். பற்களின் வேர்களில் பாதிப்பு மற்றும் பல் சொத்தை போன்றவை பற்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாமல் இருப்பதால் ஏற்படுகிறது.

பல் சொத்தைக்கும் புளோரோசிஸ் நோயிற்கும் சம்பந்தம் இல்லை.

எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ்

இந்நோய் வாலிபப் பருவத்தில் உள்ளோரை எளிதில் பாதிக்கிறது. ஃபுளூரைடு அதிகம் உள்ள நீரைத் தொடர்ந்து குடிக்கும்பொழுது நோயின் தாக்கம் அதிகரிக்கிறது. எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ் நோய் எல்லா வயதினரையும் பாதிக்கும்.

இந்நோயின் ஆரம்பக்கட்ட அறிகுறி கழுத்தில் வலி மற்றும் கழுத்துத் தசைகள் இறுக்கமாகுதல், முதுகெலும்பில் வலி, மூட்டுக்களில் வலி போன்றவையாகும்.

கை, கால் அசைவுகள் கஷ்டமாக இருக்கும். நோயின் தன்மை அதிகரிப்பதால் முதுகுத் தண்டும் பாதிக்கப்படுகிறது/முதுகெலும்பும் ஒரு தொடர் எலும்பு போல் மாறிவிடும். இதை போக்கர் முதுகு, **"poker back"** என்று அழைக்கின்றனர்.

முதுகுத் தண்டின் தசைப்பிடிப்பு நார்களுக்கு விறைப்புத் தன்மை ஏற்பட்டு, அதன் விளைவாக விரல் எலும்புகளும் பாதிக்கப்படுகின்றன. இதனால் விரல் அசைவுகள் பாதிக்கப்படுகின்றன. மார்பு எலும்புகள் பாதிக்கப்படுகையில் சுவாசிப்பதும் கஷ்டமாக இருக்கும்.

இடுப்பு மூட்டுக்களும் பாதிக்கப்பட்டு நோயாளிகள் முடக்க நிலையை அடைகின்றனர். புளோரோசிஸ் நோயினால் ஏற்படும் முடக்கத்தினால் மூட்டுக்களில் விறைப்புத் தன்மை ஏற்பட்டு முதுகுத் தண்டு வளைந்து காணப்படும்.

எலும்புகளின் அடர்த்தி அதிகரிக்கும், எடையும் கூடும். எலும்பின் எக்ஸ்–கதிர் படத்தின் மூலம் எலும்பு பாதிக்கப்படுவது தெளிவாகத் தெரியும். அதிக ஃபுளூரைடு உள்ள பகுதிக்கு ஒருவர் புதிதாகக் குடியேறினால் எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ் நோயின் பாதிப்பு சிறிது சிறிதாக ஏற்பட்டு பின் முற்றிய நிலையை அடையலாம்.

எலும்புசாரா பிற உடற்பகுதி புளோரோசிஸ்

எலும்பு சாரா புளோரோசிஸ் நோயை கீழ்க்கண்ட அறிகுறிகளின் மூலம் குறுகிய காலத்திலேயே கண்டறிய முடியும்.

- கழுத்து, பின்புறம், மூட்டு மற்றும் தோள் பட்டைகளில் வலி
- குடல் வாயுக் கோளாறுகள்
- தசை வலி மற்றும் இரத்த சோகை

உடம்பில் கால்சியம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் புளோரோசிஸ் நோயின் பாதிப்பு ஏற்படும். ஃபுளூரைடு சேர்க்கையினால் திசுக்கள், நரம்புகள் மற்றும் இரத்தமும் பாதிக்கப்படலாம். இத்தகைய பாதிப்புக்களை எலும்புசாரா புளோரோசிஸ் என்று அழைக்கிறோம். எலும்பு சாரா புளோரோசிஸ் மூலம் எலும்புக் கூட்டில் ஒட்டியுள்ள தசைகள், இரத்தச் சிவப்பு அணுக்கள், குடல் உறிஞ்சுகள் ஆகியவையும் பாதிக்கப்படும்.

குடலிலுள்ள 'மைக்ரோவில்லி' என்கிற தந்துகி போன்ற உறிஞ்சிகள் அழிவதும் சில சமயங்களில் திசுக்கள் முழுவதும் அவற்றின் தன்மையை இழப்பதும் ஏற்படும்.

எலும்புசாரா புளோரோசிஸ் எல்லா வயதினரையும் பாதிக்கும்.

குடல் வாயுக் கோளாறுகள்:

கடும் வயிற்றுவலி, பேதி, மலம்கட்டுதல், வாயு, ஏப்பம், காய்ச்சல் இருப்பது போன்ற உணர்வு, வாய் துர்நாற்றம், பசியின்மை ஆகியவை ஏற்படும்.

நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள்:

நடுக்கம், சோர்வு, கால் மற்றும் கைவிரல் நுனிகளில் கூச்ச உணர்வு, அதிக தாகம், அதிக அளவு சிறுநீர் வெளியேற்றம் போன்றவை ஏற்படும்.

தசை கோளாறு:

தசை நலிவு, தசை இறுக்கம் மற்றும் வலி.

ஒவ்வாமை கோளாறு:

தோலின் மீது வலியுடன் கூடிய தடிமன் ஏற்படுதல். இது சாதாரணமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும். ஃபுளூரைடு கலக்காத நீரைப் பருகினால், பாதிப்பு பத்து நாட்களில் சரியாகிவிடும்.

சிறுநீர் குழாயில் கோளாறு:

சிறுநீர் வெளியேறும் அளவு குறையும். சிறுநீர் சிவப்பு நிறமாக இருக்கும். சிறுநீர் உறுப்பு பகுதியில் நமைச்சல் இருக்கும்.

இரத்தச் சிவப்பு அணுக்கள் பாதிக்கப்படும். இரத்த சோகை நோய் ஏற்படும். எலும்பின் பிணைப்பு தசை பாதிக்கப்படும்.

இரத்தநாளம்:

கால்சியமும், ஃபுளூரைடும் சேர்ந்த உப்புப் படிவம் கதிர்வீச்சு படத்தில் தெரியும்.

விந்து:

உயிர் அணு குறைந்து மலட்டுத்தன்மை உருவாகும். விந்தில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கை குறைவதோடு விந்து உயிர் தன்மை இல்லாமல் இருக்கும். இரத்தத்தில் 'டெஸ்டோஸ்டெரோன்' என்ற சுரப்பியின் அளவு குறையும்.

கரு:

கருத்தரித்த பெண்கள் அதிக ஃபுளூரைடு உள்ள உணவு உண்பதாலோ நீரைப் பருகுவதாலோ கரு சிதைவுறும். மேலும் பிறக்கும் குழந்தைகளின் மூளைத்திறன் பாதிக்கும்.

மேற்கண்ட அறிகுறிகள் யாவும் மற்ற காரணங்களாலும் ஏற்படலாம். ஃபுளூரைடு குறைவாக உள்ள நீரைத் தொடர்ந்து பருகினால் எலும்பு சாரா புளோரோசிஸ் நோயின் பாதிப்பிலிருந்து சிறிது சிறிதாக விடுபடலாம்.

மூடநம்பிக்கைகள்

கீழ்கண்ட அனுமானங்களின் அடிப்படையில் புளோரோசிஸ் நோய் ஏற்படும் என்று கருத வேண்டாம்.

- கத்தரிக்காய் கடிப்பதன்மூலம்
- பச்சை வாழைக்காய் சாப்பிடுவதன் மூலம்
- பனங்காய், பனை இலை கடிப்பதன் மூலம்
- தென்னை இலை கடிப்பதன் மூலம்

புளோரோசிஸ் நோய் ஒரு தொற்று நோய் அல்ல. கிருமிகளால் பரவும் (infectious) நோயும் அல்ல.

அதிக பாதிப்படையும் மக்கள்

கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி சில வகை மக்களே புளோரோசிஸ் நோயினால் பாதிக்கப்படுவது தெரியவருகிறது.

முதியோர், இதய நோயால் பாதிக்கப்பட்டவர், சிறுநீரக கோளாறு உள்ளவர், ஊட்டச்சத்து குறைவு உள்ளோர் (குறிப்பாக குழந்தைகள்) ஆகியோர் ஃபுளூரைடு அதிகம் கலந்த நீரைப் பருகினால் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.

வெய்யில் பிரதேசங்களில் வாழும் மக்கள் மற்றும் வெய்யிலில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆகியோர் அதிக (ஃபுளூரைடு உள்ள) நீரைப் பருகுவதால் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

சத்துக் குறைந்த (malnourished) குழந்தைகள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் தனிமனித உடற்கூறு, சுரப்பிகள் சுரக்கும் அளவு ஆகியவையும் இந்நோய் தாக்கத்தை அதிகரிக்கிறது. ஃபுளூரைடு காணப்படும் பகுதியில் வாழும் மக்களின் வயது அதிகரிக்க அதிகரிக்க எலும்பு சம்பந்தப்பட்ட புளோரோசிஸ் நோயின் தாக்கம் அதிகமாகும்.

ஃபுளூரைடு அதிகம் காணப்படும் பகுதிகளில் 40 முதல் 50 வயது வரை உள்ள மக்களுக்கு எலும்பு புளோரோசிஸ் ஏற்பட்டு கூன் ஏற்படலாம்.

ஃபுளூரைடு அதிகம் காணப்படும் பகுதிகளில் பெண்களைவிட ஆண்களே அதிகம் பாதிக்கப்படுவர். ஏனெனில் இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள் திருமணத்தின்போது இடம் விட்டு இடம் மாறுவதால் பாதிப்பின்தன்மை மாறும்.

ஃபுளூரைடு தாதுவைப் பயன்படுத்தும் சுரங்கங்களிலும், அலுமினியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு புளோரோசிஸ் நோய் ஏற்படக்கூடும்.

பருகக்கூடிய நீரின் அளவு, காற்றின் வெப்பம், இடத்தின் தீர்க்கரேகை – அட்சரேகை, காற்றின் திசை, கடலுக்கு அருகில் இருத்தல், ஆண்டின் சராசரி வெப்பம் இவற்றைப் பொருத்து ஃபுளூரைடு உட்கொள்ளும் அளவும் அதன் பாதிப்பும் மாறும்.

1. குடிநீரை, சோதனை செய்து ஃபுளூரைடு உள்ளதா என்று அறிய வேண்டும்.
2. ஃபுளூரைடு லிட்டருக்கு 1.5 மில்லி கிராம் என்ற அளவிற்கு மேல் இருப்பின் அந்த நீராதாரத்தில் சிவப்புநிறக் குறியீடு செய்து, அந்த நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது என்று மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
3. லிட்டருக்கு 1.5 மில்லி கிராம் என்ற அளவிற்கு மேல் ஃபுளூரைடு உள்ள நீரைக் குடிப்பதற்கோ, சமைப்பதற்கோ பயன்படுத்தக்கூடாது.
4. ஃபுளூரைடு அதிகமுள்ள உணவைத் தவிர்க்க வேண்டும்.
5. வைட்டசின் 'சி' மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.
6. அதிக அளவு பால் சாப்பிட வேண்டும்.
7. கால்சியம், வைட்டசின் 'சி', வைட்டமின் 'இ', ஆண்டி ஆக்ஸிடெண்டு அதிகமுள்ள உணவை சாப்பிட வேண்டும்.
8. கால்சியம் அதிகமுள்ள காய்கறிகளை சாப்பிட வேண்டும்.
9. ஃபுளூரைடு அதிகமுள்ள பற்பசை, மருந்துகள், அழகு பூச்சுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
10. மழைநீரை சேகரித்துப் பயன்படுத்தலாம்.
11. வெற்றிலை மற்றும் புகையிலையைப் பயன்படுத்து வதைத் தவிர்க்க வேண்டும்.
12. தேநீர் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
13. கருவுற்ற மற்றும் தாய்ப்பால் ஊட்டும் பெண்கள் கட்டாயம் ஃபுளூரைடு இல்லாத நீரையே பருக வேண்டும்.
14. புளோரோசிஸ் நோயின் அறிகுறி தென்பட்டால் ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகி அறிவுரை கேட்க வேண்டும்.

## உணவுப் பழக்கத்தில் மாற்றம்

ஃபுளூரைடு அதிகமுள்ள பகுதி மக்கள் உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் புளோரோசிஸ் நோயைத் தவிர்க்கலாம். கால்சியம், வைட்டமின் சி, வைட்டமின் ஈ, ஆண்டி ஆக்ஸிடெண்டு (Anti oxidant) ஆகியவை அதிகமுள்ள உணவு வகைகளை உட்கொண்டால் புளோரோசிஸ் நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

வைட்டமின் 'சி' அதிகமுள்ள ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி, தானிய வகைகள், தனியா இலை ஆகியவற்றை உட்கொள்ளலாம். கால்சியம் மிகுந்த பால், முருங்கைக்கீரை ஆகியவற்றை அதிகம் உட்கொள்ளலாம்.

ஆண்டி ஆக்ஸிடெண்டு உள்ள உணவு வகைகளான பூண்டு, காரட், இஞ்சி, கொய்யா, பூசணி, வெள்ளை வெங்காயம், இலைகள் உள்ள காய்கறிகள் ஆகியவற்றை அதிகம் உட்கொள்ளலாம். வைட்டமின் 'ஈ' அதிகம் உள்ள உணவு வகைகளையும் உட்கொள்ளலாம்.

## புளோரோசிஸ் நோயிற்கு சிகிச்சை

பற்கள் மற்றும் எலும்புகளைப் பாதிக்கும் புளோரோசிஸ் நோய் நிரந்தரமாக இருக்கும் அதற்கு சிகிச்சை கிடையாது. மருந்துகள் இல்லை. இந்நோயைத் தொடக்கத்திலேயே கண்டறிந்தால் தடுக்க முடியும்.

எலும்பு சாரா புளோரோசிஸ் நோயை ஓரளவிற்கு குணப்படுத்த இயலும். இந்நோய் அறிகுறி அறிந்தவுடன் 10 (அல்லது) 15 நாட்கள் ஃபுளூரைடு இல்லாத நீரை பருகினால் இந்த நோய் நீங்கலாம் அல்லது குறையலாம்.

## புளோரோசிஸைத் தவிர்க்க மாற்றுக் குடிநீர் ஆதாரம் மற்றும் விநியோக முறைகள் மூலம் தீர்வு

1. அருகிலுள்ள வேறு நீர் ஆதாரத்தை நாடுதல் அல்லது ஃபுளூரைடு குறைவாக உள்ள தொலைதூர நீர் ஆதாரத்தைப் பயன்படுத்துதல்.
2. அதிக ஃபுளூரைடு உள்ள நீரை குறைந்த ஃபுளூரைடு உள்ள நீருடன் குறிப்பிட்ட விகிதத்தில் கலத்தல்.
3. மழைநீர் சேகரிப்பு: வீடுகளில் மழை நீரை சேகரித்து நேரடியாகப் பயன்படுத்தலாம். நீராதாரத்திற்கு அருகில் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி நிலத்தடி நீரில் ஃபுளூரைடின் அளவைக் குறைக்கலாம்.

## உலக அளவில்

பல்வேறு நாடுகளில் நிலத்தடி நீரில் ஃபுளூரைடு உப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மெக்சிகோ, அல்ஜீரியா, அர்ஜென்டினா, ஈரான், ஈராக், ஆஸ்திரேலியா, பங்களாதேசம், சீனா, எகிப்து, இந்தியா, ஜப்பான், ஜோர்டான், செனிகல், எத்தியோப்பியா, உகாண்டா, கெனியா, டான்சானியா, லிபியா, மொராக்கோ, நியூசிலாண்டு, பாகிஸ்தான், பாலஸ்தீனம், இலங்கை, சிரியா, தாய்லாந்து, துருக்கி மற்றும் யூஏஇ ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

## இந்தியா

ஃபுளூரைடு உப்பு அதிகம் கலந்துள்ள கனிமங்கள் இந்தியாவில் பல இடங்களில் காணப்படுகிறது. இந்தியாவில் 1937–இல் ஆந்திர மாநிலத்தில் முதல் முதலில் புளோரோசிஸ் நோய் கண்டறியப்பட்டது.

1999–க்குள் இந்தியாவில் 17 மாநிலங்களில் ஃபுளூரைடு அதிகம் கலந்த நிலத்தடி நீர் இருப்பதும் அதனால் மக்கள் புளோரோசிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டது.

இவற்றில் இராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மிக அதிகமாக ஃபுளூரைடு நோய் பாதிப்பு உள்ளது. எனினும் இந்நோயின் தீவிரம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிக்கையின்படி உலக அளவில் ஃபுளூரைடு பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் 20 சதவிகிதம் இந்தியாவில் உள்ளன. சுமார் 6.6 கோடி மக்கள் இந்நோயால் அவதிப்படுகின்றனர்.

நிலத்தடி நீரையே குடிநீருக்காக நம்பியிருக்கும் கிராமப்புற மக்களே இந்நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு

தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களில் உள்ள சுமார் 212 ஊராட்சி ஒன்றியங்களில் ஃபுளூரைடு அதிகம் கலந்த நீராதாரங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஃபுளூரைடு அதிக அளவாக 9.0 மி.கி./லி இருப்பது தெரிய வந்துள்ளது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நீரின் தரம் பற்றி நடத்திய ஆய்வு

2001–2002ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கைப்பம்புகளிலிருந்தும் பெறப்பட்ட நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

மொத்தம் 1,49,457 நீர் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் கிடைத்த புள்ளி விவரங்கள்படி தருமபுரி, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஃபுளூரைடு கலந்துள்ள நீர் ஆதாரங்கள் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் மிக அதிக அளவாக 9.0 மிகி/லி ஃபுளூரைடு பதிவாகியுள்ளது. சேலம், தருமபுரி, விருதுநகர் மாவட்டங்களில் 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட நீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் இயங்கி வரும் பரிசோதனைக் கூடங்கள்

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நீரைப் பரிசோதனை செய்யும் பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இப்பரிசோதனைக் கூடங்கள் நீரின் பௌதிக, இரசாயன, நுண்ணுயிர்த்தன்மைகளை முறையாகப் பரிசோதனை செய்து கொடுக்கும், ஃபுளூரைடு உப்பும் சோதித்துக் கொடுக்கப்படும்.

### நீர் பரிசோதிப்பதற்கான கட்டணங்கள்

பௌதிக, இரசாயன சோதனை –
1 நீர் மாதிரிக்கு ரூ.250/–

நோய்க்கிருமி பரிசோதனைக்கு –
1 நீர் மாதிரிக்கு ரூ.100/–

ஃபுளூரைடு உப்பு மட்டும் சோதிக்க –
1 நீர் மாதிரிக்கு ரூ.5/–

பிளீச்சிங் தூளின் திறன் அறிய –
1 நீர் மாதிரிக்கு ரூ.10/–

### நீர் மாதிரி சேகரிக்கும் முறை

ஃபுளூரைடு உப்பு சோதனை செய்ய 250 மி.லி. (மில்லிலிட்டர்) கொள்ளளவுள்ள வெள்ளை நிற பாலிதீன் பாட்டில்கள் உகந்ததாக இருக்கும்.

தூய்மையான பாட்டில் ஒன்றினை எடுத்துக் கொண்டு சோதிக்கவிருக்கும் நீரை 2 அல்லது 3 முறை சேகரித்து பாட்டிலை நன்கு குலுக்கி நீரை வெளியே ஊற்றி விட வேண்டும். பின் சோதனை நீரை, பாட்டிலில் வெற்றிடமில்லாமல் முழுவதுமாகப் பிடிக்க வேண்டும்.

பாட்டிலின் மீது நீர் எடுக்கப்பட்ட நீராதாரத்தின் முழு விவரங்களுடன், சேகரிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் எழுதப்பட்ட தாளை ஒட்ட வேண்டும்.

இந்த நீர் மாதிரியை, 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள பரிசோதனைக் கூடத்திற்குச் சென்று, சோதனைக்காகக் கொடுக்க வேண்டும்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் புளோரோசிஸ் நோயைக் கட்டுப்படுத்த செயல்படுத்தியுள்ள நீர் வழங்கு திட்டங்கள்

1985–89 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பின் உதவியுடனான (EEC) திட்டங்களின் மூலம் கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 181 குடியிருப்புகளுக்கு ஃபுளூரைடு கலக்காத பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உலகவங்கி உதவியுடன், கோவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 198 வழியோரக் குடியிருப்புகளுக்கு ஃபுளூரைடு கலக்காத குடிநீர் வழங்கப்பட்டது.

தற்போது "ராஜீவ்காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்" மூலம் 1994–இல் கண்டறியப்பட்ட, 9 மாவட்டங்களில் உள்ள 3,555 ஃபுளூரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் சுமார் 3,000 குடியிருப்புகளுக்கு ஃபுளூரைடு கலக்காத குடிநீர், பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2001–2002இல் நடத்தப்பட்ட நீரின் தர ஆய்வில் 22 மாவட்டங்களில், புதிதாகக் கண்டறியப்பட்ட 3,088 ஃபுளூரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கும் கூட்டுக்குடிநீர் மற்றும் தனித்திட்டங்கள் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இதுவரை சுமார் 500 குடியிருப்புகளுக்கு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மேலும், திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் நீரிலிருந்து ஃபுளூரைடு உப்பை அகற்றும் "மாதிரி சுத்திகரிப்புத் திட்டங்கள்" பரிசோதனை அளவில் செயல்படுத்தப்படுகின்றன.

### விழிப்புணர்வு மற்றும் புளோரோசிஸ் பற்றிய நலக் கல்வி

ஃபுளூரைடு கலந்துள்ள நீரினைப் பருகுவதால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை பெரிய அளவில் நலக்கல்வி மூலம் பலதரப்பட்ட மக்களிடையே ஏற்படுத்த வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் மாநில அளவில் "பலதுறை புளோரோசிஸ் தடுப்புக் குழு" ஒன்று தமிழக அரசின் நகராட்சி நிர்வாகச் செயலர் அவர்களின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புளோரோசிஸ் நோயைக் கண்டறிந்து கட்டுப்படுத்தும் வகையில், பொது சுகாதாரத்துறை, பல் மருத்துவத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, பெண்கள் முன்னேற்றக் கழகம், காந்தி கிராமியப் பல்கலைக்கழகம் போன்ற பலதுறைகளின் கூட்டு முயற்சியோடு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பெண்கள் சுயஉதவிக் குழுக்கள், ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள், அரசுசாரா குழுக்கள் போன்றவர்களுக்கு புளோரோசிஸ் பற்றி பெரிய அளவில் நலக்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் திரை அரங்குகள் ஆகியவை புளோரோசிஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு மக்களைச் சென்றடைய பயன்படுத்தப்படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில், பொதுமக்கள் தரமான நீர் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தங்கள் வீடுகளில் உள்ள கிணறு மற்றும் ஆழ்துளைக் குழாய்க் கிணறு ஆகியவற்றின் நீரின் தரத்தினைப் பரிசோதித்து அதன் அடிப்படையிலேயே பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும், ஃபுளூரைடு மற்றும் நீரின் தரமின்மையால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து காக்க, "முன்னெச்சரிக்கை நடவடிக்கையே" சிறந்ததாகும். நீரின் தரப் பரிசோதனையும், அதன் மூலம் செய்யப்படும் தடுப்பு நடவடிக்கைகளும் அனைத்து மக்களுக்கும் மற்றும் அவர்தம் குழந்தைகளுக்கும் நோயற்ற, மகிழ்வான வாழ்க்கையினை பல்லாண்டு வழங்கிட வழிவகுக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ச. நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி: 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

9 மாத சந்தா செலுத்துவீர்!

# 10 வது மாத சந்தா இலவசம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | . அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.



Visit us at: www.cooptex.com    Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**


தமிழரசு